Covindapoullé, *id.*
Arounassaladessigar de Pondichéry.
Sandirassêgarayer, *id.*
Ramassamyvattiar, *id.*
Coumâralingavattiar, *id.*
Patchéapamodéliar, *id.*
Gnanadicassamymodéliar, maître d'étude du petit sém., *id.*
Rattinassamychettiar (D.), de Pondichéry.
Tangaprégassamodéliar, maître d'école, *id.*
Daïrianadamodéliar, *id.*
Antonyvattiar, maître au petit séminaire, *id.*
Appacannounavalar, auteur de la tragédie de Ste-Barbe, etc.
Coujondessamymodéliar (Tirou), de Pondichéry.
Mariadassoupoullé, petit-fils du poëte Saminadapoullé.
Soupparayavattiar, de Pattampaccam.
Magalingavattiar, chanteur de Vareganéry.
Samyayer, chanteur de Namaccal.
Akim Abdoullatif saheb de Pondichéry.
Couppou (P.), desservante de la pagode à Mayavaram et poëte.

Mentions honorables faites sur le poëte Savarayalounaïker dans divers journaux.

Moniteur officiel de Pondichéry, des 31 août 1860, n° 549; 14 juin 1861, n° 590; 9 octobre 1863, n° 712; 2 février 1866, n° 832; 22 juillet 1870, n° 1062.

Revue du monde colonial, imprimé à Paris, 12 décembre 1863; p. 881 :

Journal tamoul intitulé *Dinavartamany*, imprimé à Madras, 24 janvier 1861, n° 277 :

Journal catholique, publié en tamoul par la Mission de Rayapourom à Madras, 1er mai 1870, n° 13; p. 57.

பாகூர்

கல்லறைக்கல்லிலிசைத்த

பாடல்.

நலந்திகழ் துய்க்காம்பேரா யிரத்தெண்ணூற்று நாற்பத்
துநாலாமாண்டாஞ் சூன்மாதம்
பலந்திகழே ழாந்தேதி செய்கான்புண்ய பவுத்ரியுமாய்ச்
சஞ்சீவி சர்வம்மாளின்
குலந்திகழுஞ் சுபுத்ரியுமாய் வருந்தா யம்மாள் குலவிட
நல்லறையெனுங் கல் லறையிங்கீந்தான்
தலந்திகழும் பாகூரி லிதனாலன்றே சவராயலுக்கோவில்
சமைப்பித்தானே.

கடவுள் துணை.

புதுவை வித்துவான்

ம. ரா. ரா.

செ. சவராயலு நாயகர்பேரில்

வித்துவான்கள் கூறிய

பாடல்கள்.

திரிசிரபுரம் மகாவித்துவான்

ம. ரா. ரா. பிள்ளையவர்கள்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

இயற்றியது.

பார் பூத்தபெரும் புகழ்சால்குணச் சவராயலு மகிபன்பளகுதீரச்.............*
சீர் பூத்த தமிழ்ப்பிரசங்கம் புரியு மனையபெருந்திறமென்சொல்கேன்..........*
ஏர்பூத்த பூமுடியோனே சிரகம்பிதஞ்செய்வானெண்ணு மஞ்சுந் ...,.....*
தார் பூத்த முடியுடை மற்றையரது மாறுதுசெய்வான்றலைப்பட்டாரோ........(௧)

சொன்னயமும் பொருணயமு மணிநயமும் பணிநயமுஞ்சொல்லாமற்றைப்.*
பன்னயமும் வெளிப்படுத்தி நீ செய்பிரசங்க நயப்பயன் பாராட்ட.....,....,...*
என்னயமு முணர்ந்தேமா வொரோவொன்றேசிறிதுணர்ந்தேமெல்லாம்வல்லார்
தன்னயமாக்கொளுஞ்சவாராயலு சுகுணபுனிதாநீசாற்றுவாயே.............(௨)

அரிய நூலிடைக் கற்றோ ரவருளும் பன்னூல்களு நன்கமையத் தேர்ந்தோர்..*
அரியாரவருளுங் கவிசெய்பவராரிய ரவருளு மின்பமையச்செய்வோர்..........*
அரியாரவருளும் பிரசங்கம் புரிவோ ரவருளு நல்லமைதிவாய்ந்தோர்..........*
அரியரொலா மமைந்த சவராயலு வள்ளானினை யொப்பாவார்யாரோ........(௩)

பூவின்பாலுயர்புதுவைவருசெயகா னினிதளித்த புதல்வன்மேலோர்........*
பாவின்பாலுலவு சவராயலு பூபதி நயமே பயின்றதாய.....................*
நாவின்பாலெழுபிரசங்கங் கேட்டோர் பிறிதொன்றை நாடுவாரோ ....*
ஆவின்பால் விரும்புனர் காராட்டின்பால் விரும்பினு மிவ்வுலகத்தோரே...(௪)

தேனுலும்பொழிற் புதுவைவளர் சவராயலு வள்ளல் சிறந்துளோனே........
யானுலும் பொறுமையுள னென்றனின்மேம்படப் புரிந்தவறத்தை யோர்கான்..
மீனுலுங் கடலுலகில் விரித்தில னேதினனென்றே விளம்புவீரேற்......
மூனுலு மறைமுனுணர்ந்தவன்போல வெவர் சிறந்தார் சாற்றுவீரே........(ரு)

ஒளிகிளர் விண்மதிதால மாசுறுந்தேய்தரும் போகிக்குணவாமாயுந்.........
தெளிகிளர்வன் புதுவைநகர் வருசவராயலு மகிபாசிறந்ததாநின்..........
னளிகிளர்தன் மதியோ சூக்கும மகளங்கந் தேயாதமையோகிக்காந்........
துளிகிளர்நல்லுணவோங்குமெனு நிகருமொருதேத்தாள் சுமத்தலானே...(சா)

வாயாரப்புண்ணியனைப்புகழ்தரிற் புண்ணியமுடனே வருமாலென்று.........
தூயார்செப்புவர் புதுவைவரு சவராயலு புனித சுகுண யோக..............
நேயாமற்றதுதுணிந்து பாவலர் பல்லோர் கவியானினைப்புகழ்ந்தா..........
ரோயார் பற்பலர் தமைப்பாடிடச்சிறந்தாரொனிலச்சொலுண்மைதானே .....(எ)

ஆடுகொடிமணி மாடவளப் புதுவைவளர் சவராயலுபூபாவிந்...............
நீடுலகினின் கல்விபோனிறைவான்மதியென்று நிரம்பிப்பார்க்குஞ்..........
சூடுபுகழ் நின்கைபோற் பொழிந்திடுவான் முகிலென்றுஞ் சொரிந்துபார்க்கு..
மீடுசரியர்காது தேயும் விளர்த்திடு மவையாதியற்றுந்தானே..............(அ)

பராவிய புண்ணியத்தாலே பராபரன்பேரருள்பெற்றுப் பகருமற்றுற்.........
புராதன வான்புலவர் புரிதுதிபெற்றுயதனாலே புணரிசூழ்ந்த..............
தராதல மன்னவர் செய்சிறப்பும்பெற்றுய் நீடூழிதழைவாய் சீர்த்தி...........
விராவுபுதுவைச் சவராயலுநாயகா வினுமென்வேண்டுநிற்கே...........(கூ)

விண்மணிநேர் வண்மணி பூவேந்தரிருகண்மணி நூல் விளங்கக்கற்றே.....
ருண்மணிவெண்மணிச் சிந்தாமணிதம்பி மகிபாலனுவந்தந்நாணின்........
பண்மணிவாசகம்பொருடோர்ந்தெழுதெழுத்தா முளையிந்நாட்பாந்துசான்றே..
ரொண்மணியாகிய சவராயலு புனிதர்தழைந்த தெங்களிரும் பாவாயே.....(௰)

மன்னியவெண்மணித் தம்பிமணி சவராயலுமணிக்கு மகிழ்ந்தந்நாட்செய்..
துன்னியசில்லெழுத்து மொழியாலந்த மணிபுலவர் தொக்குப்பல்பாப்........
பன்னியமேம்பட்டத்தனுற் பாரீரத்தம்பிபாற் சென்றுங்கண்................
முன்னியவல்லமை தெரித்தொன்றேய் திடினீர்யாவருக்கு முதலாவீரே....(௰க)

வே று.

அளங்கூராழிவெண்முத்து மஞ்செந்துகிருமலேயெறிய......................
விளங்கூர்புகழொண்பிரதாபம் வெளிப்பட்டெனப் பொலிபுதுவை...........
வளங்கூர் சவராயலு வெனுங்கண்மணியே நின்னையெஞ்ஞான்று............
முளங்கூர் தரக்கண்டுவந்திருப்பேனுனக்கு மாற்றமொன்றுளதே...... (௰உ)

வே று.

தறையாத வனைநிகரும் விளக்கமு மெய்க்கலையுணர்ச்சிதவாதமாண்புங்....
குறையாத பெருந்திருவுந் தண்ணளியுமறுத பெருங்கொடையுமன்பு.........
மிறையாத பெரும்புகழு மொருசோவாய்ந்து கதித்தெந்தஞான்றுங்.........
குறையாத வளப்புதுவைவளர் சவராயலு மகிபன் குலவிக்காண்க......(௰ரு)

நல்லகுணம்பொறை யடக்கஞானமிவை யருவென்பார் நாணுக்கொள்ளச்...
சொல்லநிறையவையெலா மோருருவங்கொண்டன்ன தோற்றமிக்கான்.......
வெல்லவல்ல மதியமைச்சிற்பகைமுழுதுந் தபச்சூழும் வினையின்வல்லோன்.
வல்லபுகழ் வளர்புதுவைவாழ் சவராயலு சிந்தாமணி யீதோர்க.........(௰௪)

கலையுணர் வண்புலவர்பெறு கற்பகமே பொற்பகலாக்காமர்வாழ்வே........
நிலையுணர் மெஞ்ஞானியர் வாயாசிபூண்டொளிர் சங்கநிதியேயென்கா.........
தலையுணர் சிந்தாமணியே தமிழருமை யறிமுகிலே தாவாவின்ப..........
மலையுணர் நன்புகழப் புதுவைவரு சவராயலு சுகுணவள நல்லோயே..(௰௫)

வே று.

ஒன்றுந்தருமக் குரியவரா யைம்பொறியும்.........................
வென்றுந் தருண்மதியின் மேலாவ-ரொன்று...........................
நவராயலுத்தசத்தி நண்ணுவார் மேன்மைச்........................
சவராய லுத்தலைச்சார்ந்தார்.................................(௰௬)

வே று.

உளமார் பெருங்கல்வியுஞ் செல்வமு மூக்கப்பாடுங்....................
களமார் மனமில்லவராசிக்கலப்புந் தேவன்..........................
றளமாரடித்தாமரைக்கன்புந் தழைத்துமல்கி.........................
வளமார் சவராயலு கண்மணி வாழ்க வாழ்க.......................(௰௭)

திருவாவடுதுறை

ம. ரா. ரா. ஒப்பிலாமணி தேசிகரவர்கள்

இயற்றியது.

வசையில்வளம் பொலி புதுவை வளர்சவராயலு மகிபன்வயங்
குபாவு, மிசையில்பிறர்பாவுமொப்பென்பேன்பொன்னோ டிரும்பு
மிணையென்பாயென்னிற், றிசைபுகழ் கண்காது வாய் நாசி பதமு
தலுறுப்புச் சிறந்துளாரு, மசையுமவையில்லாருமக்க ளென்று
தென்னுமைப்பீரகிலத்தோரே. (௧)

ஷை ம. ரா. ரா. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கரு
ளொருவரும் தமிழில் சூதசங்கிதைகுசேலோபாக்யான முதலிய
வை செய்தவருமாகிய.

ம. ரா. ரா. வல்லூர் தேவராஜபிள்ளையவர்கள்

இயற்றியது.

முன்னோர்த மிலக்கியமோ விலக்கணமோ விதி விலக்கு முறை
யோ நீதி, மன்னோர் மன்னுறக் கடவுளியற்றிரண்டா மறையோவெ
ன் வழுத்துகேன்வான், மின்னோர்பைம்பொழிற்புதுவை வளர்
சவராயலுமகிபா மிகுநின்பாட்டா, லென்னோர்தாருமெலாமோர்வ
தற்குத்தடையமைதியெய்தார்யாரோ.....................(௧)

வே று .

காவலருந்தவருவ வேள்கனன்று வருங்குறைமதியுங்காயுமென்று, விரவலருந்தவருவ தெப்போது மயலாற்றும் வகை வேறுகாணேன், பரவலருந்தவருவமை நுதலார் கூறுவர் சிறப்புப்பாராரோடு, புரவலருந்தவருவக்கப்புரி சவாரயலு மால்பாற்போய்வா மின்னே..(௨)

எதுலக்கந்தா முரிவில் கோட்டியெய்யும் வேள்கடலோ விளையாநிற்கும், மோதுலக்கந்தாமுழுமா மலையக்கால் கொடிதிவைசெய்மூரண்மற்றியாவும், மாதுலக்கந்தரமு கமனேடு சொற்றுளெனப்புதுவைவளருமேலோன், ஆதுலக்கந்தாமுகக்குங்கடல் சவாரயலு மகிபற்கறைதிமானே..(௩)

வே று .

சங்கம்பங்க முறப்பஞ்ச தருக்கண் மகவான்புரமேறத், தங்கச்சிலை கைச்சிலையாகித்தயங்கிக் குழையப் பசுநிறச்சூன், மங்குல்வளையின் முழைபுகுத வயங்குபுரவுத் தொழில் பூண்ட, செங்கைச் சவாரயலு சுகுண செல்வனிதனை நோக்குகவே..............(௪)

வே று .

சீர்மலியுலகம் படைத்தளித்தழிக்குந் தேவநித்திய நிராகாரன், ஏர்மலி தூய பத்தியே புரிவோனிலகு மெய்ம்மொழி பொலிநாவன், தார்மலி புயத்தன் கலையொருங்குணர்ந்தோன் றகுபுகழ்பெறு சவாரயற், பேர்மலி நல்லோனிச்சிறு கடிதம்பெட்பினிறேக்குகமாதோ..(௫)

தந்தைநற்சுதன் றூயாவியே யென்னச் சத்தியமறை யெடுத்துரைக்கு, மந்தமிறிரியேகப் பெருந்தேவனும் யெகோவாவினை யகத்திற், சந்ததமற்பிற் பாவுறுதாசன்றனையெலாம் புகழ்தருசுகுணன், முந்துசீர்ச் சவாரயலு வெனுங்கோமான் முன்னுமிக்கடிதநோக்குகவே..(௬)

ஒருவடிவாயு மூவடிவாயு மொளிர்பான்பெரும்புகழ் விளக்கத், திருவடி வெடுத்த தன்பெனக்கவிஞர் செப்புறத்தகுகுணமேரு, தருகவென்றிரந்தார்க் காசையோடுவந்து தருவென வழங்குறு கொண்டன், மருமலி சவாரயலுவெனுஞ்சுகுண மன்னனிக் கடிதநோக்குகவே..(௭)

உலகெலாம்படைத்துக்காத்தருள் பாமனுவப்புறவிதையமாமலரி, லலகிலாவன்பி னிரந்தாம் பழிச்சு மருங்குணுகானிரவலரா, நலமிகு பைங்கூழ் செழிப்புறச்சொன்ன நன் மழை பொழிதரு கொண்டல், நிலமகிழ் சவாரயலுவெனும் புனித நிருப னின்னிருப நோக்குகவே..(௮)

மாசிலாக்கன்னிபாலுலகளிக்க வந்தவதரித்தொருதூய, வேசு நாமங்கொளிறையடிமலர்க்கேயின்னருவசும் பலாணியுந், தாசனு வலர் நாயகன் முகிஞணத்தருங்கரதலன் சவராயல், வாசவனிந்தக் கடிதத்தை யன்பான் மலர்விழிகொண்டு நோக்குகவே.......(௯)

வே று.

சீர்மலிந்த திரியேக தேவனைச் சிந்தையிற்றினமும் பரவன்பின ன், பார்மலிந்தபுகழ்ப் புதுவைப்பெரும் பதிவிளங்க வுதித்தருள் புண்ணியன், தார்மலிந்த புயாசலன் றண்டமிழ்ச் சலதிக்கொப்பி ற மிழ்முனியாயினேன், கார்மலிந்த கரன் சவராயலு கன்னன்கா ண்கக் களித்திக்கடிதமே ....(ய)

திரிசிரபுரம் கலெக்டர்

ம.ரா. ரா. சோவல அப்பாசாமிமுதலியாரவர்கள்

இயற்றியது.

பார்வளருங் கௌரிகுலராயலென்பான் பயந்தமுத்து நாயகன் செய்தவத்தில் வந்த, சீர்வளருஞ் செயகானின் புதல்வனன செல் வசவராயலு நாவலவன்பெற்ற, பேர்வளரு நேய செயராயலுக்கு ம் பிரியகுணமேவு சந்தபாரம்மாட்கும், ஏர்வளருந் தெரசம்மாளெ னும் பிள்ளைக்கு மேக பானருள் பெருகவென்றுமாதோ.....(க)

நீதிநூல் பெண்மதிமாலை முதலியவைசெய்த மாயூரமுன்சீப்

ம. ரா. ரா. ச. வேதநாயகம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

ஏர்கொள் சவராயலு நாயகதீரா வாயிர நாவிருந்துஞ் சேடன், ஓர் கவியுஞ்செய்திலன் பல்கவிகள் செய்தாயவன்முழ்ந்தானுயர்ந்தா ய் நீயே, சீர்சுமந்தாய் பார்சுமந்தான் கேள்வியுற்று யவன்கேளாச் செவிடனுனன், ஆர்விடவாக்கினனவனீ யமுதவாக்கின னுனைத் தானவ னெவ்வானே ....(க)

அகத்தியனைக்கண்ட தாரவன் பாட்டைக்கேட்ட தாராழிமுற்றுஞ், சகத்திலுண்டானெனினுஞ் சவராயலு நாயகநின் பாச்சலதி பொ ங்கி, யிகத்துலகை வளைத்ததுண்ணமுடியாது தனைவிழுங்கு மெ னமேலோடி, நகத்தொளித்துப்பெரும் பயத்தாற் குறுகினனெனி லினி யாநவில்வதென்னே..............................(உ)

சாதிநாயகனன சவராயலுத்தமனே சவரியாரொன், சோதிநாயக னும நீதரித்தாய் மீனட்சி சுந்தரப்பேர், நீதிநாயகனன்றேநினக்கா

சானுலக மெலா நியமித்தாளு, மாதிநாயகனை மேனீபாடி லுன் கவியை யார்மெச்சாரே.................................(௩)

கலையழகையுணர் சவராயலு நாயகா மரியகன்னித்தாயின், றலை யழகை மீன்காட்டுந் தாளழகைச் சசிகாட்டுந் தங்கமேனி, மலைய ழகைக்கதிர்காட்டுங்குணவழகை மறைகாட்டு மாண்பாலத்தாய், நி லையழகைப்பலகவியா னீகாட்டலதிசயமோ நிலத்திற்றனே..(௪)

எண்ணெடுத்த சகத்திரநாவிருந்துமே பாடியுய்ய வேதுவின்றி, மண்ணெடுத்துக் கல்லெடுத்து மரமெடுத்து நாளுமுயிர்வாழுஞ் சேட, விண்ணெடுத்த புகழ்கொள் சவராயலுநாயகன் கவிவேலைக் குணீயோர், பண்ணெடுத்துப்பாடினிதிப் பெண்ணடிக்கு மண் ணெடுக்கும்பழியும் போமே.................................(௫)

மதிகொள் சவராயலுநாயகதிரா மரியனைக்குமகிழ்ந்து நீ செய், துதிகவியைத் துதிப்பதற்காயிரங்கவிகள்வேண்டும்வளஞ்சூழும் பல்லூர்க், கதிபதிநாநமக்கிங்கோபலவேலையாறுகவிக்கதிகம்பாட, விதியிலை யாதலிற் சிறிதும்பெரிதெனக்கொண்டினி நமக்குவிடை யீவாயே.................................(௬)

தேவிபட்டணம் கணக்கி லவதானி

ம. ா. ா. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

பாலோகற் கண்டோ பழமோ வமிர்தினுக்கு.................
மேலோயா தென்று விளம்புகேன்-நூலோர்.................
தவராயலுரு தவிரிற் புதுவைச்.................
சவராயலு பாக்க டாம்.................(க)

ஷ ம. ா. ா. மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் மாணாக்கரு ளொருவரும் சென்னைக்கவர்ன்மெண்டுநார்மல்பாடசாலைத்தமிழ்ப் புலவருமாகிய சோடசாவதானம்

ம. ா. ா. தி. சுப்பராயசெட்டியாரவர்கள்

இயற்றியது.

மைநாடு மலர்ப்பொழில் சூழ் சோணாடு மலைநாடு வளத்தாற்சீர்த்த செய்நாடு தென்னாடு நடுநாடு முளநாடு சிறப்பாலோங்கும், மெய்நாடு தொண்டைநாட்டொளிர்முகமாய்விண்ணாடுமேவுவோர்பார்,வைநாடுமா ண்புளதாம் புதுவைநகர்க் கொருதிலகமாகி வாழ்வோன்..............(க)

இச்சகமொன்றோதிருவை யிரவலர்பார்குடியேற்றியிடரையோட்டி முச்சகமும் புகழ் நிறுவுங் குணமேரு முதுபுலவர் தமக்கெஞ்ஞான்றும் பொச்சமிலோர் கருவூலஞ் செயகான்பூ பதிதவத்தாற் புவனத்தப்பால் நச்சணையகலி யொளிப்பவறன்றோன்றவுடன் றோன்றுநன்மை மிக்கோன்...(௨)

பன்னூலுமொருபொழுதிற் சுவைகனிந்த சொற்பொருளாற் பகரவல்லோன், எந்நூலும் பற்பலர்த மகமுகப்பவெடுத்துரைக்குமெழிற் சீராளன், முன்னூலின் பொருடேர்ந்த மீனாட்சி சுந்தர மூதறிஞன்றன் பால், தொன்னூல்கள் பயின்றவருட் டானொருவனாய்த்துலங் குந்துகளில் சீரான்..(௩)

பொலிவேறு பல்லுலகும் பூத்தருளு மொருமுதலாய்ப்புவனம்யாவும், மலிவேறு மாறருளு மொருநடுவாய் வளிவழங்கு மண்ணும் விண்ணும், நலிவேறுமாற வொருகடையாயிம்முத னடுவீறணுகிலாதாய் வலிவேறு பேரொளியாயுளதெதுவோவதைப்பணியுமுத்தமாங்கன்.(௪)

மண்முதலாம் பூதங்க ளணுத்திரளான்வந்தன வாதினால் வேறோர் எண்முதலாம் பரமுளதோ வெனவுரைப்போர் பொய்மொழிகட் கிடங் கொடாமல், விண்முதலா மெய்ப்பொருட்கு மொருமுசல்வனுள னெனவே விளங்கவோதும், ஒண்முதலா மெபமொழிகள குடியேறவிடங் கொடுக்கு மொளிர்பொற்காதான்...........................(௫)

தெள்ளமுதோ நறும் பாகோ கற்கண்டோ செங்கரும்போ சீனிதானோ, விள்ளமுதத்தீம்பாலோ முக்கனியோ வெனப்பலரும் வியந்தயிர்ப்ப, எள்ளரிய வொருபெரியோ னியம்பிய தேம்பாவணியினிசை தேம்பாவத், தள்ளரிய பிரசங்கத் தேன்வெள்ள முவட்டெடுக்குந் தனிச்செவ்வாயான்...(௬)

எண்ணிய பற்பலரு முவர் நீருலகினிரும் பொறையோ விசையோ வன்றித், தண்ணிய நற்றயையோ யிவ்வடி வெடுத்த தெனவுரைப்ப தயங்குமேலோன், நண்ணிய சீர்க்கிறீஸ்து வின்பாலன் புளோற் பரலோக நணுகுவாரோன், றண்ணியவோர் நெறிதழுவி யந்நெறியோர்க்கணியாய வமைதியுளளோன்...................................(௭)

இணையனை யொழுகு சவராயலு நாயக வலவ னிரு நீர்வைப்பிற்...... றணையனர் மனம்வியப்பத் தன்றிறத்தைப் புலப்படுத்துந் தன்மைபோல, வணையணி சேர்பல செய்யுட்டிரட்டுரைத்தான் மற்றவர்க்குந் தமர்க்குமேவ, அணையதனி னுயர்ந்தோர் தங்கவிப்பலகா லமுழக்கவுத்து நோக்கவன்றே...(௮)

வறியனிரவலர்க்குதவ லொருவியப்போ வசையில் பொருள்வாழ்க்கைமேய, நறியபெருஞ் செல்வருதவுதலோர் வியப்போவிதனை நாடும்வல்லீர், சிறியகவி நூலுதவ லொருவியப்போ தெரிசவராலுப்பேர்ச்செம்மல், அறியவொரு நூலுதவ லொருவியப்போ மெய்ம்மை பெறவறைமினன்றே...(௯)

புத்தமுது திரட்டிவைத்த பொற்கலசமோ நறுந்தேன் பொலியக்கூட்டி, வைத்தசுவைப் பாகுபெய்த மணிச்செப்போ கண்டிநெடு வடித்ததீம்பால், வித்தகமாக்கிய பொற்றட்டோ சவராயலு விரகன் விருப்பிற்சொன்ன, மெய்த்தசைமைப் பொருள்செறிந்தகவித்திறம்யாதென வுணர்ந்து விளம்புகேனே..............,..........(ய)

ஷ ம. ா. ா. மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் மாணாக்க ரொருவரும் கும்பகோணம் பிரவின்சியால் காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய.

ம. ா. ா. தி. தியாகராசசெட்டியாரவர்கள்

இயற்றியது.

இரட்டைமணிமாலை.

தெய்வ வணக்கம்.

எவன்முற் பணிந்தோ ரியற்று தொழின் முற்று.......................
மவன்முற் பணிந்தே யறைவன்-சிவமே.............................
திரட்டைமணிநேர் சவராயலு மால் சீர்கொ..........................
ளிரட்டைமணி மாலை யினிது.......................................

குருவணக்கம்.

மன்னுமறிவானமைந்தோர் கைகுமவைக்கண் ணெனையுந்...........
துன்னுவித்த மீனாட்சி சுந்தரமான்-றன்னை.........................
நினையேனென்னாது நினைப்பே னென்பேனே.........................
லெனையா ரிகழாதாரீங்கு..

நூல்.

பூமேவு சோலைப் புதுவையாம் பொன்னகர்க்கோர்...........
தேமேவு செல்வச் சிந்தாமணியாம்-பாமேவு.................
நற்று ரணிதோட் சவராயலு நற்சீர்..........................
கற்றாரோ யற்றார் கலி...............................(க)

கற்றார்குழுவுளுடு நடுத்திங்கள் கடுப்பவனும்...................
பெற்றார்தவமலைமேற் சுடர்போலப் பிறக்குவனுஞ்.................
செற்றார் நடுங்கியடி வீழப்புன்னகை செய்பவனு....................
மற்றார் முற்றோர் சவராயலுமாலன்றி மாநிலத்தே..............(உ)

மாவார் சவராயலு நாமவள்ளலைவான்..........................
பூவார்சந்தானம் புரையுமாற்-றூவா.............................
மலையென்ப தோன்று முலைமாதே யதன்பா.....................
லிலையென்ப தொன்றுமிலை யேல்.............................(௩)

இல்லாதவரும் பசுந்தேனசும்பு மினியதமிழ்..........
கல்லாதவரு மிலராகத் தோன்றினன் கற்றுணர்ந்த..........
நல்லார்புகழ் சவராயலு வள்ளலின் ஞாலத்தினிப்..........
புல்லாவறுமை மடமைகட்கேது புகலிடமே..........(௪)

புகரில்புவியென்றும் புரப்பதற்குவல்லா..........
னிகரில் சவராயலுப் பேர்நேயன்-பகரி..........
லொருவனெனிற் காருமுண்டென் றேதுவர் மற்றைந்து..........
பருவமுணராரிதுவோ பண்பு..........(௫)

பண்ணேயந்தீந் தமிழ் நூன்முழு தோர்ந்தநற்பாவலர்தங்..........
கண்ணேயன சவராயலு பூபனைக்கண்டவரும்..........
விண்ணேய் தருவை விழைவா ரெனிலங்கை மேவுநற்பா..........
லுண்ணேய மோவிப் புளிங்காடியு முணவுன்னுவரோ..........(௬)

உண்டார்பசிபோற் கெட்டோடும் பரிந்துதனைக்..........
கண்டாரைக்காணுங் கருத்தினன் - விண்டாரைத்..........
தாழ்த்தினனந்தஞ் சவராயலு மால்சீர்..........
வாழத்தினர் வெய்யவறுமை..........(௭)

மையேந்துவாள விழிமாதே பொய்யாது பெய்மா முகிலைக்..........
கையேந்துநஞ் சவராயலு நாமங்கொள் கற்பகத்தி..........
னையேந்து சீர்புகழைவிற்கு மற்றோரமை தருசீர்..........
செய்யேந்து கன்னலுண்ணு விற்குவேம்பு சிவணுறுமே..........(௮)

சிந்தையிலும் வள்ளன்மை சேரார்க்குச் செய்யபுகழ்..........
வந்தணுகு மென்றலிம் மானிலத்திற்-கந்தஞ்..........
செறிதார்ச் சவராயலு மால்சீர் செப்ப..........
வறியாரிடுக்க ணறும்..........(௯)

அற்றோர்க்கருள் சவராயலு நாமவதிப னெல்லாங்..........
கற்றோர்ந்தவனென் றியான் சொலக்கேட்டகவிப்புலவ..........
நற்றோர்முன்னில்லையென் றேதல்கற்றோன் கொலுணர்வுடைமை..........
பெற்றோர்ப்பிரிவுறல் கற்றோன்கொலென்றெதிர்பேசுவரோ..........(௧௦)

பேசிலினிக்கும்புகழே பெற்றசவராயலுமா..........
லேசில்புலவோரெங்கிருந்தாலும்-வீசிடுவன்..........
பொன்னுமணியு மிழும்பூதென்கதிர்கமலந்..........
தென்னூற் றெளிரச்செயும்..........(௧௧)

செய்யுந்தவமுடையார் குறிப்போர்ந்தென்றுஞ் செம்பொன்மழை...
பெய்யுஞ் செங்கைச் சவராயலு பூபனைப் பெற்றுமகிழ்ந..........
துய்யுந் தமிழ்ப்புலவீர் நீவிரோசென் றுனைக்கத்தருங்..........
கொய்யுமலர்த் தருவைச்சார் புலவரோ கூறுமினே..........(௧௨)

கூறுமொழி யைவினுக்குங் கொள்செவிக்கு நன்றோர்ந்து..........
தேறுமனத்திற்கு மின்பஞ் செய்யுஞ்சீர்- நாறுமலர்த்..........

தார்பெற்றார் திண்டோட் சவராயலு மனன்றி............
யார்பெற்றார் தோகா யறை..............................(௧௫)

அறைவார் முற்றோர்ந்தவ ரீத லொன்றே யுள்னம்பொற் செல்வ....
நிறைவார் சவராயலு பூபனென்று நிலவவவ..........................
னறைவார்தரு செந்தமிழ்மாலை யேற்ற னவிற்றுகிலார்.............
மறைவார்மறதி யெலார்க்கும்பொது வென்றல் வாய்மையன்றே..(௧௪)

வாயாறச்செந்தமிழால் வாழ்த்தியுலகினுக்கோர்..............
தாயாகவந்த சவராயலுமா-றாயபுகழ்.............................
பாடினார் முன்னும் படருறு மேற்செங்கதிர்முற்...........
கூடியிருளுமிருக்கும்..(௧௪)

குருவார்சிந்தாமணியோ தேனுவோ குறையா நிதியோ..............
கருவார் தருமுகிலோ புலவோர் செயகவின்றவமோ.................
வுருவார்ந்துயர் சவராயலு நாமமொன்றுற்றதெது..................
மருவார் குழன்மடவா யினிதோர்ந்து வழுத்துகவே...............(௧௫)

வழுத்துசெயகாணும மான்மாதவமே.................................
பழுத்த சவராயலு பூபாலன்-கொழுத்தபுகழ்..........................
பாரொன்றெண்டிக்கும் படர்ந்து நடிக்கும் புலவ..........
ரோரொன்றெண் பாவிலிசைந்து.................................(௧௭)

இசையார்தரு சவராயலு பூபனுமேற்றபெரு...........................
வசையார் தரு மிந்திரனுமொப் பென்பவர் வான்றடவு..............
நசையார் பொன்வெற்பு மணுவுமமுதமு நஞ்சமுமெண்............
டிசையாரென்றாமுங் கச்சொதமு மொப்பென்று செப்புவரோ...(௧௮)

செப்பாரிளமுலையாய் செந்தமிழோர்ந்தாருமவர்............
வைப்பாஞ் சவராயலு மாலு-மொப்பரவர்............................
பாமாரி பெய்வரிவன் பன்னருள் சூற்கொண்டு செம்பொ....
ன்மாரிபெய்வனிதனல்..(௧௯)

ஆதாரஞ் செந்தமிக் காளேன் புதுவைக் கரையன் மலர்த்............
தாதார்தொடையலணி தடந்தோட் சவராயலு மால்...............
கோதார்தராது குடிகொள்பொன்மாட மென்கோகனகப்............
போதாய்ப் பெலிகவெஞ் ஞான்றந் திருவென்னும்பூங்கொடிக்கே(௨௰)

மாமேவு குருமணி குயிற்றியொளிதரு தவளமாடந்தொறுந் தவழும் வெண்-மதியை யன்புறுதங்கண் வதனமென முத்திட்ட மகிழ்நர் தலை சாய்த்து நாணப், பூமேவு திருவனைய மடமகளிர் புரிநகைப் புதுநில வருந்தவந்தப் - பொலிசகோரப்பு ளவர்நகில்கண்டு நாணுறும் புதுவை யம்பதியில்வாழ்வோன், றாமேவு பொறை வாய்மையருளினைய சுகுண மொடு தோன்றினோ னூல்களயாவுந் - துகளற வுணர்ந்தத சவராயலுமகி பனித்தொல்புவிவியப்பவினிய, பாமேவுமதுரம் பழுத்தொழுகு நறிய தேம்பாவணிக்குளாவிருத்துப்- பகரிவன் பெருமையை விரித்துரகவர சனும் பன்னுதற் கரிதரிதரோ........................(௨௫)

வேறு.

மருவிருக்குங் குழன்மடவார் மடலெழுதும் புயசயிலன் மகிழ்ந்து நாளுந், திருவிருக்குஞ் சோலையப்பாசாமி முகிலெழின்மனையிற் சிறப் பக்கூடுங், குருவிருக்குஞ் சபைகளிப்ப வியற்றேம்பாவணிக்கருத்தங் கூறினன்பூந், தருவிருக்கும் பொழிற் புதுவைவளர் சவராயலு மகிபன் றழைப்பமாதோ..(௨௪)

வேறு.

பூமலிகுழலார் மடலெழுதழகன் பொருணயஞ் சொன்னயமார்த்திப் பொற்புறப்பற்பல்கவிபுகல்புலவன் பொழியமுதிசையுணர்மேலோன் தூமலிவாய்மைப் பூம்புனன் முழுகித்துகளிலாப் பொறையுடைபுனைந்து தொன்மையாம் புகழப்பூணணிந்து நாவலர்தந்துதிக்கு நாப்பீடத்தில மர்வோன், தேமலிபொழில்சூழ் குடந்தைமாநகரிற் செழிப்புறவா ழ்ந்திடுசீலன் -திருவெலாமொருங்கு சேர்ந்துறப்பொலிந்து திகழ்துரை சாமிபூபாலன், பாமலிமனையிற் புதுவைவாழ்புலவன் பகர் சவராயலுவ லவன் - பன்னுறு தேம்பாவணிப்பிரசங்கம் பார்புகழ்ந்திடப் புரிந்தன னே..(௨௫)

மதிவளரும்பாத மதிவளரவைத்தோன்...................
துதிவளருஞ் சீர்சான்றதூயன்-கதிவளரப்..................
பாடுகவிப்பாவலன் பன்னுசவராயலுவேள்...................
நாடுகவிப்பாசுரத்தை நன்கு..........................(௨௬)

கூனியலும் பிறைநடுவட் குடிகொண் மனைமலர்நிரதங்கும் பிட்டந்த வானியலு மலர்ப்புகழ்நாத்தழும்ப நனிவழுத்துபுதன்மாட்சி சான்ற தேனியலுந் தமிழ்ப்புலவர் நாத்தழும்பப் புகழ்வளர்க்குஞ் சீலவாரி கானியலும்பொழிற்புதுவைவளர்சவராயலுமகிபன்களித்துநோக்க.(௨௭)

மன்னுஞ்சிநேகப் பயிர்வளர்க்குமாமாரி...................
என்னுஞ் சவராயலுவேந்தன் — முன்னுக...................
விக்கடித நன்குசெலு மின்பமவனுக்கீயுந்...................
தக்கபதிலுந் தரும்..........................(௨௮)

சீர்மலிநற் சோலை யப்பாசாமிமால்புகழ்நூலிற் றெரிந்து கோத்த வேர்மலிசெந்தமிழிரட்டைமணிமாலைதனைமதிக்குமியல் பின்மிக்கோன் கார்மலிசெங் காதலத்தா னற்குணங்கட் கீன்றதாய் கடுக்குஞ்சீரான் தார்மலியின் பொடுசவராயலு மகிபனிக்கடிதநன்குகாண்க.....(௨௯)

வல்லார் பலர்புகழ்ந்து வாழ்த்தப்புதுவை வதி...................
நல்லான் சவராயலு நாமன் — கல்லா...................
மடமைமருவான் மருவான் சிறிது...................
மிடரையிஃதோர்வா னியைந்து..........................௩௰

தண்ணுணர்வுடையோ ரொடுமரீஇயின்பநுகர்வுறுதன்மையிவ்வுலகில் விண்ணுல கொக்கும் விழைவினதென்று மேலையோருரைத்ததன்கா

ட்டா, யண்ணுமாபுகழ்போர்த்தாய்ந்த நண்ணுணர்வினமைந்தடைந்த வர்க்கெலாமின்ப, நண்ணுறப்புதுவை யமர்தருசவராயலுவெனு நாம வேள்காண்க ....(௬௧)

வேறு.

சீர்வளருஞ் செயகானுமப்பேர்வள்ளல் செய்தவத்தால் நன்குதித்து ச்சீரிருந்துங்கல்வி, ஏர்வளருங்கனதன நற்குணமுஞ்சார்ந்திங்கிலங்கு சவராயலெனுமதனவேட்குத், தார்வளருங்குழன்மடவீரமலன்றன்னைத்தனை யனுவின்றமரிமாதுதண்ணூர், நார்வளருங்கமலமலரடியைப்போற்றிநல் லன்புகொண்டு நலங்கிடுவீர்மாதோ ....(௬௨)

நலந்திகழுஞ் சின்னையவேள் சந்திரம்மா ணற்றவத்திலினிதுதித்து நயமார்ந்தோங்கும்; குலந்திகழுங்கற்புமுதற்குணங்கள்வாய்ந்துகுலவுமெழிலிராதியெனும் ராசம்மாட்குப், பலந்திகழு மரியம்மாள் சுதனையீந்தபரன்கமலமலரடியைப் பணிந்துபோற்றிக், கலந்திகழு மெழின்மடவீருவந்துகூடிக்கலந்துமுகமலர்ந்து நலங்கிடுவீர்மாதோ............(௬௩)

சீராருங்கல்விநலஞ் சிறந்த சவராயலுக்குங் ....
கூராரும்வேற்கருங்கட்கோல விராசம்மாட்கும் ....
ஏராருமரிசுதன்ற னிணைக்கமலப்பதம் போற்றித்...........
தாராருங்குழன்மடவீர் சார்ந்துநலங்கிணையிடுவீர்.........(௬௪)

பதம்.

இராகம் சாவேரி தாளம் ரூபகம்.

அலங்காரமெய்மடவீர் நலப்புனைந்தே நலங்கிடுவீர் நல்...............
அமலன் சேசுகமலபதத்தன்பே புரியிவற்கே.....................அலங்
தேசம்புகழ் புதுவைப்புரி செயகானருள் பாலன் குல..............
சீலன்மனதின்பமுறச் சிறந்தே நலங்கிடுவீர்.....................அலங்
துங்கந்தருகல்விப்பிரசங்கம் வளர்சுகுணன் மிகு..................
சுகமேபெற மதுரந்தருசொல்லீர் நலங்கிடுவீர்...................அலங்
சேலோகதிர்வேலோவெனத் திகழ்கூர்விழி மடவீர் புகழ்..........
சேருஞ்சவராயலு செவ்வேட்கு நலங்கிடுவீர்...................அலங்
தேனோசுவையமுதோ செழுங்கனியோ வெனுமொழியீர் துரை......
செயகானருள்சிவரத்னஞ் சிறக்கநலங்கிடுவீர்...................அலங்
சித்தசனும்பரவும் வடிவொத்தபிரசித்தன் அவன்.................
சீர்கொண்டிடமலர்போன் முகந்திகழ்வீர் நலங்கிடுவீர்...........அலங்
வேதம்புகல் புனிதப்படிவிருப்பிச் செலும்மேலோன் அன்பு.........
விரியும்புகழ்ச் சவராயலுவேளுட்களி கொளவே...............அலங்
மன்னுந்தமி ழென்னும்பொருள் வளருங்கிளர்வுடையோன் நிறை....
மகிழ்வேபெற மலர்மாமகள் வளருமன்னவனுக்கே.............அலங்
சீர்கொண்டொளிர் செயகானருள் செயமீறுயர்புதல்வன் மின்னுந்....
தேகம்பரிமளஞ்சேர்தரச் செஞ்சந்தனந் திமிர்ந்தே..........அலங்

குற்றந்தவிர் புதுவைப்புரி குலவுந் தமிழ்ப்புலவன் எழில்..........
கொள்ளுந்திருமணக்கோலத்திற் கோலிநலங்கிடுவீர்..........அலங்
உலகம்புகழ் மரியம்மைதன் னொளிர்செம்பதம் பணிவோன் தூய....
உள்ளங்களி கொள்ளமிகவுகந்தே நலங்கிடுவீர்...............அலங்
மானார்விழிமடவீர்புகழ் வாய்ந்தசிரகிரிவாழ் எங்கள்...............
மீனாட்சிசுந்தர தேசிகன்மெச்சுங் கவிஞனுக்கே............அலங்
தழையும்புகழ்சோலை யப்பாசாமிமகிபதியா மிக்க...............
தனதனன்பு கொண்டவெங்கள் சவராயலு துரைக்கே..........அலங்
சுபசோபனஞ் செயமங்களந் துலங்கநலங்கிடுவீர் நலஞ்...........
சூழ்வோர்புகழ் சவராயலுதுரையோ டென்றும் வாழ்க......... அலங்

காஞ்சீபுரம்

ம. ரா. ரா. கச்சபாலய ஐயரவர்கள்

இயற்றியது.

எங்கள் சிவப்பிரகாச முனிவனுக்கோ ரிணையிலையென் றிருந்தேன்யா ருந், தங்கள்கருத்திடையவ்வாறமைத் திருந்தார்புதுவைநகர் தழைக்க வாழுந், திங்கள்புரை முகச்சவராயலு மகிபாநின் கல்வித் திறமைதேர்ந் தே, நங்களதியாமை யெனவவரிசைத்தார் யானுமுள நாணினேனே(க)

வேறு.

திருவளரும்புதுவைநக ரதனின்மேவுஞ் செயகான்பூபதி புரிநற்றவ த்தில்வந்த, மருவளருந்தொடையணிதிண் புயத்தன்வாட்கண்மகளிர் ம டலெழுத வெழில் வாய்ந்தசீலன், தருவளருங் கரச் சவராயலு வேளுக் குந் தழைபுகழ் சின்னைய மகிபன் தவத்தில்வந்த, குருவளருங் கவின்றி கழும் ராசம்மாட்குங் கூறுவீர் சுபமங்களங்களமாதோ.........(உ)

பதம்.

இராகம் தோடி தாளம் ஆதி.

சுபமங்களம் மங்களம் நித்ய ஜெயமங்களம் மங்களம்- நல்ல
சொற்பெறுமுத்தமிழ் விற்பனனற்புத
தோயஜநயனன் சவராயலு மகிபதிக்கு. (சுபமங்களம்)

விபவமலி புதுவைநக ரிலகும்ப்ரகாசன்
விஜையன்குபேரன் கர்னன்விழை கௌரிகுலேசன்
செபமிறைவனை நோக்கிச் செயகானுலாசநேசன்
செய்துதரும்புத்ர சிகாமணியாம் விசுவாசன்
சித்தமதிற்பிர மத்தைநினைத்துசெபித்துநெறிப்படுமுத்தமர்பற்பலர்
விற்பனமுற்ற சுபத்வமிகுத்திடு பொற்பொடுகற்பமைமாதர் - ஜெய
மங்களஞ்சொலு மதிகயோகன் வரு
திங்களைநிகர்வதனமோகன் மிகு
பொங்குறுங்கலை தெரிவிவேகன் மட
மங்கையர்தொழும் புனிததேகன் மிக

வாசமாரளக வனிதாமணி துதிக்கும் ராசம்மாளுடனே சவராயலு
நிதிக்கும். (சுபமங்களம்)

வாழையடி வாழையாய் வாழ்க வென்பாரோர் கோடி
மன்னுமால் போல்தழைத்து மலிகவென்பாரோர் கோடி
பீழையில்லாத செல்வன் பிறக்க வென்பாரோர் கோடி
பெருங்கால மிவர்க்காயுள் பெருக வென்பாரோர் கோடி

பெட்பொடுநட்பமைசுற்றமனைத்துமனக்களியுற்று வழுத்தவிழுத்தகு
நற்குணநற்செய்கையுற்ற மணத்தையலைக்கைப்பிடித்திடுநேசன், மிகு

மதுரவசனமுணர் போதன் கழை
மதனைநிகருமெழில்நாதன் உல
கதனிலிணையில் கலை நீதன் வரு
சதுரனிலகு மதி கியாதன் கலி

தீர நாவலர்கள பாடுமற்புதகவிக்குத் தாருபோலுத வுதாரமுற்றிடு
துரைக்கு. (சுபமங்களம்)

சீரிலகும் புதுவைநகரில் மருவுந்தூயன்
செயகான் மகிபன்முன்னஞ்செய்தவமென்னுஞ் சேயன்
பாரதனிலே கச்சபாலயன் தமிழ்நேயன்
பண்பினனைவருக்கும் பகரும்பெருஞ் சகாயன்

பத்மமலர்க்கிணை யொத்தழகுற்றுறு பத்தர்மனத்தில் நடித்துளவத்
தையனைத்துமொழித்து நலத்தபதத்திமரிப்பெயரைப்புனைதேவி, தனை

மன துற வழிபடு சீலன் தன
தனைநிகர் தருதனபாலன் எதி
ரிலையெனவருமதிமேலன் வரு
மெவர்களுமகிழனுகூலன் அன்னை

நேசம்யாருக்கும் பொங்கமனதாயிருக்கும் ராசம்மாளுக்கும் எங்கள்
சவராயலுக்கும். (சுபமங்களம்)

தருமதானபுரம் பாரதபிரசங்கம்
ம. ரா. ரா. கண்ணுவைய ரவர்கள்
இயற்றியது.

பூவார்ந்த பெரும்புகழ்கொள் புதுவைநகரரசாளும் பூமான்கோமான்
காவார்ந்த கரதலன் தூப்ரான்துபுராயெனுங் குவர்னர்களிக்க நாளும்
நாவார்ந்தவின்சொன்னடைச் செந்தமிழோர் சிரமசைக்கநவின்றவின்பப்
பாவார்ந்த புகழ்ச்சவராயலு மகிபன்பிரசங்கம் பகர்ந்திட்டானே. (௧)

தவராஜர்மகிழ்தருநற்றருமம் வளர்புதுவைநகர்ச் சான்றோரியாரும்
எவராலு முடிப்பரிய தாயதேம்பாவணிப் பேரிந்நூலுக்குக்
கவராதமணிகொழித்த தெனவுரையிட்டா னிவனேகல்விவல்லோன்
சவராயலுப்பெரிய புலவனென்றோர் யாமினியென் சாற்றுமாறே. (௨)

விரியொளிமாமணி கொழித்தவாரிதியி னரிதாக வியன்சீர்மேவி
யுரியபலவளநிறைந்த புதுவையில்வா ழறிஞரொலா முளம்பூரிக்கத்
தெரியவருவளனெனு மாமுனிவனணி சரிதத்தேம்பாவணிக்கே
அரியவுரைவெளிப்படுத்தி நஞ்சவராயலு மெதாலணிபெற்றனே. (ரு)

சந்ததமும் புகழோங்கப் புதுவைவளர் செயகான்செய்தவத்தில்வந்த
எந்தமனிதருமிவியக்குங் குணச்சவராயலு வென்னுமியற்பேர்மேலோ
னந்தமிகுசீர்வாழ்க வரும்புதல்வர் மனைவாழ்க வணிநாவாழ்க,பைந்தமி
ழ்ப் பாவினம்வாழ்க வினம்வாழ்கவென்றுசிபண்ணுவேனே. (ச)

கோயமுத்தூர்

ம. ௱. ௱. நாகலிங்க சுவாமிகளவர்கள்

இயற்றியது.

மருமலர்ப்பொதும்பரின் வழீஇயபிழியும், வருக்கைமுட்புறக்க னி மல்கியமதுவும், செங்கதலிக்கனி சிதறியசாறும், வானமளாவிய மாங்கனிரசமும், பெருஞ்சினையுறுமிறால் பெருக்கியதேனு, மொன்று பட்டாறு யுயர்குணமியாவுந்,துன்றியபெரியோ னொருவனிவ்வுலகி னன்றிசெயவரூஉ நலமெனப்பெருகிச், சுலவியபுதுவையந் தொ ல்பதியுறைஇச், செயமுறுசெயகான் செய்தவத்தாலுதித், திலக்கிய விலக்கண மினிதுற மிகக்கற், றவ்வழிநிற்பா னருமைசால் கற்பின், மனையொடுமரீஇ மனையறக்கிழவனு, யன்புடனினியவை யறைந்து, விருந்தோம்பலொடு, நன்றியறிதலு நடுவுநிலைமையும், அடக்கமோ டொழுக்க மழுக்காறாமையும்,பிறனில்வெஃகாப் பெற்றியும்பயனில,கூ ற்றுனையாமையுங் கோளாடாமையுந், தீவினைக்குள்ளஞ் சிறிதுமொவ் வாமையு, மொப்புரவறிதலோடற்புதக்கொடையு, மெவ்வுயிர்க்கண்ணு மிரங்கிடுமிரக்கமும், பூணெனக்கொண்டு பொற்புறநடப்போன், ஐம் பொறியிடனுறீஇ யைம்புலனுகரு, மனத்தினைவாங்கி மத்தகத்திருத் திச், சகலகேவலந் தாண்டியைந்தவத்தைக், கப்பாற்பட்டங் கறிவினி லறிவாய்ப், பூரணப்பொருளைப்புவனகாரணனை, யாரணமுடியு மளப்ப ருஞ்சோதியைக், காணுதுகண்டு பூணுதுபூண்டுச், செம்மாந்திருக்குந் திருவுடையோர்க்கு, வழிவழியடிமை யாகியமாண்பன், சவராயலுவள ள லெனும்பெயருடைய வேந்தல்பராயரற், கன்பாலருங்கவி யமைத் துப்புகழ்நிறீஇ, இம்மையிலரசரா லெழில்பெறச்செயயும், பரிசுபெ ற்றுலகிற்பாவலர்நாவலர், புகழ்ந்திடப் பெற்றனன்போலும்,அவன்புக ழுரைக்கு மாண்டகையுடையோ, ரிவணிலையவணிலை யெவணுமின்றே.

(க)

திருநள்ளாத்து தேவஸ்தானத்தின் தருமகர்த்தராகிய

ம. ா. ா. சோமசுந்தரதம்பிரானவர்கள்

இயற்றியது.

செய்யசவராயலுவேள் செய்பிரசங்கத்தவையிற்
பையவெதிர்த்துப்பலர்தோற்றார் - மெய்யே
சொலல்வல்லன் சோர்விலனஞ்சானவனை
யிகல் வெல்லல்யார்க்கு மரிது. (க)

சித்திலிங்கமடம்

ம. ா. ா. தி. அ. சிவானந்தசுவாமிகளவர்கள்

இயற்றியது.

பூமேவுபொய்கையும் பொங்கருஞ்சூழந்திலகு புதுவையினி லோங்கு செயகான்- புரிதவப்பயனின்றசவராயலென்றோர்புதல்வனைப்புலமை மிக்க, தேமேவு செவ்வந்தியலர்சிரகிரிக்கண்வருசிவனடியார்ற்சிறந்து-திகழுமீனாட்சிசுந்தரதேசிகன் வயிற்செந்தமிழெலா முணர்ந்து, தூமேவுமத்தேயுமார்க்குலூக்காயோவான் சொன்னசுவிசேஷமாய்ந்து-சுகிர்தமாமுனிவர்மேற்றிராணியர் துதித்திடச் சுதனெனுஞ் சேசுபரன்மேற், பாமேவுநற்கவிகள் பாடிப்பரீசரசர் பால்விடுத்தளவிறந்த- பாவலர்கள் மெச்சவவ்வரசர் தருசெம்பொற் பணீஇ யணிந்தோங்கினனரோ. (க)

பொம்மையபாளையம் சிவகஞ்சி மயூராசல நிவாசவெதிஸ்வர கர்த்தரான
சிவக்யானபாலயசுவாமிகளமடத்துத்திருக்கூட்டத்தாருளொருவராகிய

ம. ா. ா. பாலசித்தானந்தசுவாமிகளவர்கள்

இயற்றியது.

மீனாட்சிசுந்தரப்பேர் மேவுதமிழ்க் கடலிற்
றானாட்சியாமமிர்தந் தானுண்டு - வானாள்
புரந்தரனை மீறு சவராயலு பொற்பார்மால்
புரந்தருளு மென்னுளையும் பூண்டு. (க)

மணிவளர்கடலிற் கண்டுயில்நெடுமால்மலரயன்வானவர்பணிய-வரங் கண்மிக்களிக்குஞ் சிவபெருமானை மனத்துறவிருத்தி யாவருக்கும், அணிவளர்கல்விப் பெரும்பொருளளிக்கு மன்னையெப்பாகிய வினியானற்புதக்கவிஞர் பற்பலர்புகழுமாசின் மீனாட்சி சுந்தரவேள், பணிதனை முடியிற் கொண்டுயுமெனையிற் பணியின் வாதனையுறதந்தப் -பணிமுடித்தருளப் பரவைசூழுலகிற் பணித்தனைதயின் றெனக்களிப்பாய், திணிமிகுமள்ளர் குரவைகொண்டாடுஞ் சிறப்புறும் பண்ணை சூழ்பாகூர் செழித்திடுஞ்சவராயலுவெனுஞ்சுகுணசெயசெயகான்வரோதயனே(உ)

திருவாரூர்

ம. ா. ா. சிவசாமிசாஸ்திரியாரவர்கள்

இயற்றியது.

மாமேவுமணிமார்பன் நமசிவாயம்பிள்ளை மகிழயாரும், பூமேவுபொ
ழிற்றிருவாரூரின்முன் சீபதிகாரம் புரியுநாளிற், றாமேவுமெழிற்றேம்
பாவணிக்கும் பன்னூற்குமுனை சொற்றன்கட்டேரர், நாமேவு நம்புது
வைவாழ் சவராயலு சுகுணனன்குமாதோ ....(௧)

ஷி. ம. ா. ா. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களின்
மாணாக்கருளொருவராகிய திருவீழி மிழலை இராமாயணப்பிரசங்கம்

ம. ா. ா. சாமிநாதக்கவிராயரவர்கள்

இயற்றியது.

செங்கமலத்தடப் புதுவைமேயசெயகான் மகிபன் செல்வனை, துங்
கமிகு தமிழ்ப்புலமைத்தூய சவராயலுமால் சொற்றபாவைப், பொங்க
முத மெனிற்றேவரோமதென்பர் கரும்பெனிலோ பொருவிலோ, ரங்க
சவேடனதென்பா ரெனிலினியா முவமையெடுத் தறைவதென்னே (௧)

விண்மணக்கும் பொழிற்புதுவை மேயசெயகான்மகிபவேளளித்த,
வுண்மணக்குந்தமிழ்ப்புலமை யுயர் சவராயலுபுலவனுரைத்த நூலை, எ
ண்மணக்கு மறிவுடையோ ரிசைத்திடக்கேட்க்கத் தொடையினியலை
நோக்கக், கண்மணக்குஞ் செவிமணக்கு நாமணக்குமெனிலினியான்
கழறலென்னே... (௨)

விடைக்கு நிகரொனும் புதுவைச் செயகான்மன்னவன் புரிந்த விழுத்த
வத்தால், கிடைக்கு மருமான் சவராயலு புலவன்றிருவாயாற் கிளர்த்துந
ன்னூ, லடைக்கு மிலக்கணத்தொடைக்கு முயர்கவியிலொருகவியை ந
வின்றாற்றுன்பந், துடைக்கு நலம்படைக்கும் வினையுடைக்குமெனிலித
ன் பெருமை சொல்லற்பாற்றே.............................(௩)

பூவலயம் புகழ்புதுவைச் செயகான் மாலருள்புதல்வன் புலமைமிக்க,
பாவுலவு மெழிற்சவராயலு புலவன்சொலு நூலைப்பகரக்கேட்டுத், தா
விலரவுக்கிறைவன் பரிபவத்தான் மெலிந்துமிகத் தண்ணீர் வற்றி, நாவு
மிரண்டாய்வெடித்து மண்புகுந்தா னெனிலினியானவில்வதென்னே(௪)

மங்களஞ்சேர் புதுவைநகர் செயகான்மாலளித்தருளுமைந்தனை,
வெங்கள்சவராயலு நற்புலவனியற்றிய தமிழினியலைநோக்கிச், செங்க
யனேர் விழிவாணிவேதனையுற்றுடல்விளர்த்துத்திகழநாளுந், துங்கவன
மிறங்காமலிருந்தனளென்றா லினியாஞ்சொல்வதென்னே..............(௫)

கற்கண்டோ செந்தேனோ கார்கோளிடத்தமரர்..................
முற்கண்டதெள்ளமுதோ முக்கனியோ- சொற்கண்டு..........
தேம்பாவணிபுதுவைச்சேர் சவராயற்புலவன்......................
தேம்பாவணியுரைக்குஞ் சீர்...(௬)

தனத்தை யனங்கன் சரத்தாற்றுளைக்க மனமயர்ந்துளைந்து தலைவிழ்ந் தேன்வி, தனத்தை யனங்காளவற்குச் சாற்றென்றுண் மடமகளித்தாணி யோரேத், தனத்தையணிகரத்திருமா றனை நிகருஞ் செயகான்மாறனை யாநற்சந், தனத்தையணை திண்டோளாய தக்கசவராயலு செந்தமிழ்ச் சிங்கேறே..(எ)

தூயசனந்திகழ்புதுவைச் செயகான் மன்னவனருளுஞ் சுகுணன்கல்வி நேயசவராயலு மாறேளணிநற்றெரியலன்றி நினையுந்தோறும்......
வாயசனங்கசந்தமளி மிசைத்துயிலா தமருமடமாதுக்கிந்தப்.........
பாயசமோதவிர்க்கு நெடுந்தடவு புகர்வாளனகட்பாவைமீரோ......(அ)

குப்பகோணம்

ம. ரா. ரா. சா. துரைசாமிமுதலியாரவர்கள்

இயற்றியது.

வளமலிபுதுவை மாநகர்க் கணியே வயங்குறு மெனது கண்மணியே.
களமலியுளத்தார் கலப்புருச்சீலா கவின்செயகானருள்பாலா.........
தளமலிமலர்த்தே னெனமொழிவாயாசற்சவராயலுநேயா............
உளமலிகளியானுறப்பிரசங்க முரைத்தனையதற்கென்னைகம்மாறே...(க)

குப்பகோணம்

ம. ரா. ரா. குமாரசாமிக்கவிஞரவர்கள்

இயற்றியது.

நிதியாலளகைப்பதிவேந்தும் நிறைகல்வியினு லரவரசும்...........
மதியாலமரர்தொழுங்குருவும் வனப்பால் வேளும் வயங்குவரால்......
துதியான்மிக்கவவையொருங்கே துதைந்தசவராயலுமாற்கு..........
முதியாரவரைத்தனித்தொப்பா மொழியவென்று முன்னுவரோ...(க)

பொய்யினுக்குப் பேரிடியாய்ப் பொலிவானுமெஞ்ஞான்றும்புகரிலாத மெய்யினுக்குப் பெற்றுவளர்த்திடுந்தாயா யன்புடனே விளங்குவானுங், கையினுக்குவனப்புதவுமணிகொடையென்பானுமெழில்கதிப்பவன்ன ஞ், செய்யினுக்குத்தரும்புதுவைவாழ்சவராயலுநாமச்செயவேடானே,

கொட்டையூர். ம. ரா. ரா.

சாமிநாதக் கவிராயரவர்கள்

இயற்றியது.

நாவெனுமுரத்திற் கவிகளைநிரைத்து நன்குறப்புடைத்ததிற் பதராய் ஓவுறுமவற்றை யொழித்துதன்மணியா யுற்றநற்கவிகளே கொள்ளும் பாவலன்சவராயலுப் பெயர்பூண்டோன் பல்பெருமேஸ்மனிமுதலோ ர், மேவியின்புறத் தேம்பாவணிக்குரையைவிளம்பினன் குடந்தையின் மாதோ..(க)

வேளார்காணியிலிருக்கும் தன்னிலப்பாடி இராசகோபாலப்பிள்ளை யவர்கள் குமாரர். ம. ரா. ரா.

நடராசப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

கலைமகளேயுனையுமினி வருந்துவதிற் காரியமென் கலைவலோரில்......
விலைபகராமணி சவராயலு வலன்வேளார்காணிமேவி யந்தத்.........
தலமதின்வாழனை மரியைத்தரிசித் தெங்களுக்குச்செந்தமிழையெல்லா
மலிதரஞானதிக்கத்தேவனில்லி லின்பமுடன் வழங்கினனே.......(க)

தஞ்சைமாநகரம்

ம. ரா. ரா. கிஷ்ணசாமிக்கவிராயரவர்கள்

இயற்றியது.

பொன்னைப்படைத்துக் கவிவாணர் யார்க்கும் புரிந்துதவ
வுன்னைப்படைத்துச் சவராயலுவெனு மொப்பில்பெயர்
தன்னைப்படைத்தமகிபா வொருபயன்றானுமிலா
தென்னைப்படைத்த வொருவனடுநிலை யேயந்தவனே. (க

தேனேயெனக்கவி சொல்லவு மக்கவிச்செயபொரு
டானேவிரித்துரை கூறவு மேற்றவர்தம்மைப்பிறர்
கோனேயெனச் செயவுஞ் சவராயலுக் கோவிருக்க
யானேபிறந்து பயனென்னையோ புகலாயிழையே. (உ)

தஞ்சைவெண்பாப்புலி

ம. ரா. ரா. அரங்கநாதக்கவிராயரவர்கள்

இயற்றியது.

பொற்றகடாம் பூணர் புயாசலனே புண்ணியனே
நற்குணனே மெச்சுசபா நாயகனே- சொற்குளுயர்
வாணர்க்கிரங்கு சவராயலு வள்ளாலுன்னைக்
காணக்களிக்குமிரு கண். (க)

உள்ளமுவந்தியாவுலுத்தப் பசாசுகளை
வள்ளலெனப்பாடி மதியாதே - தெள்ளியசீர்
வித்தைத்திறனறியும் வேள் சவராயற்சுகுண
னத்தத்தைக் கண்டோ ரகம். (உ)

மஞ்சுமிருநிதியு மாமணியுந்தேனுவுமே
யஞ்சு மஞ்சியப்பா லகலுமே - மிஞ்சும்
வடிவுமு நற்பூம் புதுவை வாழ்சவராயற்கோன்
கடிகமழுந் தாமரைப்பூங் கைக்கு. (ங)

வட்டமதி முகத்தாள் மத்தகெஜ மாமுலையாள்
கட்டழகுமேவுமொரு காரிகையாள் - இட்டமதாய்த்
தேடிமயலுறவே செல்வ சவராயலுனை
நாடிமடலெழுதினாள். (௪)

மண்ணோங்கு நம்புதுவைச் சவராயலு மாவலவன்
திண்ணோங்கு செம்பொற் றகடுபெற்றுனிச் செகமதனிற்
கண்ணோங்கணிகவுரிக்குலமுஞ் செயகா னலமும்
விண்ணோங்கிருசுடர்போலே யெந்நாளும் விளங்கிடவே. (௫)

தஞ்சைவிதுத்வான். ம.ா.ா.

அருளப்பமுதலியாரவர்கள்

இயற்றியது.

புதுவைச்சவராயலு வல்செய்வேலைப்பொருவு கண்ணார்............
புதுவைச்சவராயலு க்கோதைத்தேவிக்கார் பொற்பரினம்............
புதுவைச்சவராயலு த்தென்னை நின்னிடம் போக்கினர்வா............
புதுவைச்சவராயலு மாலவரின்பம் புல்லுதற்கே.................(௧)

வாசவரவிந்த மலர் வாசமாதன்னவெம்மின்...............
வாசவனேருன்மயலா வாசமைந்த - வாசடமா...............
வாசவராயலு வாசசியானைந்தாரள்...............
வாசவராயலு மன்...................................(௨)

காஞ்சிபுரம்காந்தப்பிரசங்கம். ம.ா.ா.

குமாரதேவரவர்கள்

இயற்றியது.

ஓதுபுதுவாபுரியி லுற்ற செயகானினிய...............
மாதவத்லால் வந்து தமிழ்வாணருக்குச் - சீதமுறுங்...............
கோதைளிக்குங்குரிசில் சவராயறனைக்...............
காணுதகண்ணென்ன கண்...................................(௧)

யோவான் முதற்பெரியோ ரோதுஞ்சுவிசேஷம்...............
ஓவாதே தேர்ந்திருக்கு முள்ளத்தான் - பாவாணர்...............
சந்ததமும் வாழ்த்துஞ் சவராயற் பூபனென்றும்...............
வந்தவரைக் காப்பான் மகிழ்ந்து...................................(௨)

சீரிருக்குங் கற்பகம்போற் செந்தமிழ்வாணர்க்குதவும்...............
வாரிருக்கும் பூண்முலையார் மடலெழுத மன்மகனே...............
காரிருக்குங் கைத்தலத்தோய் கள்ளிருக்குஞ்செய்யமலர்த்...............
தாரிருக்குந் திண்டோட் சவராயலுதுரையே...................................(௩)

திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழாசிரியர்

ம. ள. ள. க-ரா- சிவசிதம்பரமுதலியாரவர்கள்

இயற்றியது.

அரசங்க மிகுபுதுவை யெனுமவனிதனிற் பொங்குசெயகானென.........
விரசங்கமலி நளிர்பாற்கடலீன்ற சவராயலெனும் பேர்பெற்ற........
வரசங்கதனிகொழிக்குமுயர்தேம்பாவணியெனும்பேர்வாய்த்ததண்ணம்
பிரசங்க வியன்முத்தம் விலைமதிப்பாரோவரிந்தப்பிரபஞ்சத்தே....(க)

தருமநாதபுரம் வித்துவான்

ம. ள. ள. ஜெகநாத பிள்ளையவர்கள்

இயற்றியது.

வல்லோருமுபுதுவை வாழ்சவராயற் சுகுண..................
நல்லோனே நாவலர்க ணாயகனும் - அல்லோர்..................
இணருழ்த்து நாரு மலரனையரென்றே.........................
யுணரவுணாக்கு முலகு..(க)

தென்னு நற்பதவண்ணமுங் கோவையுஞ் செப்பியேவுதவாதவுளத்தர்மே, வுள்ளம்வாடித் திரிந்தலைகின்றதேனேங்கு நஞ்செயகானெனுமுத்தமன், பிள்ளையாகவுதித்துநற்பாவலர் பேணவேசுலி மாற்றுமுதாரனும், வள்ளலாஞ் சவராயலைச்சந்ததம் வாழ்த்துவீர் வாழ்த்துவீர்கவிவாணரே.

தேடித்தனத்தைத்தமிழ்க்குக்கொடாமற் றிருடருக்குங்.........
கூடித்தழுவும் விலைமாதருக்குங் கொடுப்பதல்லால்..........
நாடித்திருப்புதுவைச் சவராயலு நாயகன்போற்..............
பாடித்தனிவரும் பாவலர்க்கேபவர்ப் பார்த்திலமே..........(உ)

ஷை ம. ள. ள. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின்மாணாக்கருளொருவரும் திரிசிரபுரம்சிதம்பரம்பிள்ளையவர்கள்குமாரருமாகியஉபாத்தியார்

ம. ள. ள. சுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

துங்கமிகு நித்யபரிபூரணசதானந்த தொன்மையனிருஞ்சரிதமுன்-ஒருமறவுணர்ந்தவுயர் வீரமாமுனிவனாற் சொற்றதேம்பாவணியெனும், பங்கமறு நூலையிந்நிலமுனுற்றிய தவப்பயனுவுதித்துலைவிலாப்- பண்பினின்றெல்லாவுயிர்க்குநற் புகலிடப்பான்மையாயரசர்போற்று, மங்கலமுழுங்கவிக் கருடிவானேளிர் சோலைவள்ள லப்பாசாமிவேள்-மன்றத்திலறமுறைற்பொருள்கருதிவானளா மாடமலி புதுவைநகர்வாழ், திங்களனசெயகா னளித்தசவாராயலு சிகாமணிப்புலவனன்பாற்- றேர்ந்துபிரசங்கிப்ப தோர்ந்தனந்தன் பெருஞ் சேட்பிலம்புக்கினனரோ......(க)

திரிசிரபுரம் உபாத்தியார்

ம. ரா. ரா. குப்பமுத்தாபிள்ளையவர்கள்

இயற்றியது.

எர்செயும்புலவராதியுற்றுணர்வரொவருளுமின்பமூற்றெடுப்பச், சீர்செயு
ந்தருமமுதலொருநான்குஞ்சிறந்ததேம்பாவணிநூலிற், கூர்செயும்பொ
ருளகள் விரித்துரைபுனைந்தான் குறைவறமகிழ்வு கூர்ந்துன்னிப், பார்
செயுஞ் சீர்த்திப்பரவுநற் சவராயலுவெனு நாமப்பண்பினனே. (௧)

நற்றவனுகுஞ்செயகா னாயகன்சேய் தானிலத்தின்..........
முற்றுந்தமிழ்புலவர் முன்னுகுணன்-அற்றமில்சீர்..........
பூணுசவராயலுபூபன் புகறேம்பாவணிநூன்..............
மாணுரைகேட்டுண் மகிழ்ந்தோமால் ....(௨)

தேம்பாவணியென்னு நூலியலோர்ந்துயர்சீர் புதுவைப்...........
பூம்பாவலன் சவராயலுபூபன் புகழ்புலமை ....
கூம்பாவரனின்று செய்பிரசங்கம்விண்கூடமுதும் ....
வேம்பாவதியக் கரும்பாயினிமை விளைத்துவே ....(௩)

கற்றவருள்ளக் கமலக்கன்னியன்ன மென்னக்கா...........
முற்றவமினற் றமிழ்தேர் முற்றறிவன்-கொற்றச்...........
சவராயலு நற்பேர் சார்புலவ னன்பே...................
எவராலுங் கூறற் கிதம்..................................(௪)

திரிசிரபுரம். ம. ரா. ரா.

சரவணப்பெருமாளுபாத்தியாயரவர்கள்

இயற்றியது.

சீர்கொண்டமேகலை சுமந்துநனியொசிகின்றசிற்றிடைப் பொற்பார்முலை
த்தேங்கோதைமாதர்முகம்விழிகாதுவாயிதழ்செறிவெண்ணகைபசியகண்
டம்- செய்ய தாளிவைகட்கு நாமனுதினம்புலவர்செப்புமுவமானமாகத்
திகழ்வரங் கொள்ளவொரு தாணின்றுமுழுகியுந் தெளிவுமிகவைந்தடை
த்தும், பேர்கொண்டதவ முனுற்றற்கறம் வழாநிலம்பேருலகினம் புது
வையே - பெரிதுநன்றெனவந்துமுளரிநீலம்வள்ளை பெட்புறுங்குமுதமு
தலை- பிரபைதருதாளநந்தாமை செயதென்னவொளி பெருகு நீர்வாவி
சூழ்ந்த- பேசரியவந்நகர்தனிற் செல்வம்யாவுநிறை பிரபுசெயகானாயக
ன், ஏர்கொண்டதவவூதியங் கவியிராசர்களெடுத்துரைதமிழ்ச்சாகரம் - ஈ
கைநன்மொழிதேவ வேசுநாதன் வேதவினிய நூனெறியிவையெலாம்
எவருங்களிப்புறக் கற்றபுண்ணியபுருடனெங்கள சவராயலுமுகில் - எண்
ணில்கலையுணா தெரிவல்வீரமா முனிவன்மு னியற்றுநற்றேம்பாவணிக்
கார்கொண்டவாரிதிகளித்துண் டதிற்பரவு கனபொருள்களுள்ளனவெ
லாங்- கருதித்திரட்டியும் விரித்துமினிதினிதென்று காதினன்மாத்தி

மாந்திக்-கற்றுணர் விவேகியர்களின்புற வுதாரணங்கருவி நூல் விதிக ளெல்லாங்-காட்டிப்ப்பிரசங்கமழை பெய்தனன் புலவர்ருகண் மணியெ னச்சிறந்தே.......................................([illegible])

திரிசிரபுரம்

ம. ா. ா. சதாசிவ நாவலரவர்கள்

இயற்றியது.

தேங்கு பெருங்கல்வி யறிவொழுக்கம் பாற்சுவையேபோற்றிகழ்ந்து மேவ, வோங்குபெருங்கொடையே மானிடவுருவாய்ப் புதுவை நகருதித் தெஞ்ஞான்றும், வீங்குபெரும் புகழ்ச்சவராயலு நாமம்புனைந்தினிது விளங்கப்பெற்ற, வாங்குபெருங் கடற்புடவிக் கெகந்தருவிலாமையினால் வறுமையென்னே ....(௧)

விண்ணுலகுமண்ணுலகுமோர்ந்திதனினிது சிறப்புமேவிற்றென்ன வொண்ணுறுமோ விண்ணுலகு புலவரொடுமை பதியுமுளதேயென்னி னண்ணுறுமிம்மண்ணுலகும் புலவரொடு புகழ்ச்சவராயலு நன்னும, மண்ணுறுவள்ளலையுளதுமிருங்குலிற நெருங்குபுலையல்லங்கன்மாதே. (௨)

திரிசிரபுரத்தைச்சார்ந்த சிந்தாமணி . ம. ா. ா.

க. பெரியண்ணப்புலவரவர்கள்.

இயற்றியது.

பூவிருக்குமலர்ப்பொதும்பர் புடையிருக்கும் வண்புதுவைப் பூபன் றெய்வக், கோவிருக்கு மலர்க்கரத்தான் குணமிருக்குமின்மொழியா ன் கூறுநல்லோர், பாவிருக்கும் புகழ்ச்சவராயலு, நாமவேளபெருஞ் சீர் பகர்ந்திடப்பன், ஞவிருக்குமனந்தனுக்கு மரிதென்றுலியா னென்றேந வில்வன்மாதோ ....(௧)

பொன்னுமணியுந் தமிழோர் புலவரொனும் டயிர்தழையப் பொழி யுங் கொண்மூ, வென்னுமதிமிக்க சவராயலுவேள் புகழ்ப்பெருக்கா லெ லாம்விளர்ப்பத், துன்னுபுவியினுளொலாந் துயருறுவர் தமக்கின்பந் துறுமநல்கு; மன்னுமெழிலிளமாதர் கருங்குழலும் விளர்க்குமென மதித்துமாதோ..(௨)

கற்றோர்கள்சிலர்புதுவை மாநகருக் கணியாகக் கவினமேவி, யுற்றோ ர்கட்குதவு சவராயலுமால்பெரும்புகழை யுரைத்திடாமன், மற்றோரை ப் புகல்வதெல்லாம் வண்சோலைமாங்கனியை வாஞ்சியாது, சிற்றோகை யொடுநிம்பக் கனிகவருங் கொடிச்செயலேசிவணுமாதோ.......(௩)

மாமேவு புதுவை நகர்வாழ்சவராயலு வள்ளல் வறிஞர்யாருந்.......
தேமேவுசெல்வமுறச் செயச்சில்லோர் கொடுவறுமைதீராரந்தோ...
கூமேவுமுயிர்விழிகட் கொளியருளுமிரவிமுனங் கூகைக்கூட்டந்...
தாமேவுவிழிகளிரு ளகலாமைக் கென்செயலாந் தரணியோரோ....(௪)

வேறு.

அடுத்தார் மகிழச் சவுராயலுப் பெயரண்ணலின்பங்..................
கொடுத்தாலுந் துன்பஞ் சிறிதுமெஞ்ஞான்றுங் கொடாமையெண்ணு..
மெடுத்தாய்ந்து முற்றவுணர்ந்தார்களெல்லாருமிடைபுகுந்து.........
தடுத்தாலுமெல்லாங் கொடுப்பனென்றேகவி சாற்றலென்னே....(ரு)

வேறு.

திண்டிறற் செயகானுமவேடவமோ சேர்புலவோர்கள்செய் தவமோ
பண்டருந்தமிழ்செயபாதவந்தானோ பாருளுற்றியதவந்தானோ, தண்ட
ரும்பொழில்சூழ்புதுவை மாநகர்செய்தவங்கொலோவவணவதரித்துக்,
கொண்டனுறவே பொன்மழை பொழியுங் கோச்சவராயலுமாமே.லு

திரிசிரபுரம். ம. ா. ா.

மருதநாயகம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

புவிராசர்போற்றுஞ் சவராயலுவிந்தப் பூவுலகிற்.....................
கவிராசருள்ளங்களிக்கத் தேம்பாவணிக்காவியத்தைச்..............
செவிதாப்பிரசங்கஞ் செய்தனன் சேடனுந்தேமலருற்............
பவிமாதுங்கண்டு சபாசெனும் வார்த்தைப்பகர்ந்திடவே........(க)

திரிசிரபுரம். ம. ா. ா.

வயித்திலிங்கப்பத்தரவர்கள்

இயற்றியது.

மதிவளர் வீரமாமுனியன்பால் வகுத்ததேம்பாவணியென்னுந்.....
துதிவளரமுதை யன்பினர்செவிவாய்த் துகளறப்பூட்டினன்புதுவைப்.
பதிவளர்செயகானபதிதவத்திற் பண்புறத்தோன்றியகல்வி........
நிதிவளர்சவராயலுகவிராஜ னிகழ்பிரசங்கத்தான்மாதோ.........(க)

வரகனேரி சங்கீதவித்துவான். ம. ா. ா.

மகாலிங்கவாத்தியாரவர்கள்

இயற்றியது.

கட்டிப்பணயத்தை வேசையர்க் கீந்தவர்காலில் விழு........
மட்டிப்பிணங்களைப் பாடிலென்னமிசை வான்முழுது......
மெட்டிப்பரவுஞ் சவராயலுமன்னை யேத்தினகா............
லட்டிப்படவுண்டோ புலவீர்வரு மாடகமே.........(க)

பொருளாகுமொன்றைத் தெளிந்தப் பொருட்பரன் போதித்தமெய்ச்.
தெருளாரணநெறி நீங்காதவுன்னைத் தெரிசிப்பதே...............
யிருளான சஞ்சலந்தீர்க்கின்ற நன்னிலையென்றடுத்தே............
னருளாய் புதுவைச்சவராயலு வெனுமற்புதனே...............(உ)

சென்னை

இராஜதானி பிரஸிடென்ஜிகல்லீஷ் தமிழ்ப்புலவர்

ம. ரா. ரா. பொன்னம்பலமுதலியாரவர்கள்

இயற்றியது.

கயலாடு பைம்பணைசூழ் புதுவைநகர்மேய கலைவல்லோன்செயகான்பூ
பதிதவத்தால்வந்தோன், இயலாடு தமிழ்ப்புலமைக் கொருதிலகமாகி
இலங்குமீனாட்சிசுந்தரமேலோன்றன்பால், செயலாடுபன்னூலுந் திரி
பறவோர்ந்துணர்ந்த சீராளன்சவராயலேந்திரன் மூதறிவால், வியலாடு
பலசெய்யுட் டிரட்டென வொன்றுரைத்தான் மேதினியுள்ளோருள
ம் வியந்துவப்பமாதோ.............................(௧)

சென்னை இராஜதானி பிரீசர்ச்சிமிஷியன் தமிழ்ப்புலவர்

ம. ரா. ரா. தெய்வசிகாமணிமுதலியாரவர்கள்

இயற்றியது.

சீர்மருவு கற்பகநறுந்தேன் கொணர்ந்துதன் தேன்புலவிதீர்த்தருத்தி
ச்-சிறையளிதழீஇத்துஞ்சு பைந்துணர்ப்பொழில்சூழ் திருப்புதுவை நக
ரின்வாழ்வோன், கார்மருவுகாதல்ச்செயகான்மகீந்திரன்கருதருதவப்பே
ற்றினாற் - காசினிகளிக்கவந்தோன் பலகலைக்கடல் கடக்கவொரு புணைய
தாகப், பேர்மருவு மீனாட்சி சுந்தரவரோதயப் பெரியோனையே பற்
றியோன் - பேசுசற்குணமேரு கவிராசர்சேகரன் பீடுபெறு சுகிர்தசீல
ன், பார்மருவுநேயசவராயலு நன்னாவலன் பன்னுபாத்தேன்பெருக்கு
ப் -பாவலரகஞ்செவி மடுத்துள மடுத்தலை பரப்புபு நிறைந்ததன்றே.

சென்னை இராஜதானி

ஞானசெங்கல்வராய நாயகர் பாடசாலைத்தமிழ்ப்புலவர்

ம. ரா. ரா. சுப்பிரமணியப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

சீர்மருவுமேதினியி லெஞ்ஞான்று மொ[illegible]நூலாச் சிறந்துமேவ.........
ஏர்மருவுமணிமாடப் புதுவையெனப்பெயர்மேற் கொண்டிலங்குநல்ல.
கார்மருவுதண்டலைசூழ் கன்னிநகர்தனிற்செயகான் கரிசிலப்ப.......
தார்மருவுசுதன் சவராயலுநாமநாவலவ னவின்றிட்டானே........(௧)

மணிகொண்ட சொற்சுவையும் பொருட்சுவையுங்கனிந்தொழுகும்வள
ஞ்சேர்செய்ய, அணிகொண்ட நலந்தேம்பாவணி விளங்க வறைகின்ற
வாசினவான், பணிகொண்டபூவுலகிற் குரிசலங்காரக்கொடியோன் பா
தப்போதிற், திணிகொண்ட வுளச்சவராயலு மேலோ னந்தமக்கோர்
சேமமன்றே..................................(௨)

சென்னை இராஜதானி பிரிசர்ச்சிமிஷியன்ஸ்கூல் தமிழ்ப்புலவர்

ம. ௱. ௱. சின்னுச்சாமி பிள்ளையவர்கள்

இயற்றியது.

திக்கனைத்தும் புகழ்நிறுவுங் கவிவாணர் செவிக்கின்பஞ் செறியத்தேக்கி
மைக்கடற் பூவுலகின்மிசை நிலவியதால் வயல்புடைசூழ் புதுவைவாழ்
வோன், கைக்கடக்குஞ் சரநிகர்த்த சவராயலெனும் புலவன்களுலக்கூறு
ம், இக்கனைத்துந் திரண்டனைய பலசெய்யுட்டிரட்டெனு மோ ரியனூல
ன்றே...................................... (௧)

சென்னை இராஜதானி பிரிச்சர்ச்சி மிஷியன்தமிழ்ப் புலவர்

ம. ௱. ௱. ரங்கசாமி ராசாவவர்கள்

இயற்றியது.

கலசலவென்றுலகினுள்ளோர்கூயத்திரியாதுளமடங்கிக்கதிர்ப்பவிந் நூ
ல், நலநலவென்றுவந்து நல்லோர்கொளப் பலசெய்யுட்டிரட்டை நய
ந்துசொன்னான், சலசலவென்றிருங்கடாம் பொழியானையுலாம் புதுவை
தன்னில் வாழ்வோன், வலவலவென் றெவருமுணா சவராயலெனும் புல
மைவல்லோன்மாதோ.............................. (௧)

சென்னை

ம. ௱. ௱. வீராகவசுவாமியாரவர்கள்

இயற்றியது.

கிரணப்பரிதி புனைமாமரிக்கன்னி கேழ்மதியச்............
சரணத்தருளுருவேயோ தேம்பாவணி தந்தமுனி.........
மரணத்துயிர்ப் புற்றிங்கெய் தினனே வறியேன்மனுயிர்த்...
திரணத்தரும் புகழ்சேர் சவராயலு செவ்வியனே........(௧)

சேடனென்றுலு மிராமாயணந்தமிழ் செய்தகம்ப.............
நாடனென்றுலு மொவ்வாது கண்டாயுன் னளிர்தமிழ்வி..........
சேடநன்னீர் மைக்கிணை நீ யலதொன்றைத் தேடமனம்..........
நாடலன் சீர் புதுவைச்சவராயலு நாயகனே...............(௨)

சொல்வர்பல்வாறருங் கற்பனையாய்ந்துன்றன் றேழமையைப்.
புல்வர்பொய்யே சவராயலுன் கல்விப்புலமை தந்த.........
ஒல்வாய்த்திறமைக்கு நேரிலையானு வயங்கொளிக்கு.........
மில்வாய்த்தபேரொளி சொன்னேனிது மெய்யிருநிலத்தே(௩)

அன்னையொப்பாய் நிறையார்வத்துலக ரருத்திக்குச்செம்...........
பொன்னையொப்பாய்ச் சுகுணத்தினிற் கல்விப்புலமையிலே.........
நின்னையொப்பாய் சவராயலுன்னாற்றற் கிணைநிறுவப்............
பின்னையொட்பாளை மதிப்பதென்னெஞ்சகம் பேதைமைத்தே...(௪)

கலையுமுணர்வுமளித்தாளு மாமரிக் கன்னியொற்று..........
ணிலையுமகிழ்வுங் கொடுன் சவராயலு நீர்மையின்பச்.........
சொலையும் ப்ரசங்கத்தையுங்கேழ்க்கிலாங் கெதிர்தோன்றுறுகற்.
சிலையுமிலக்ஷந்தரஞ் சிரகம்பிதஞ் செய்திடுமே..........(௫)

பணம்படைத்தாருண்டு பார்படைத்தாருண்டு பாய்பரிமா..........
கணம்படைத்தா ருண்டவர் களுக்கேதுண்டு காணுலகில்..........
வணம்படைத்தோங்கு செயகான்றவத்தினில் வந்துநல்ல..........
குணம்படைத்தாய் சவராயலு கௌரிகுலோத்துங்கனே........(௬)

தண்டாமரையும் ரவிகண்டலருந் தடத்திலுறை............
வண்டார்குமுத மதிகண்டலருமிவ் வையகத்தார்..........
கொண்டாடும்பூம்புதுவைச் சவராயலு கோன்முகத்தைக்.....
கண்டாலரும்பும் புலவோருளக் கமலங்களுமே.........(௭)

காதுக்கினிய விசையாளன் புண்ணியன்காமன்மலர்..............
மாதுக்கிசைந்த புயனடைந்தோர்தம் வறுமைகண்ட..............
போதுக்குதவிசெயுஞ் சவராயலைப் போயணுகா..............
தேதுக்கலைந்துழன்றீர் புலவோரொன் றிருப்பவரோ..............(௮)

வேறு.

காருறுமளவும் வானிற்கதிர்க ளுள்ளளவும் வேலை...........
நீருறுமளவுமிந்த நிலமுறு மளவுமேதன்................
பேருறும்படி பாகூரிற்பிறங்கு மாலயஞ்செய் வித்தான்...
சீருறுசெல்வங் கல்விதிகழ் சவராயலம்மா..............(௯)

சென்னை வித்துவான்

ம. ர. ர. அரங்கசாமி பிள்ளையவர்கள்

இயற்றியது.

சீரங்கம்வெண்டாள மஞ்சிறைக்கிள்ளை பணிதிருவலஞ்சுழிமயூரந் - திக
ழ்குழ ணுசுப்புநகைமொழியல் குன்முலையுந்திசாய லெழிலரிவையின்
று, பேரங்கசன் கணையினலரவினுண வாற்பிறங்குகமலப் பகையினற்
பெற்றதாய்பிள்ளைக்கு முதவாதபுள்ளினற் பெருகுமம்போதிதன்னாற்
சாரங்கவம்பகத் தாரங்கண்மலிதரத் தகையங்கமீதுற்றமற் - சற்றுணவு
மற்றுமயல் பெற்றனங்கற்றநடைதத்தநினைவற்றுநின்றாள், தாரங்கமட
மாதர் நோக்கமான்மேவிவளர் சந்ரவதனைவந்து கொஞ்- சவராயலதனின்
மாதவராயனெனவோங்கு சவராயலினிய முகிலே..............(௧)

வேறு.

அன்னைமரியிருசரண வம்புயத்தாடொழு செயகாலைய கோமான்.....
முன்னமியற்றிய தவத்தாலுதித்தசவராயலெழின் முகிலேகேண்மோ
உன்னதஞ்சேர் கன்னிகைக்குக்கண்ணுலுந்தனமஞ்சு நடையுறுங்கால்
கன்னமொருநாலுமுகமிரண்டுமெஞ் சோதியையுங் காணகளிக்கத்தானே

சீர்கொண்ட புதுவைமா நகரிலகுதெப்பீக செயகான் செய்யருமாதவச்
செல்வனென வந்தோங்கு சவாரயலினியநற் செல்வனேவொன்றுகேண்
மோ, தார்கொண்டவன்னந் தனந்தனஞ்சந்தனந் தந்தனம்வனசந்தனம்
தருகளநிதம்பமந்தாரை யெழிலுறுமேனி சந்தவிடை நடையானனம்
வார்கொண்ட வொளியாரம் வடவிலைப்பிறை தந்தம்வயறுநுதலானவிந்
த - மையலார்குழன் வனிதைமையலா ளினியுமையலா லொருவரிலை
காண், ஏர்கொண்டவனமிறங் காவிந்தவேளைதனி லிகலனங்கனுமிரங்கா
ன், இந்துசிந்தனையாலு நொந்துசிந்தனையுருதிதுசமைபம்வந்தருளகவே

வேறு.

தவராயவனி தனினின்றமுத்தாகடாம் வணங்குந்...............
துவராயனகந்துடியிதழ் கூந்தலஞ்சொர்க்கமிடை...............
தெவராவகற்கு மரிகளிகூராருள் சேர்ந்ததிவ்ய...............
சவராயலுக்குநவின் மயிலேயஞ்சசஞ்சலமே............(ச)

அத்தனஞ்செய் முகிலங்கமதர் விழியாய் குழல்காந்...............
தித்தனஞ்செய் யம்புயமாதுமையல் தெளிந்திருக்க...............
நித்தனஞ்செய் யென்பதைநீரழிக்கநிகர்ந்ததென்னே...............
சத்தனஞ்செய் சவராயலன்பாய்வரச் சாற்றுவிரோ............(ரு)

வானத்திலகு குபேரனன் மாலரிவாட்கமல...............
மீனத்திகந்தர மானனமோதிவிழி மடவாட்...............
கேனத்திமேமுலைக் கொல்லவிசையு மெழின்மடவீர்.........
ஆனத்தினஞ் சவராயல்வந்தாலிந்த வாயிழைக்கே...........(சா)

துறந்தாலும் பட்டணச் சாமிகள்போலத்துறத்தனன்று...............
சிறந்தாலு மந்தநற்கன்னனைப்போலச் செழித்தனன்று...............
அறந்தானியற்றித் தமிழ்ப்புலவோரை யளிப்பதற்குப்...............
பிறந்தாலு நற் சவராயலைப்போலப் பிறத்தனன்றே...............(எ)

நாற்றிசையெங்கும் புகழ்சவராயலு நாயகன்றன்...............
கீர்த்தியைக்கண்டு முன் மூவேந்தராசச்சொற் கேண்மையுற்ற...
பார்த்திபர்பெற்றநற் கீர்த்தியெல்லாமொளிர்பார்க்கரன்மு.....
னீர்த்திரையுற் றெழுசந்திரன்போலொளி நீங்கியதே.......(அ)

இரும்புங்கனிந்து செந்தேறைக் கல்லுமிளகமன்னர்...............
விரும்பும்ப்ரசங்கஞ்செயுஞ்சவராயலை மேவுதற்குக்...............
கரும்புங்கதலியுமாவும் பலாவின்கனியு மின்ப...............
மரும்புஞ் சுரும்புங்கொண்டோடிவந்தாளிந்தவாயிழையே.......(கூ)

வேறு.

புண்ணியந்திரண்டயாக்கைப்பூபதி செயகான்மன்னம்...............
பண்ணியதவத்தால்வந்த பாவலன்சவராயற் கோன்...............
எண்ணியிங் கமைத்ததிவ்யவெழில் கோடேவாலயத்தில்...............
நண்ணிய பரமதாயினல்லெழிற் கிணையேதம்மா...............(ய)

புதுவைவித்துவான்களின் பாடல்கள்.

சங்கைக்குரிய இராஜரிஷி குரு சுவாமியாரவர்கள்

அ. அருள் நாதசுவாமியாரவர்கள்

இயற்றியது.

நற்றவர்வேதியர் துரைமாரறிஞர் மடாதிபர்வாணர் நன்குபன்னூல், கற்றபலசமையர் நிதங்களிக்கப்ப்ரசங்கஞ்செய் கவிஞனென்றிங், குற்றசவராயலு தேவாலயத்திலாண்டவரா லொளிர்மெதாயில், பெற்றபெரும்பேறுலகிற்பிறந்தவரிற்பெற்றவர்யார்பேசுவீரோ.

பெருந்திறஞ்சால் நஞ்சவராயலு வலவன்றனைப் போல்யாம் பிரசங்கிக்க, அருந்தமிழைக் கற்பினுஞ்சொன்னயமுறுமோ வுறினும் பேரவைக்கஞ்சாமைப், பொருந்துமோவுறினுமின்னிசையுறுமோ வுறினுஞ் சொற் போர்செய்தற்கு, வருந்தமிழ் நாவலவரொடு வாதுவெல்லுந் திறமுறுமோ வழுத்துவீரோ............(உ)

சொன்மாட்சி பொருண்மாட்சி யணிமாட்சி யொடுபுலவர் தொகுத்துக்கூறும், பன்மாட்சிகளுமமைய வருண்மாட்சி குதிகொளப் பல்பாச்செய்தோவா, வன்மாட்சி யறப்பிரசங்கஞ்செயு நின்வலிக் கொப்பாராரோர்நீயே, நன்மாட்சிவளப்புதுவை வளர்சவராயலு சுகுண நாவலோயே ....(௩)

சங்கைக்குரிய இராஜரிஷிகுருசுவாமியாரவர்கள்

அந்தோனி நாதசுவாமியாரவர்கள்

இயற்றியது.

தண்டமிழ்க்கவிஞர் சவராயலு நாயகருக்.........
கெண்டவிராசியை யீயுமோர்முனி...............
விண்டவிற்பன்னம்..................................(க)
தவாமலருண்மறைசாற்றியமா...............
தவனுல்வனிதாரணிசார்மணமே.............
எவர்வாயினுமின்புறவேநவிலுஞ்...............
சவராயலுதண்மொழிசாலகனே...............(உ)
நினையானவண் விட்டிவணேகியகா......................
லெனைநீமறவா யெனவேயொருவாய்..................
தனையேசொலினேன்மறந்தாயிலையே....................
நனேரிசைநாவலநன்மணியே.........................(௩)

இருசக்கரமொண் டிரிபந்தமவை..............................
தருமக்கரவாசகந்தன்னிலுள..............................
பொருளைக்கிரமத்தொடுபூரணமா ....
யருளைத்தருமாண்டவனாலுணர்ந்தேம்..............................(ச)

மதுவாயினனீ சிலமானிடரோ..............................
பொதுவாயினபொன்னிலைபோக்குவதா..............................
யெதுவாயினுமிந்நிலமீந்திடுக ....
முதுவாயினர் காட்டிய முன்றடமே..............................(ரு)

தனிநாயகனேற்றிய தத்துவனே..............................
யினிநாளுநீ யின்புறவாழுதியே..............................
நனியாண்டு பிறந்ததி னாவலவா..............................
தொனினாவொடு தோத்திரஞ்சொல்லுதியே..............................(சு)

நிலையாகிய நூல்பல னெஞ்சிலுளோய்..............................
கலையானறியே னதுகண்டெனபா..............................
மலைபோலுநின்மா மதியாலிகழேல்..............................
சொலையேற்றிய வழ்த்திய சூசகனே..............................(எ)

சங்கைக்குரிய இராஜரிஷி குருசுவாமியாரவர்கள்

தாவீது நாதசுவாமியாரவர்கள்

இயற்றியது.

சீரார்ந்த வீரமாமுனிசெய் தேம்பாவணியாந் திவ்யநூலை, ஏரா
ர்ந்த கலைகளொருங்குணர்ந்த சவராயலுவேளென்னுங் கோமான்,
பாரார்ந்தவெவர்களுமின்புற்றிறும்பூதுறவிரித்துப்பயன்றெரித்து
ப், பேரார்ந்தபெரும்புகழ்பெற் றாண்டவராற்பொற்றகடும் பெற்றா
ன்மாதோ..............................(க)

காவியங்கள் புனைவர்மிறைக்கவியுரைப்ப ரியல்விரிப்பர் கற்றோ
ர்மற்றோர், மேவியிறும்பூதுறப்பண் ணாய்ந்துபிரசங்கிப்பர் விந்
தையாக, ஓவியக்குஞ்சீர்த்தசவராயலு நாயகவலவனுழை கற்றோ
ரோ, தாவிலவனேபலபாவினம்புனையி லன்னவையின்றகையென்
சொல்வாம்..............................(உ)

சங்கைக்குரிய இராஜரிஷிகுருசுவாமியாரவர்கள்

சி. ஞானப்பிரகாச நாதசுவாமியாரவர்கள்

இயற்றியது.

தேவசுதன்கைத்தாதை சீர்த்தகன்னிமாமரியின்..............................
காவலனாஞ்சூசைக்குக் காதலுடன்வீரமுனி..............................

தேம்பாவணியென்றோர் சீர்மிகுத்தகாப்பியத்தை...........
நாம்பாடிமெச்ச நவின்றிட்டாரஃதின்...........
பயனறியாதேங்கிநின்ற பல்லோர்துயர்போய்...........
வியப்பச்செயகான் மிகவன்பாயீன்ற...........
தவப்புதல்வன்மெய்யான சாத்திரங்கடேர்ந்தோன்...........
சவராயலுமால் சமர்த்தாவிளக்கஞ்...........
செயக்கேட்டவன்றன் றிறமதனைக்கண்டு...........
நயந்தார்புதுவை நகர்வாழ்துரைகள்...........
கலைதனிற்றேர்ந்த கனவான்கள்பலபேர்...........
உலகினிற்சத்தியவொண்மறையோதுங்...........
குருப்பிரசாதிகள் கூடியசங்கத்...........
தாசாய்விளங்கிய ஆண்டவராங் கொதேல்...........
மாமுனிகையால் மகிமைமெதாயில்...........
எமமாயன்னவற் கீந்தனரான்றே...........
அப்புலவன்றனை யடியேன்புகழ்ந்திட...........
இப்புறமேதுண் டெனக்கு...........(௧)

சங்கைக்குரிய இராஜரிஷி குருசுவாமியாரவர்கள்

மரியப்பிரகாசநாதசுவாமியாரவர்கள்

இயற்றியது.

மாண்டவத்திலுயர்வீர மாமுனிதேம்பாவணியைமகிழ்ந்தளித்தார், ஆண்டவரன்னூற் குறைசெய்சவராயலு மகிபற்ககம்பூரித்துக், காண்டகு நன்மெதாயிலெனுங் கனகத்தேம்பாவணியைக் கனிவி ற்தந்தார், தீண்டருமிவ்விரண்டணியிற் சிறந்ததெந்தவணியென்று செப்பலாமே...........(௧)

பரீசுபட்டணத்திலிருக்குந்துரையவர்க ள்

ழூலியேன் வேன்சோன் துரையவர்கள்

இயற்றியது.

சீரியபுகழடைந்த திருச்சவராயலுக்கே...........
யாரியவவன்றேவிக்கே யகலுலகாளுமேலாம்...........
பேரியற் கடவுடேய்நீர் பெய்யும்பரிருக்குமைய...........
னேரியன்மதியோடாக்க நிறைசுகமருள்கவன்றே...........(௧)

மரியதாயினுக்கடியன் வேதியர்குமாதவர்க்கும்...........
பிரியன்செந்தமிழ்ப்பாவலன் பேசுநம்மன்பிற்...........
குரியன் நற்சவராயலுநாயக னுரைத்த...........
அரியபற்பலபாக்க ளிவ்வுலகத்துக்கமுதே...........(௨)

தருமக்கல்விச்சங்கம்

ம. ௱. ௱. சிற்றம்பலஉபாத்தியாரவர்கள்

இயற்றியது.

பூம்பாவையோங்கும் புதுவைச்சவராயலு வலனுற்.................
கூம்பாப்புலமையின் மிக்கோர்கலைகள் குறைவறவே................
தாம்பார்வையிட்ட தமிழ்வீரமாமுனி சாற்றுநல்ல...................
தேம்பாவணியின் பொருட்சுவையாவர்க்குந் தித்தித்ததே............(க)

ம.௱.௱. முத்துக்குமாரசுவாமிஉபாத்தியாரவர்கள்

இயற்றியது.

சீரோங்கியதேம்பாவணி திகழப்பிரசங்கஞ்செய்யுந்திறனும் பாவலர்சிந்தைக் கினிதாகப்,பாரோங்கியபலபாவொடு பதிகந்துதிமுதலாப் பாடிப்புவியரசன்றுபி ராய் முன்னமெதால்பெற், றேரோங்கிய சவராயலு வெனுநாவலனுலகோ ரெவ ரும்புகழ் நிபுணன்றனை யிதமேமிகுசுகுணன், நாரோங்கிய செயகானுலகோர்க் கீந்திடுநலனை நாவாயிரமுறுசேடனு நவிறற்கெளிதன்றே..................(க)

தவராயனெனும் வீரமாமுனிவன்செய் தேம்பாவணியின்றன்மை.....
எவராலுஞ் சொலவரியதாயினு மன்னதன்பொருளை யெளிதி னேர்ந்தே.
யுவாழிப்புவியகத்து நஞ் சவராயலு மகிபனுணைப்பதன்றி..........
நவராக முறப்பலபாக்களு மியற்றியச்சிட்டு நல்கினனே..........(உ)

இராஜ நீதித் தமிழ்க்கிறேப்பியேர்

ம. ௱. ௱. கந்தப்ப—சபாபதிமுதலியாரவர்கள்

இயற்றியது.

சிருறுநற்செயகான் சேய் நஞ் சவராயலு வாண்டிற்சிறியனேனு...........
மியாருலகினிகர்வ ரவனியற்றமிழ் நன்காய்தரு மாசிரியர் போற்றத்........,
தேருறுதேம்பாவணிக்காப்பியக்குறை செய்திறவானற் செல்வங்கல்வி........
சாருறுசாந்தஞ் சால்புவாய்மைதூய்மையிற் சிறந்த தகைமையோனே......(க)

உருவினைக்கண்டெள்ளாமை வேண்டுமெனுமுரை நிசமென்றுலகர்த்தேற்றித்
தருவெனநற்கவிப் பொருளையொழியாதுதரவந்த தரணித்தாரு.............
மருவுதிருச்சபை முனஞ்செய்பிரசங்கத்தான் மெதால்மகிழ்வோடேற்றுப்......
பெருகுநாவலர்தந்த கவிமாலையுடனணியும் பெரியனம்மா..............(உ)

செந்தமிழ்ப்புலவர்

ம. ௱. ௱. வெ. பொன்னையாமுதலியாரவர்கள்

இயற்றியது.

மையில்சீர்ச்சூசையென்னும் வளனணிமான்மியங்கள்...............
எய்தியசரிதத்தேம்பாவணியெனு மிலக்கியத்தை..................
வையகம் வியக்கநன்கு மதித்தியற் பிரசங்கமெங்குஞ்...............
செய்சவராயலுப் பேர்ப்புலவன்சீர்ச் செப்பாரியாரோ..............(க)

கவிராயசிங்கம்

ம௱௱ அருணாசலதேசிகரவர்கள்

இயற்றியது.

வட்டநெடுங் கடலுலகிற் செயகானென்னும் வள்ளலருந்தவவரோ தயமாய்வந்தே, அட்டதிக்கும் பரவுதமிழ் வாரிதன்னை யருந்தியவைக்ககனமுற்றேயலர்வாய்ச் சொன்மின், கொட்டவிசைமுழக்கெழுப்பிக் கேட்போர்காது குளிர்தரப்பா மழைபொழியுங்கொண்டல் கோது, விட்டசுவைக்கழை சவ்ராயலுவேள் போல மேதினியிலியாவருளார் மெய்மையிதே..................(க

கவரன்மெண்டு இஸ்கூல்உபாத்தியாயர்

ம௱௱ கோவிந்தபிள்ளையவர்கள்

இயற்றியது.

தேடாதபேரில்லைச் செம்பொன்னைநாடொறுந்திண்புவியை............
நாதபேரில்லைப் பாங்குடன்மேவி நயந்துபெண்ணைக்...............
கூடாதபேரில்லை நஞ்சவராயலு கோமகனைப்.......................
பாடாதபேரில்லை யில்லைகண்டீ ரிந்தப்பார்தனிலே................(க)
மறந்தானியற்றிப் பொருள்சேர்த்துலகின் மறைத்துயிரைத்..,.............
துறந்தார் தமக்கிப்புவியி லென்னுந்தவஞ்சூலகிற்........................
சிறந்தான்புதுவைச்சவராயலு செயகான்றவத்திற்........ ....
பிறந்தானிந்நாட்டிற் புலவோர்க ளியாரும்பிழைத்திடவே................(உ)

செந்தமிழ் உபாத்தியாயர்

ம௱௱ சாமி-பொன்னுசாமிமுதலியாரவர்கள்

இயற்றியது.

பூமேவு மைந்திலக்கண விலக்கியமெனும் பொற்கடலையுண்டடுத்த-புதுமையுறு மாணுக்கரிதயமாம் பணையினிற் புகாவித்தைத் திடர்குழிப்-போக்கிவித்தப்பயிர்தழைத்தவர்களின்புறப் பொற்கலைகள் பொழியுமேகம் - புவிராஜர் போற்று கவிராஜன் பொன்னுச்சாமி புரிவுகொண்டோச்சு கடிதம், காமேவுபுதுவையம்பதியிலதிபதிநிதிக்க நுணாயிவையுற்றசுகுணன் - கருதுசெயகான்செய்த படிவத்திலுற்றவாகை புனையுமெழிலியனையான்-கலைகற்ற நெறியுற்ற கலைவலார் புகழ்பெற்ற கன்னன்வித்வப்பிரபுவாய்க்-கதறிக் கவிக்கய மொளிக்கப்பிரசங்கதொனிகாட்டு மஞ்சாதசீயம், தேமேவுமாலையணி திண்ணிய புயாசலன் செய்யளிச் சாலைபோல்வான்-செப்புமிங்கிதவசனன் சவாாயலென்னுநற் செல்வனின்போடுகொண்க- தேர்ந்தன்பருக்குதவுகின்றவனீயாதலாற்றெறுவாடையானிமத்தால்-திவலையாற்றினகானல்வெப்பினால் வாடித்தியங்காமலரணுயுறப், பாமேவு திரையெழாவம்பரம் நீரிலாப்பட்ட மறையாவுடுக்கை பாயாதகலைவிடம் பற்றுத நாகம்வாய்ப்பரியாதவின்வத்திரம் - பற்றலராடாத்தானை பண்டமேவாச்சாடி பாலின்மேவாத வாடை-பக்குவமதாகவையாறு பொன்னுற்கொண்டுபெண்பினெற்குத்தருகவே..................................(க)

தருவர்னிணைவர்ன் றருசவராய
லுருவானுவந் தாரிலுற்ற - திருவாரு
ரேக்கத்திநுலலலைவா னெம்போல்வீ ரெய்துமவ
ருக்கத்திநுலவிரலாம் (௨)

ஆதிமத்யாந்தமா யகளங்கமூர்த்தியா யற்புதவகோசரமுமா - யறிவதற்கரி தான பேரின்பவெள்ளமா யமலநிற்குணமுமானோன், சாதிகொள் சரோருகம லற்கிணையிணைக்கழல் சதாகாலமுஞ்சிந்தைசெய்-சற்குண விவேகசம்பூரணன் கலைஞர்புகழ் சகலகலைவித்வதுங்கன் தாதுற்றதசமும் வெண்கவரியும்புனைத ருதராசுடன்தாவில்கயமுந்-தவமருவு சிவுவையு மானவிவைநாப்பணுறு த கையக்கரங்கண்மருவுங், கோதற்றகோன்பெற்ற பேருற்றநண்பகேள்குலவுமிக் கடிதமதனைக் - குவியன்புகொண்டுநிற் கெழுதிவா விட்டனன் குறிப்போ டெதிர் கொடுகொண்கவே...* .(௩)

தேம்பாவணிமருவுந் தேம்பாகினன்மொழியார்
தேம்பாவணித்தந்தைத் தேற்றினுன் - தேம்பா
செயகானளித்த சவராயலு வேள்சீர்த்தி
செயகானல்லோரவையிற் சென்று. (௪)

பாவலருங் காவலரும் பாலகருமேலவரும்
பாவையரும் பார்த்துண்ணப்பாத்திட்டான் - தேவடியைத்
தேம்பாமலேற்றிடுநற் சீயசவராயலுமால்
தேம்பாவணியென்னுந் தேன். (௫)

வீரமுனிவனுரை வீறுதேம்பாவணியின்
சாரமுணர்ந்த சவராயலுமா - லேரமரச்
சொல்லும் பொருளுந் தொடையுநடையுந்துறையும்
பல்லணியுங் கொண்டுரைத்தான் பார் (௬)

அவக்காவர்னந்தரா யன்மனையார்குன்றிற்
றவக்காவாநந்த தருதாதா - நவக்கானுர்
சீயசவராயலுமாற் றேம்பாவணியமுதைத்
தூயகவிகட்களித்தான் சூழ்ந்து. (௭)

வீரமுனியுரைதேன்மேவு தேம்பாவணியாம்
வீரமுனிருண்டு விபுதரிசை - வீரமணி
ஆனந்தராய னகநகத்திற் பெய்முகில்செய்
யானஞ்சவராயலு. (௮)

பாரிலங்கிய சீர்த்தியுற்றிடுபோக்கியன் கனயோக்கியன்-பாமனுனந்தராய தீர னற் பாவலர்புகழ் நேயன்வான், காரிலங்கிய மாமணிப்பொதி கனகமாளிகை தன்னுழி-காமரோங்கலின் மீதமர்ந்திடு காட்சி கன்னிவளன்சுதன், சீரிலங்கிய வீரமாமுனி செப்புதம்மருஞ் சரிதையைச் - சீலனுஞ்செயகானளித்திடு சேயனு மதிசூரனுந் தாரிலங்கிய திண்புயன்கவி தானமாக்கடனேறனுன் - தாவிலாச்சவ ராயலுப்பிரசங்கநாடலையொக்குமே. (௯)

தக்கபுகழ் வித்துவான்சாமிநாதன் புகன்றதருமஞ்ஞானு
திக்காரயன் காப்பியத்தி னரும்பொருடேர்ந்துதிறமையோர்முன்
முக்கனிக்குமிக்கினுக்கு மிக்கினிக்கு மொழிகளுற முறமையோடு
மிக்கவிதப்பதவுரையை நஞ்சவராயலுவலவன் விளம்பினுனே (௰)

மதியுலாமதிலார் புதுவையம்பதிவாழ் மன்னரோத்திடுமெதியூகி-மதிமிகுவள்ள லானந்தராயன் மனைவயிற்சாமிநாதன்சொற், முதியுலா ஞானுதிக்கர்காப்பியத்

தின் சூழ்பொரு டருகெனச்செயகான் - றுன்றுமர்தவத்தி லவதரித்தோங்கிச் சு
டர்சவராயனுவலவன், நிதியுலாமமுதின் மதுரமதுறவே நிகழுதேன்மடை தி
றந்தனவே- நேருமுத்தமிழ்நாற் கவியுநாற்பொருளு நீர்மையோடறிந் தணியு
றவே, விதியுலாமேற்கோள் காப்பியந்தொன்னூல் வியனிலக்கணமுலகியல்
பும் - விளங்குறக்காட்டி நாவலரவையில் விரியுரை யோடுரைத்தனனே. (௰௧)

கவரன்மெண்டு கல்விச்சங்கம்.

ம. ரா. ரா. சுப்பராய உபாத்தியாரவர்கள்

இயற்றியது.

திணியுறும் பனைத்தண்டலைத்தளி ரலரிற்றிகழு மஞ்சங்குலாம்வ
ளனுந்-தெரிவையரளகங் கண்ணகைவதனஞ் செவிசரநாசிநாக் குந்திச்-
செம்பத விரனகந்தமைவாவித்தேமலர் காட்டிமோண்புந் - திரையொ
லியனைய வாவணச் சீருஞ் செழித்திடும் புதுவையில்வாசன் - ஜெகம்பு
கழ்செயகான் நாயக சுகுண தென்பணிலம் பெறுமுத்தாஞ் - செரு
க்குடையவர்நூல் சிலம்பிநூலாக்குந் திறத்தின ஞசுமாமதுரஞ் - சித்ர
வித்தாரக் கற்பனைக் கவிதைத் திவ்யகீர்த்தனமுடன் பதங்கள் - தே
னுங்கைப்பெனச் சங்கீதசாயித்யந் தெளிந்துபாடுதறனி னிபுணன்,
பணியுறு நப்போல்வளையென வெளவைபகர்ந்திடு மொழியினைச்சிவ
ணப் - படர்ந்திடுங்குலத்தைத் தழுவுவோனுளும்பனிமதுரா மிரதுவ
ஜனன் - பாவலரிவன்போ லவையயஞ் சாமற் பாக்களைப்பிரசங்கம்புரி
யும் - பண்புடையவரைக்கண்டு கேட்டிலநம்பாக்கியமென்று கொண்
டாடிப் பக்ஷமதாகக்கவியணியணியப்பரித்திடு புயத்தனல்லயத்தன் - ப
ன்னிடவலன் சோர்விலனஞ்சானவன்றன் பகைவெலலியாவர்க்கு மரிதெ
ண் - பகர்ந்த வள்ளுவரினுரைக்குச் சான்றுளேன் பத்துக் கற்பனைவ
ழியொழுகிப் - பாரகாவியங்களேர்ந்திடுமறிஞன்பதி சவராயனுமேகம்,
மணியுறும் பன்னூல் கற்றனைத் தூய மதியெனக்கவிஞர்கள் வழுத்தும் -
வண்ணமுற்றோங்கி யெத்தலத்தினுமன் மானுடர்தமைவெல்லும் வலவ
ன்-வண்கடவுடனைக்கருதிடுதலத்தால் வயங்கிடு வீரமாமுனிவன் - வைய
கமீதிற் புகழுடம்பதனை மருவிடக்கருதி வண்டமிழால் - வாக்கிற்றுதி
ன் வழுப்பொருட்சோர்வு மன்னிடாதிசைத்து நற்கிறீஸ்து மார்க்கமாங் க
தையை யமைத்தினி துரைத்தவளங்கொடேய்பாவணி நூலாம் - மதுத்தி
யையருந்தித் தமிழ்ப்பிரசங்க மாரியைமனதுவப்பாவம் - மரபுளோர்
தமது கேளவியஞ்செவியாம்வாயிடைப் பெய்ததன்னோர்கள, அணியு
ம்மனமாங் கழனியிற்பாய்ந்தே யவமெனும்வெப்பகன்றென்றும் - அ
றிவெனும்பயிர்கடழைத்துப் பேரின்பமாங்கதிர்விளைவினுற்பிறங்க - வ
மைத்ததற்கா மாதாவினுலயமுன்பாகவவ்வன்பர்க ளொருங்கும் - அவை
யினி நாப்பணவிரு மேற்றிராணியார்முதலாகியவதுலர் - ஆசிகளகூறி
மந்ரபுத்தகங்க ளளித்திடவறநெறிபிறழா - தரசுசெய்குவர்னே ராதி
யாந்துரைமாரகமகிழ்ந்தவரவர்வசனம் - அதிலடக்கியவொண்புகட்சியை
புரைக்கவாதரவுடன்திருச்சபையார் - அரியவேலைகளசெய் பொன்மெதா
லளித்தாரதன்கன மொழிந்திடவரிதே. (௧)

தருமக்கல்விச்சங்கம்

ம. ா. ா. சந்திரசேகர ஐயரவர்கள்

இயற்றியது.

துலங்குசிராமலையிலமர்தமிழ்முனியாமீனாட்சிசுந்தரனற, னிலங்கரு ளாற் செந்தமிழ் முற்றுணர்ந்த சவராயலுவேளென்னுங்கோமா, னிலம் புகழச்சொற் றேம்பாவணிவழங்கித்திருச்சபையானிசராச்செல்வ, நலத் திகழும் பொற்றேம்பா வணிபெற்று ஞாலயத்தினுப்பண்மாதோ. (க)

ம. ா. ா. பச்சையப்பமுதலியாரவர்கள்

இயற்றியது.

நதிமலிந்தமலர்ப் பொழில்சூழ புதுவையில்வாழ்நாவலர்நாயகனுமிக் க, மதிமலிந்தசெயகான்செய் மாதவத்தால்வந்தருள்கோமானுமிந்தப். பதிமலிந்தகாவியமைந்திலக்கணங்களறிந்துயர்பாவலனும்பாணர், துதிம லிந்தகுணச்சவராயலுதேம்பாவணிக்கருத்தஞ் சொலலோர்மாண்போ·

வந்தக்காசுக்குவட்டமிலையெனும்வாறுபோல்லுக்தர்மீதினிலேநிதஞ், சந்தப்பாட்டுகளபாடியசங்கடந்தளளியேதழைக்கும்புகழுக்கெலாஞ், சொந்தக்காரனெனுஞ்சவராயலு தூயன்மேற்கவி சொல்லத்தரித்திாம், எந்தக்காலமுந்தான்வந்தணுகுமோ வெங்குங்கீர்த்தியிலங்கியவாணரே.

ம. ா. ா. குமாரலிங்கவாத்தியாரவர்கள்

இயற்றியது.

தோகைமயில் தங்குமலர்ச்சோலைசூழ் பாகூர்வாழ்............
வாகைசவராயலு நம்மாவலனை - யீகையினிற்..................
கன்னனென்பார் பன்னூலைக் கற்றோர்தமிழ்வளர்க்குந்.........
தென்னனென்பாரிங் கிவனைத்தேர்ந்து ....(க)

திக்கெட்டுமோடித்திரிந்தாலுஞ் செம்பொன்னுங்கள்..............
கைக்கெட்டுமோ புலவீர் கட்டுமையின் - மைக்கட்டும் ....
மாடமார் பூம்புதுவைவாழ் சவராயற் சுகுண.......................
நீடுபுயலிங் கிருக்க நீர்..(உ)

சென்மவிராக்கினிமாதா கோவில்வாத்தியார்

ம. ா. ா. சின்னத்தம்பிமுதலியாரவர்கள்

இயற்றியது.

உலகெலாமமையும் விண்ணிடை யமையா தொளிர்புக ழார்ந்துயர் செயகான், நலமிகு தவப்பேறிதுவென வந்தநஞ்சவராயலு மகிபன்

பலநயஞ்செறிந்த பதத்திலோர்பதத்தாற் பதமடைந்துய்குவர்நாளும்
இலகுமப்பதத்தை வாயினாற்புகழ்ந்தே யின்பொடுவணங்கிடுவீரே(௧)

தீவான்நயினாத்தை

ம. ரா. ரா. அபராமுதலியாரவர்கள்

இயற்றியது.

இலக்கணநிலைபெற விருநிலத்தின்மேற் ....
புலக்கமன்னிலக்கணம் புனையும்வித்தகர் ....
கலக்கமுற்றணங்குறக் காணுஞ்சிங்கமே ....
வலுக்கொளுஞ் சவராயலுமன் வாழ்கவே ....(௧)

பரித்திடல் கடவுளியற்கை நல்லொளியைப் பரப்பிடலாதவனியற்கை, விரித்திட லினியமணமலரியற்கைவேதமெய்ப் பொருளெலாமெவர்க்கும், உரைத்திடல் புதுவைவித்துவான் சவராயலுவெனு மொப்பிலானியற்கை, நிரைத்தணிப் பாவாலின்னவன்புகழை நிகழ்த்திட லியற்கையா மெமக்கே ....(௨)

அறம்பொருளின்பமரிய வீடென்னவறைபொருள் நான்கையுந்திரட்டி - அகனிலத்தோர் தங்கலியிருளகலவான்ற தேசிகனெனச் சிறந்த, திறங்கொளும் வீரமாமுனிப் புனிதன் திண்ணியபேழையுளடக்கித் - திகழுறுதேம்பாவணியெனு நாமந்தேர்ந்த தற்கிட்ட தன்றிறப்பை, மறங்கடிந்தொழுகுந் துப்பிமாமுனிவன் வண்கையிற்செலுத்திடவறைந்த - வண்ணமன்னவனப்பேழையையடைந்துவான்பொருள் நான்கையுமுணர்ந்து, புறங்கணிப்பகற்றியாவருங்கொளவேபுரிந்தன னனந்தராயன் - புக்கில் வீதியிற் சவராயலுவென்னும் புலவனும் வணிகனைத்தெரிந்தே.. (௩)

சீரியதேம்பாவணியின் பிரசங்கத்தைச் செயகான்சேப்நஞ் சவராயலுவாமேலோன் - திரிசிரன்றன்புரஞ் சேலங்காரை சென்னைசெழும்புதுவையிற் செயச்சிங்காரமாக, எரியவக்காப்பியத்தை யொவ்வோர்செய்யுட்கிசைந்த விசையோடே வருங்குதுகலிக்க - எவ்வளமுமருவு புதுச்சேரியாசானெனப்புகலுங் கனகராயன் குமாரன், தேரியதங்கப்பிரகாசம் மரங்கிற்சீரோடும் வாசிக்கவிவற்றைக்கேட்டோர் - செப்பவொண்ணாவவசமுற்றிவ் வமுதமாரச் செவியிரண்டின் லேலிலையே யெனவுலைந்தார், பெரியவவ்விருவரொருங் கெற்றேயென்னிற்பிறங்குகாலைக்கதிர்போற் சேந்தரத்நம் - பீடுறுதங்கத்தகட்டி லமர்ந்தாற்போலும் பேசமற்றும்வேறுவமமரிதென்னலே ....(௪)

தேம்பாவணியுந்திகழ் பொருளும் யாப்பணியு...............
மேம்பாடுடன் மேவுவித்தகனுக் - காம்பொருளோ...........
இப்பொற்றகடுமே யித்தகையோற்கீய்ந்தவருக்...............
கொப்பில்புகழேயுறும் ....(௫)

விரைந்துதொழில் கேட்குஞால நிரந்தினிது.....................
சொல்லுதல் வல்லார் பெறினேற் - கரைந்து.....................
மனமே சவராயலு வலனைப் போற்றற்.....................
கினமென்ன வைய மியம்பு.....................(௬)

வித்தகனுக்குப் பரிசுவித்தகரா லேத்தலே.....................
இத்தரையிலீகை யியம்புவேன் - நித்தியமா.....................
மேவுந்தகையதோ வியுருதிக்கவியும்.....................
பாவுமுலகிற் பரந்து.....................(௭)

நாவலருரைத்த மூதுரைப்பலர்தந் நாத்தழும் பேறிடநவின்றும் - நாடகவொனவேயந்நெறி மருவார் நானிலத்தவர்க்குரைசெய்வார், பாவலசவராயலுவெனுநாமம் பரித்தவென்னன்பனேபடியிற் - பரவுதற்குரிய கோயிலில் லூரிற் பதிதலொன்றுதெனவுரவோர், கூவியவுரையைக்கொண்டு நின்னுளத்திற்கோவிலின்றிருந்த பாகூரிற் - கோட்டமொன்றியற்றக் குறைந்துமாடுன்பாற்குருக்களைக்கொண்டதையியற்ற, ஆவலையடைந்தவ்வண்ணமேபுரிந்தாயற்புத மாதுலரோனும் அறவழிவிடுக்கா ரடுத்திரந்ததனையயர்குவா ரன்புடையவரோ.....................(௮)

சீரியசர்வேசுரனுமேசுக்கிரீஸ்து தேசமெல்லாந்தினகரன்போல் விளங்கித்தன்னைத்- தேர்ந்துறுவப்போஸ்தலராங் கதிர்களாலே திமிரமெனுமக்யானந்தன்னையோட்டித் - தேசுவெனுஞ்சத்யமறை யெங்குந்தந்தசெயலதுபோற் கொதேலாமேற்றிராணியாரோ-சீதமுறு துபுவீசுசீர்லெயோதே தேர்குப்யோஞ்சிறந்தமுசே தாராசான்ரீப், பேரியலவேறு சேக்மிலேர் தர்பேசு பிறங்கலுறு தெலெயாழ் தாவீதுநாதர் - பீடுறுமோர்மரியப்ப்ரகாசநாதர் பீழையுறு மேனையோர்பக்கஞ்சூழப்-பேதகமின்றிச் சிந்துதேயந்தன்னிற் பெட்பினுடன் சத்யவேதம்போதிப்பீர் - பேணியுமதுபயபதமுடிமேற்சூடும்பேதையேனயினுத்தைபிறழக்கேளீர், கூரியதாமுணர்வளிக்கும் பலவாம்பாலைஷிகோதறவேயாராயுங் குடிகண்மற்றுங்-கோக்களுறு பெருநகரிலக்யானத்தைதக் குடியோட்டலொருவியப்போகோதிற் கல்வி-குறையுநொச்சிப்பட்டிக்க்ராமங்கடம்மிற் கோயிற் கடாபித்துக் குருக்கணாட்டிக் கோப்புடனே போதித்தாற் சத்யவேதங் கொடுக்குமிகப்பயனெனவே செயகான்றந்த, தேரியனுஞ்சவராயலும்மைக் கோரிச் செய்வித்தானொரு கோயில் பாகூர் தன்னிற் - செம்மல் பெற வதின்மேவு மாதாவுக்குத்திகழ்செயராக்கினியெனும்பேர்தந்தானன்னுள் - திவ்வியசெயராயலெனு மச்சேய்க்குற்ற தீங்குமொழித்தளித்தாளீதிறும்பூதன்றே - தீரியவாண்டவரோ பல்விடத்தம்மாதா திறமுறவேசினகரங்கள் செயவிப்பீரோ.....................(௯)

கலித்தடர்ந்த பிலித்தையரைக் கவண்கொடன்று செயித்தரசுகதிக் கச்செய்தான், வலித்தடக்கைத்தாவீத னஞ்சவராயலுநாமவலவன்பாகூர், நிலத்தடரொன்னுர்கடமைச் செயித்தணியாலய மொன்று நிலைப்பித்தான்மீ, தலத்திலும் பூதலத்திலும் பாதலத்திலுந் தன்குலத்தினின் சீர்தழைக்கவென்றே.....................(௰)

தீதிலாமறை நான்மற்யுந் தெளிந்துயர் தெலெயாழென்னுங்..
கோதிலாமுனிவன் கையாற் குறித்தவாறமைக்கவல்லான்.....
போதமார் சின்னத்தம்பிப் பிள்ளையாம் பூபனென்றே........
மெதகு சவராயற்கோன் மெச்சின துண்மையன்றே.....(௧௧)

கலியைத்தருகடல்சூழ் புதுவைப்பதிக் கண்மருவிக் ....
கலியைச் செயித்த நயினுத்தை மேலுங்கடியவதை..................
வலியச்செயலிலன் வாய்க்குந்துணையிலன் வல்லையவன் ....
நலியச்செலுத்தியதைச் செல்வனென்ன நமன்சொலவே.......(௧௨)

சொல்லோயுமுன்னென் முன்வந்தக் கலிசீர் தூட்ருமுவல்......
சொல்லேயும்வள்ளற் சவராயலைக்கண்டு துண்ணெனவே......
நிலலெனிவணமநின்பணிகேட்டென நீங்கியதால்...........
வெல்வேனெனவெண்ணிய நமற்கையம் விளைந்ததுவே...(௧௩)

சீர்மேவுமைந்திலக்கணமார்களஞ்சியன் தேற்றமுடைமதிவல்லவன்-செப்புநாற்கவிவலா ரொட்பமுடையானெனத் தேர்ந்துதுதிசெய்யு நிபுணன்-செல்வியைவிழைந்துபாமகளைமுனிபிசுனர்தஞ்சீற்றத்தையோட்டியன்ஞர்-செகதலத் தௌதாரியத்தின்ஞற் பீடுறச்செயவிக்கு மாற்றலுடையன், ஏர்மேவுபார்மகட்கியலுமுமதாணிபோலிலகிவளமேவு புதுவை-யெனு நகரில்வாழு நயினுத்தையென்னுமாரிய னெழுதிவரவிட்டதிருபம்-எழிலுறா உமுத்தமிழ்த்துறையிலதிவலவனேயிசைமருவுகௌரிகுலனே-எதையர்க்குபகாரி செயகான்வரத்தையிவ்விட மதில்விளக்குபவனே, நார்மேவுமின்பனேதேம்பாவணிச்சுவைதயை நரர்களுக்கூட்டியன்ஞர்-நல்குபொற்றகடெனும் புகழணிகொளமாரனே நாவலர்கள் புகழ்தீரனே-நவில்கின்ற சவராயலென்னு நன்ஞமனே நாடியெதிர்கொண்டுகாண்க-நானிலந்துதிசெயும் விக்டோரியாவருளை நண்ணியிவ்வுலகிலோங்கிப், பேர்மேவு சிந்துராயக்குரிசிலுக்கியான் பெட்புடன் விடுத்தபாக்கள் - பீதமுறுமேமமென மேவலினவன்பாற் பெயர்ந்தவற்றின் பொருள்களைப்-பீடுறவுணாக்கிலன்னவனென்னை நின்னையிப் பெற்றியனெனத்தெரிகுவான்-பெட்பனே நெருநல் போன்மாலையானடைகுவேன் பிரியனு மவனிடத்தே. (௧௪)

சவராய் வலைமரு வுவராவலுறுஞ் சவிநகர்வா.................
சவராயலையகற்ற லோனனுங்குஞ் சொற்றுவிலவா..........
சவராயவர் மருபோகமுமேவியஞ்சால் புடையீர்...........
சவராயலுவெனுமன் பீர்கொளுமென்றமிழ்த்துதியே...(௧௫)

தகரவணவார் குழற்றெய்வமடவார் முகத்தளிமங்கவர்ந்தரனிடஞ் - சார்ந்துமுதல் போன்மேவுமாய் மலரின்மீதிலமர் தாழ்சிறையதவளவன்னம்-தன்னலர்த்தோய்ந்துடற் பாகிபோர்த்தெழுதலுஞ் சவியுறாஉம்பேட்டோதிமம்-தான்கண்டு கரியவேற்றன்னமென்றஞ்சிடச் சபதியிற்சிறகுதறியே, புசரகலு மெழிலுருக்காட்டியுளஅன்புடன் புல்லியேயுவகைகூரும்-பொற்புறாஉம்வளமிகும் புதுவை வாணன்புலவர் போற்

றுகேட்பீர நிபுணன் - போலியரெனும் புலவர்காதறுத்துக் கவிப்பொற்
கல்லணைப்பொருத்திப்-புகலைந்திலக்கணக்கடியாலமிட்டயம்போன்மு
டுக்கின்ற தீரன், சகரர்தொடுகட லுண்ட முனிவன் மகிழ்நபிறைத்தைதா
மமொடுபோக்குநிருபம் - சவராயலுப்புலவவெதிர்கொளீஇ யன்புடன்
சவியுறக்கொண்டுகொண்க-சார்ந்தவொருநாண்மாலை நினைநோக்க நின்னி
லஞ்சதுரனேமாமனுவையுட்-டங்கிறையாதலாற்காணுதகன்றனன் சாற்று
மிதுவிம்மிதமல, பசாரியவளமேவென் மறுகிலுனையோர்பகற் பார்த்
தனன்கண்டுமெனை நீ-பார்வையை யியக்கிறையன்றியென்னிட மருவுபரி
வுகொண்டனை யல்லைகாண்-பருகமுதுமிக்கிற்றெவுட்டுமென்பதினுண்
மைபாரிலாயிற்றன்பனே-படிமீதிலாடவர்கள்பெண்மைமேவுங்கோல
பார்த்திபர்கண்மதிலோலனே ....(௧௬)

இன்னமொருவற்புதமியம்புவேனின்பமுடனெழுதியேமுந்து நிருப
ம்-ஈயனின்பாலொருவனத்த மீந்தனனவனியங்கிறனினதகாரம் - நன்ன
யத்தோடுநினைமேவுமனைகண்டெனதுநாயகாகத்திலில்லை-நானுமிதனை
க்கேட்டிகைக்கொளேன் போந்தபினர் நல்குதியெனக் கேட்டவன்-
சொன்னமொழிவண்ணமே யென்னிடமடைந்தனன் சொற்றினனவ்வி
யப்பைத் தோதகத்தோடந்தநிருபமென்கைக்கொளீஇச் சொல்லிமற்
றிச்செய்யுள-நின்னிடம்விடுத்தனன்ன தனை நன்கோர்குவாய் நீணிலந்த
னிலெள்ளிதில்கேள - நெடுமேற்சீருறும் பொருளெனினு மஃதுறுநெடு
பொருள சீர்மேவுமே,..............................(௧௭)

அன்பினுக்குரிய சவராயலென்னுர்வலாவல்லலுற்றிடுமமைதியில், நி
ன்புறத்தவறதலின்றேனையோரிடையதை நிகழ்த்திடற்பலனுமாங்கொ
ல், அன்பிலாவெருந்தமக்குரியரன்புடையராக்கமுடனென்புமோகேள,
துன்புறுங்காலைப் பிறர்க்குரியவென்ன முன்சொல்லினர் சகுதியோரோ.

கருத்தினிற்பெரியைகலைவலாய் சவராயலுவெனுங்கவிநிதி நெருநற்,
பொருத்தமாச்சுகுண சுகிர்தநாதக்கோன் பொன்னினைக் குறித்தொருபு
லவன்; திருத்தமாவுவாத்சகூற்றுகளனைத்துஞ் செப்பிடக்கேட்டனமல
வோ, அருத்தமென்பதனையற்பமீப் பொருளென்றறைந்தபற் பாக்க
ளைக்கேளாய் ....(௧௯)

உலகெலாமளித்தோ னுவந்தவதரித்த வொள்ளியவெல்லையையுதக
த்-துணர்த்து மாயிரத்தெண்ணூற்றறுபானேடொன்றியவிரண்டெனு
மாண்டிற், சலகமுந்தலைசூழ புதுவையென்பதியிற் றுவிறைவேம்பபொ
ன்மதியிற்-சார்புதனிருபத்தாறெனுந் திகதிச்சண்டன் கீறெண் மணிய
மைதி, நிலவுறுஞ்சவராயலுவெனுட்புலவனீணிலத்தருந்ததியெனவே -
கநிழ்த்துதற்குரிய சுகுணராசம்மாளநேர்ந்தநற்றவமெலாந்திரண்டே,
யுலவையுந்தழைக்கக்குழவிவெண்மதியினுளிமுகத்துதித்ததுபோலு-
மொப்பிலாமுகங்கொண் டருளப்பனெனுமோருறுமதிச்சுதனுதித்த
னனே ....(௨௰)

அருணிலைமொழியோடட்பனென்றகில மறைந்திடுவரு மொழியடுத்
த- வாக்குவயத்தூர்வகத்தநின்புதல்வனளூர்தருமிந்தமண்ணெனவே-ப
ருணிதர்பரிவாற்பாவினாற் பரவும்பரமனென்பசுபதிபதத்திற் - படர்ந்த
னனிதனை யதிதலின்றகிலம்பன்னு மாலருகினனெனவே, தருணியினெ
ளிபோ லூரனுழுஞ் சவராயலுவெனுஞ் சான்றவதினக்குச்-சாற்றலு மி
தனை யேற்றிடாதனைத்துஞ் சழக்கிலையுணர்வையாலினைய, தருணமைம்
புலனை வென்றவனெனினுந் தயங்குதற்குரியவச் சோபந் தாழ்ந்திடாதக
லப்பஞ்ச தந்திரஞ்சேர்சவியுறுசெயுள்விடுத்தனனே..........(௨௧

எட்டைவந்துறினுமிற்பிறப்புடையாரினைதலின் றேற்பவர்தமக்கு....
வாட்டமின்றுதவி வழுத்துவர்முகமன் மன்சவராயலுவெனவே.....
மோட்டிடத்திருந்து முழுமகனெனிலோ மூடுக்குவனடுத்தவற்றவனைக்.
கோட்டினின்வயிரஞ் செறிப்பினுங்கருமா குஞ்சரமாகுங்கொலிலதே.

ஆற்றறல்வரந்தகாலையிலடுத்தோரகழ்ந்திடுகுழியில்வந்தணுகும் .....
ஊற்றறலதனை யுதவுமாறுதவி யோதுவரின்மொழி யுறுகண்........
ஞாற்றவுமடைந்துங் குடிப்பிறந்தவரோ லாதுலர்க்கன்புமாடடைந்து...
மாற்றலர்க்கரியேதிரப்பினுக்கிடியாமன்சவராயலுவெனவே.....(௨௩)

பஞ்சரத்னம்.

காமன்கண்ணுதலாலெரிந்து பின்னுருவங் காசினியதிலடைந்தாங்கு,
வாமமேய்புருடனொருவனைப் பாகூர்வைப்பினிற் கண்டனனன்னான், தா
மமோசவராயலு வுணர்மதன்றன்னாற்கணை சிந்தினனென்மேல், தாம
மேய்குவளையுலவினென்சகியேதரிப்பதெங்ஙனமென்புற்கலனே. (௨௪)

புற்கலனொழிமுன் போந்தவன்பாலென் புன்கணைப்புகன்றவன்றரிற்
கேள், அற்புடனலங்கல் வரைந்திவணடைவா யாயினென்றாதனைக்காண்
பாய்,முற்கொடுமையைக் கூற்றுதைத்தவற்கியற்ற முனிந்திடவன்னவ
னெரிந்த, விற்படையான்றன் மற்கொலையொழிப்பாய் வியனுறுமென
துகாதலியே ....(௨௫)

காதலன்னவன்மேற்கொண்டன னதனாற்கருத்தழிந்தன னினியென்
மேல், ஆதரஞ்செலுத்து மன்னையுமுனிவா ளகன்றிடுங்கைவளை யனை
தோய், மாதரம்பரமுமாதருமலர்கள வழுத்துவரெங்கனமுய்வேன், தா
தியர்நீயிர் சூழ்ந்தனரிருந்துந் தாவடைந்திடுதனென்றகவோ.....(௨௬)

தகர்க்கொடுதனையி லொழிக்கவூர்வேளித்தனை யொருமுகத் தவதரித்
தாங், ககக்களிப்பொடு பாகூரினிலடுத்தேற்கன்பினைக்கொடுத்தவன்னவ
னைச்சுகத்துடனனுபவிப்பதென்விழைவாற் றோழியிக்கணமவணடை
ந்து, திகைக்குமென்னரந்தை யுரைத்தவனணிந்த தெரியலைக்கேட்டிடு
வாயே..................................(௨௭)

கேட்டியென்விழைவைப் பூட்டியம்பலரைக்கிளர்ந்திடத்தொடுத்த
வேளொருபால், நாட்டினைவளைக்கு நதிபதிகிரேநற்குயிலன்றிறென்பொ
திகைமேட்டினின்றிலவுந்தென்றியிந்தொருபால்வெதுப்பவென்னுடன்

மெலிந்திடுமோல், தோட்டியைநிமிர்க்கு மதகரியனையதோன்றலைநாடு மென்னகமே..............................(௨௮)

பதிகம்.

நவராசிமணிவட மணிமாளிறநாட்டினிர்சிர்
நவராமமேவிய நாயகனே கலைநாலு மிந்த
நவராயமுத்தமிழ் வல்லவபல்லவ நாவலனே
சவராயலுநிற்றணந்தேயினைகுவடார்குழலே. (௨௯)

தார்குழலைம்பாலியல்விட்டுத் தாழுறத்தையனல்லாள்
தார்குழலென்னத்தரைமிசை யேய்குவடாழ்வளனைத்
தார்குழலின்னிசை யன்னையர்தேற்றியு மாற்றலளாய்த்
தார்குழைநீத்துச் சவராயலுமன் றயங்குவளே. (௩௰)

தயங்குவளைக்குலஞ் சோர்வுற மன்னந்தளருநடை
உயங்குறுநோய்க்குமிந்துண்டுகொல்லெனுமொண்டொடிகேள்
மயங்குறலின்ன முனக்குரியன்று மருதுதருத்
தியங்குறநல்குஞ் சவராயலுவெனுந்தீரத்தனே. (௩௧)

தீரத்தரிமணிசேர் பெண்ணைமேவித்திரைகடல்சூழ்
சீரத்தகை புதுவைச்சவராயலு செவ்வியனே
வேரத்தொடுமதிவெள்குங்குழன்முக மின்னிடையாள்
கோரத்துடன்மதனுந் தலரான் மெய்குழைகுவளே. (௩௨)

குழையுந் தொடியுங் கலையுங்குறைவுறக் கொண்டலன்ன
உழையுமுழக்கும் விழியலர்கால வொருவியநின்
னுழையுங்கருணையுளதாங் கொலோவெனுமொண்மை யுறும்
புழையங்கரமலையாய்சவராயலு போற்றுகவே. (௩௩)

போற்றுவணின்னைப் புகழுவளீண்டைப் புயன்மருவ
வேற்றுருவாக்கியெனைச்சவராயலுவிட்டவனே
சேற்றுனு நோக்கியர்பால் விழைவுற்றனன் சிந்தையினி
யாற்றுதலெங்கன மென்பாளடையாங் கொருதரமே. (௩௪)

ஒருதரங்கத்தன்றி னேரம்பொருளென் னொருதலைவி
திருதரங்கத்தல்லி னேர்ந்தனங்கன்பொற நேர்ந்தனளாய்ப்
பொருதரங்கத்தொலி நாராசங்காதிற் புகப்பொருமி
கருதரங்கப்புக ழேய்சவராயலு கன்றுவளே. (௩௫)

கன்றுனுங்கற்ற வெனவனை நயக்களைந்தவெல்லை
பொன்றியதென்னும் விரலொற்றித்தேய்ந்து புழுங்குமனம்
துன்றியபாலனந்துய்க்கநஞ் சென்னுஞ் சுடர்வடிவேல்
ஒன்றியபாணிச் சவராயலுவென் றுலைகுவளே. (௩௬)

உலைமெழுகின்னவ டன்னுள்ளுருகி யுறுந்தலைவன்
கலைமுழுதின்னமு மோர்கின்றனோகடுக்கணியர்தம்

முலைமுகடேறியிருந்தன் கொல் சேடிமொழிவையெனச்
சிலைமதனேர்சவராயலுவோதித் தினைதவளே. (௫௭)

தினமவனேர்ந்திடச் செல்வந்தணைந்திடச் செல்லலுற
வனவனஞ்சூழ்ந்திடு பாகூரின் மேவிவயங்குதனீ
யினமுறுமோவவளின்னலினைகுதலின்புனக்கோ
கனமுறுபால சவராயலுவென்னுங் கார்வள்ளலே. (௫௮)

வேறு.

தக்கணம்போயென்மைந்தல் சார்தலினாற் கீழ்மகனே
கக்கிஷிங்களெற்கிடவே கண்ணினையென் - பொக்கசம்போற்
பாகூரினின்று சவராயலுபூபன்வந்தான்
எகுதிகாணீதானினி. (௫௯)

சீருலவுமாமேழிச்செல்வாவுனக்குநிக
ரார்புதுவைமாநகருக் காதாரா - வேருலவு
மெத்தலமும் போற்றுமெழிற்சவராயற்கோனின்
கைத்தலத்துக்கொப்பாமோகார். (௬௰)

ம. ரா. ரா. மபிலஸ-சவரிமுத்துப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

சீர்விளங்குங்கலைஞானமணியென்னும் வீரமுனிசிறக்கச்செய்த.......
பேர்விளங்குமெழிற் றேம்பாவணியினள வறிந்தெவர்க்கும் பிரசங்கிக்க
ஏர்விளங்கு நஞ்சவராயலு வல்லவனாலே நன் கிசைவதன்றிப்...........
பார்விளங்கெக்கலையினும்வல்லவராலு முற்றுணர்ந்துபகரொண்ணாதே

பலபாஷையிற் பண்டிதராகிய

ம. ரா. ரா. பிள்ளை-அப்பாவுமுதலியாரவர்கள்

இயற்றியது.

இன்னாட்டுப்புலவர்சவராயலுநாயக வல்லனையெய்தினாற்போற்..........
றென்னாட்டுப்புலவரன்றே தவஞ்செய்துபெறுவாரேற்சிறந்தநூல்கண்
முன்னாட்டுமின்றேம்பாவணிப்பலனெட்டாதுகுறைமொழிந்தானொன்று
பன்னாட்டுங்கிடைக்குமொருபேரிழிவன்னவர்க்கென்றும்படராதன்றே.

தேம்பாவணிக் கீர்த்தனஞ்செய்த

ம. ரா. ரா. பு-ஆரோக்கிய நாய்க்கரவர்கள்

இயற்றியது.

முத்தமிழை யுணர்ந்தபுலவோருணாத்தபன்னூல்கண் முழுதுமாய்ந்து
சத்யமறைப்பொருடேர்ந்து சகலகலைவல்லவனெனத் தாபரத்தில் .....

சத்திபெறுவீரமாமுனியருடேம்பாவணியாஞ் சுருதிநூலை.........
யெத்திசையும்புகழவுரை செயுஞ்சவராயலுதிறங்கண் டின்புற்றேமே.

கோவில் அச்சுக்கூடத்து
ம. ர. ர. அ-ஆரோக்கியசாமிபிள்ளையவர்கள்
இயற்றியது.

மணியை மதிக்கவதிற் பயின்ற வல்லோ னெனப்பல்வளத்தேம்பா..
வணியைமதிக்கும் வலன் சவராயலுவானந்த ராயனகத், தணியைவகுத்
துப்பொருள் விரித்திட்டியாப்போ டெழுத்துஞ் சொற்பொருளுந்,
தணியவகுக்கவன் பெனு நற்றனமீந்தெவருங்கொண்டனரால்.......(௧)

வேதப்பொருள்களொருங்கமைத்துவீரமுனிவனருளியசெந்........
தாதைத்தரு தேம்பாவணியுட் சமையின்பொருள்க ளவைக்கருத்தக்..
காதற்பெருக்கா ரானந்தராயன்கனிய ஊட்டுவையென்............
றோதச்சவராயலு சுகுண னூட்டத் துணிந்தானுரைவிரித்தே.....(௨)

கல்விக்கடன் முற்றுண்டெழுந்து கதித்தவீரமுனி மஞ்சு.........
மல்குமிருடோயிவ்விந்து வறியநாடு வளமுறுவான்..............
புல்கித்தேம்பாவணியென்னும் பொருப்பிற்சுருதிபெயவதினின்....
றல்காச்சவராயலுவாய்ச்சொல்லாறுசபையாழியிற்செலுமே......(௩)

வீரமுனிவனருடேம்பாவணியைவிளக்க விருப்புற்ற..............
தீரன்துப்பிமா குரவன் திறம்பாதச்சிற் பதித்தினிய............
வாரமென விவ்வுலகெல்லா மகத்திற் றரிப் பாக்களிக்கவதை.........
நாரமிகு சவராயலுவேள் நாவால் விளக்கி நயந்தனனே...........(௪)

பாடப்படிக்கப்பொருளுரைக்கப் பல்காட் டுரைக்கப்பண்புளனுந்....
தேடக்கிடையா நஞ்சவராயலுசீர் வீரமுனிதந்த..............
சூடற்கருந்தேம்பாவணியைத் துலக்கப்புலவர் நன்குணர்ந்து........
வாடப்படாப்பா மாலை யிவன்வளரத் தரித்தார்மனம் வியந்தே.....(௫)

கானார்மலர்க் காவனந்தடஞ்சூழ் கதித்தபுதுவைமாநகரோன்.........
தேனார்மதுரம் வாய்ந்தகவித்திறஞ்சால் சாமிநாதன் செய்............
ஞானாதிக்கர் காப்பியத்தை நார்கணவையற்றோங்கியுயர்.........
வானாரின்பம் பெறச்செயகான் மைந்தன் பிரசங்கித்தனனால்.......(௬)

தவக்கடல் கடந்த வான்றதைரியமுனிவனென்பான்............
பவக்கடல் கடக்கயாரும் பரிவுகொண்டியற்றித் தந்த............
வவைக்குடையாத தேம்பாவணிவிரித்துரைக்கவல்லான்............
நவைக்கிடமிலா திவற்றை நவில்வது மாண்பென்போமோ......(௭)

சங்கமலைக்கத்திருச்செல்வராயர் சரிதத்தொடுத்திதய..............
மங்குலறுவான் காப்பியமாவகுத்தான் வல்ல பூலோக...............
சிங்கன் சவராயலு வதனைத்தெளிவுற் றெவர்க்கும் பயன்படவே......
எங்கும் புகழவிரித்தியுரையிசைத்தானிதுமா மாண்பம்மா........(௮)

தெண்டிரைநீர் வயல்வாவி தடநதிசூழ் பாகூரிற்செயகான்றந்த, வண்டமிழாயுஞ் சவராயலு ஜெயராக்கினியெனுநம் மாதாவுக்கோர், கொண்டலளவுஞ் சிகரக்கோயிலினைக் கட்டுவித்துக் கோதறுக்கும், அண்டர்பணியவள்சொருபமொன்றுசெய்வித்துலகிறைஞ்ச வவண்வைத்தானே.

குவர்னமா தருமக் கல்விச்சங்கம் செந்தமிழ் உபாத்தியார்

ம. ரா. ரா. மலையப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

தன்னையேந்து குசைமுனிசரிதத்தேம்பாவணி கேட்ப..........
வுன்னையியற்றி யுரைத்திறனு மொருங்குகொடுத் திவ்வோங்கலிடை...
அன்னையொடு மற்றவன் மருங்கினமைய வமலன்சேயா மேல்.......
என்னை நினக்குப்புகழ் வேண்டு மினிய சவராயலு சுகுணா........(௧)

பதவுரையுங் கருத்துரையும் பொழிப்போடு மேற்கோளும் பாவக்காட்டி, இதமுறுதேம்பாவணியாங் கடன்மடுத்துச் சபைப் பைங்கூழினிதுற்றோங்க, சிதமருவு மானந்தராயன்மலை தனையடைந்து சிந்திற்றம்மா, நிதமன்பர்புகழ் சவராயலுவெனு மாமுகில்நிறைந்த நீர்மையானே.

இருந்தமிழைத்தனித்தனியாயினிதுரைக்க வனந்தனுயிரம் வாய்பெற்றுன், பெருந்தகைதேம்பாவணியை யொருவாய் கொண்டொருவனே பேசினுல், அருந்தலம்வாழ்நடுநிலையர் சமனேக்கி யிவரியல்பை யறைமின் சாவா, மருந்துபொழிந்தெனப் பொழிந்தவருட்சவராயலு முகிற்கு மற்றேப்பின்றே ....(௩)

வாதனந்தம்புரிபவர்க்கு மருளோட்டத் தெருணுட்டவழியைக் காட்டப், போதனந்தம் வீரமுனி சமைத்தநற்றேம்பாவணியாம் போனகத்தை, யேதநந்த வட்டிலென வானந்த ராயனன்பா லிசைக்கயார்க்கு, நீதநந்தம்வண்சவராயலு வாய்க்கைமனக் கலத்தைநிரப்பிற்றன்றே.(௪)

அல்லிரியத்துறந்துபெரும்பரவையினும்பொருளாழ்ந்தே யமையப் பன்னூற், சொல்லியநல் வீரமாமுனிதேம்பாவணிக் கவையிற் சோர்விலாம, லெல்லியினுண் பொருள் விளங்க வொரு சவராயலு பொருணன்கியம்பலாலே வில்லியருமறம் விடுத்தேயறவழியாஞ் சத்யமறை விரும்புவாரோ ....(௫)

பன்னூலைவிளக்குகின்ற தொன்னூலாய்ந்துபருதியிற் றேம்பாவணிக்குஞ்சுருதிநீதி, நன்னூலாங்குறளுக்கு நாலடிக்குநவையில்பொருள்விரிக்கு மொருசெயகான் மைந்தன், முன்னூலின் முறைவழுவாநூனுதிக்க முதல்வன் முடியப்பனுக்குச் சொல்லோர்சீல, மன்னுசிறுகாப்பியத்தைப்பலருங்கேட்டு மகிழவுரைப்பதும்வியப்போ மன்றத்தோரே(௬)

மண்ணவர் விண்ணவரோடுறவாட வமைந்துயரோணியதோ - மன்னவர் மன்னவன்றன் வழிவந்தநன் மாமுடி தானிதுவோ, எண்ணறு புண்

ணியர் பண்ணியதவமதோரீங்குருவானதுவோ விடர்தருபவ விருளிரி தரவாதவ னிவ்வடிவாயினனோ, திண்ணியவாலய மண்ணிதினேதெனத் தேவர்பிரானனைக்கே - செப்பிடவொப்பரு நப்பெருந்தகையினன்செய சவராயலுவேள், கண்ணியவெண்ணம தெண்ணளவுங் குறைகண்டிலராயொளிருங் - கருதரு மிருடிகளுறைகொடு பாகூர்க்கட்டினனலமுறவே ....(எ)

கனங்கொடையிற் புவிபொறையிற் கல்வியினின் வீரமுனி கவினில் வேளாம், தனமதனிலளகேசன் றரியலருக்கரியேறு சமத்திற்சஞ்சோன், மனங்கலங்கி யடுத்தவர்க்கு மாமேரு பிறர்மனைக்கு மகனுமெங்கள் கனமாகுஞ்சவராயற் பாத்திரட்டுப்பாற்திரட்டாங் காசினிக்கே.....(அ

இலக்கணத்தைத் தயிர்ச்சாத மெனப்புசித்துச் சங்கத்தா ரியற்றுந் தொல்லை, இலக்கியமாம் வாரிபொருக்காயுலரவொரு மிடராயினிதுமாந்திக், கலக்கமிலா தேப்பமிடு நஞ்சவராயலு வெனுமோர்காளமேகந் துலக்கமுறு பாப்பயனையுலகுவப்பவளவின்றிச் சொரிந்ததம்மா...(கூ)

ஆரியரிற் சீரியராந் தீரியோந் தொழுநோயர்க் கமிர்தம்போல, ஆரியரினரியநீ யுவுத்த பத்தர் சல்லாப மமையாயென்ன, வேரியந்தேனேடுகெண்டின்மிகச்சவராயலு சுகுணன்விளங்கச் சொன்னன், யாரிவற் கீண்டொப்பப்பா வெப்பாவுந்தப்பாமலமைத்தலானே.......(ய)

ஊக்கச் சடையுற்றருள் முளைத்தே யொருவாநெறியேகவடாகி, மோக்கதவமாமுறி தளிர்த்து முன்னூற்றிறமா மரும்பரும்பி, ஆக்கப்பைங் காய் காய்த்தினிதயாகுங் கனிதந்திந்நகரிச்சீர், தேக்கத்தருவாஞ்சவராயற் சிங்கம் வேங்கையருளுகவே................................(கக)

அல்லினை நீக்கியொளிசெயுங் கதிரோனன்னவே வறிஞருக்கிருளாமில்லினை நீக்கிக்கொடையொளி தருநம்மெழிற் சவராயலு தருமம், புல்லினை மானுக்குதவிடாதனைமார் பொறியின்றி மூவருடத்து, நெல்லினையறிந்து படைப்பது முறையோநேர்மருங்கிது முலைத்திருவே....(கஉ)

வானவன்விடுதூது செய்த தருமக் கல்விச்சங்கத்து உபாத்தியார்

ம. ா. ா. அ-ஞானப்பிரகாசமுதலியாரவர்கள்

இயற்றியது.

அருளறுவீரமுனி யளித்ததேம்பா வணிப்பொருளை நன்குணராக் கழகமாந்தர், உருளறுக்கிட்டாத கனிக்குக்குற்ற மோரியுரைத்தது போலவுரைத்தார்வேதப், பொருளறுதனை யெவர்க்கும் புகன்றதாலப் புலவர்மகிழ்புலவனன்றே புவியின்மேவு, மருளறுப்பொய்மதமங்குலுக் கென்றூழாவருஞ் சவராயலுசுகுணவலவன்றானே. (க)

பொன்பாவையார் பின்போ மெய்யார் பொதியாசை
பன்பாலன் மெய்யென்பாயாக்கும் பசிதீரத்

தன்பா புன்பா செய்யாச் சேயா சவராயல்
என்பாலன்பா வின்பாப் பொன்பா லீவாயே. (௨)

சவராயலு தற்பரனற் றெருளிற்
றவருதவன் றப்பறை யற்பமெனும்
எவராகிலு மிப்புவியிற் கருதி
லவராவிக ளக்கினிபேய்க்கினையே. (௩)

அலைவாரிதியிற்றவிர்வீழ் சிலுவை யலவன்றா
வுலையாதுவந்த முனிநாமமன்றி யுமைமுனிபோற்
கலையாயலாலயற் பேராயலென்று கழறுவனே
இலைபோவெனப் பொன்பிராஞ்சோங்கிவண் டமிழ்க்கீபவனே.

ம. ா. ா. தேவு-இரத்தினசாமிசெட்டியாரவர்கள்

இயற்றியது.

இரும்பன்ன நெஞ்சத் துரோகியர்பாற்சென்றினியதமிழ்க்
கரும்பன்ன சொல்லியுங் கேளாரெவர்க்குங் கருமுகில்போ
லரும்பொன்னளிக்குஞ் சவராய லுமன்னை யண்டினகாற்
றரும்பன்ன வுங்கள்கலிபோங்கவி சொலுந்தூயவரே. (௧)

பாரோங்குமட்டதிசை வெற்றியுற்ற பரும்புகழாந்
தாரோங்கு வீரசெயகான் புனிதன்றரு முனது
பேரோங்க நல்கும் பலவுபகாரப் பெருக்கைக்கண்டு
காரோங்கி வாரியுறுஞ் சவராயலு காவலனே. (௨)

வேறு.

கஞ்சம்வென்றவதன சவுந்தரகன்னி கன்னன்வின் மன்னன்கையம்பினை,
னெஞ்சமைந்திருகண் பஞ்சடைந்து நன்னித்திரைத் துறந்தாள் கலந்
தாளையா, வஞ்சமொன்று மனச்சத்துருக்களை மட்டடக்கும் புருஷ சிங்கா
ரனே, தஞ்சமென்ற ஜனபரிபாலனே சற்குண சவாயலு தீரனே. (௩)

செப்பரிய பாகூர் வாழ்திவ்ய சவராயலிவண்
மைப்புயல் போல் வந்த மகராஜ - னிப்புவியி
லெற்கப்பிறந்தார்க்கிரு நிதிதந்தார்கலியைத்
தீர்க்கப் பிறந்தான் றினம். (௪)

ஈயாத லோபியனை யெட்டியைப்போற் பார்த்தறத்தை
யோயாமற் செய்யமன மோகைகொள்ளும் விற்பனனே
தேயாததிண்மதிபோற் றேசுறுநின் கீர்த்தி நிழற்
சாயாதிலங்குஞ் சவராயலு துரையே. (௫)

பலங்கிளர்செயகான் சந்தபாரம்மாளருந்தவத்தால்
இலங்குமாயிரத்தெண்ணூற்றேடிருபத்தொன்பானெண்டோங்கு

நலங்கிளர்தேசம்பர்மாத நல்லோன்பான் றேதியாகத்
துலங்கெழிற் புதவாரத்திற் றேன்றினன் சவராயற்கோன் (சு)

கல்விசாஸ்த்திரமடத்தின்சூர்வையான் ம. ா. ா.

நதி-ஞானதிக்கசாமிமுதலியாரவர்கள்

இயற்றியது.

மாதவர் கல்விசாஸ்த்ர மடத்தினங்கண்காணிப்பி.................
லோதினே ரனேகர்தம்மி லொரு சவராயலுப்பேர்ப் ....
போதன் செந்தமிழ் நன்காய்ந்து புவியெலாம்புகழப்பெற்ற ....
மேதகு சீர்த்தியாரோ மேவினர் மேவுவாரோ........................(க)

செங்கமலத்தடந்திகழும் புதுவைவாழுஞ் செயகான்பூபதி பௌத்ரி யெனுந்தாயம்மாள், மங்குலுறுமலர்ப்பொழில் சூழ் பாகூர்தன்னின் வந்தடைந்ததாலொரு கல்லறையுண்டென்றே, யெங்குமுண்டோர் பெரும்புகழீ திரும்பூதன்றங் கெங்கள் சவராயலு நாயகன்செய்வித்த, பொங்கு செயராக்கினி மாதாவின்திவ்ய பொற்றேவாலயத்தாலாம் புகழ்க் கொப்பாமோ..(உ)

கல்விசாஸ்த்திரமடம் ம. ா. ா.

அந்தோனிவாத்தியாரவர்கள்

இயற்றியது.

தகைமிகு தேம்பாவணிக் கடன்மடுத்துத் தக்க மேற்கோண் மினல் செய்து, பகையெனும் பாந்தள்வெருண்டிடல் சுருட்டப்பாதகக் கோகிலமோட, நகைமுகங்களித்தே யன்பராந்தோகை நற்சிறையெனுஞ் சிரந்துளக்க மிகையறப்பொழிந்த தருமறைசெழிக்க வியன்சவராயலு முகிலே..(க)

மன்னவர்மகிழுந் தானுபதி மகாநாட்டார் தங்கட்க்...................
கென்னுமோர்செயகான்மைந்த னெழிற்சவாாயலுப்பேர்..........
துன்னியசுகுணன் செய்த தூய வாலயத்தாற் பாகூர்..................
பன்னரும் பாகூரொன்று பகர்ந்திடத்திகழ்ந்த தன்றே ....(உ)

ம. ா. ா. சாரம்-இராமசாமிவாத்தியாரவர்கள்

இயற்றியது.

வையந்தனிற்கனகமாமழையையெப்பொழுதும்..........
பெய்யும்புலவர்கலிபேர்ந்திடவே - செய்யவள..........
மன்னுந்திருப்புதுவை வாழுஞ்சவராய......................
லென்னுங்கரும்புயல்வந் திங்கு..............................(க)

மன்னர்புகழ்புதுவை மாநகரில்வாழுகின்ற..........................
தென்னன்செயகான் செழுந்தவத்தாற் - கன்னனென..........................
வந்தசவராயனுனை வாழ்த்தும்புலவோர்க்குச்..........................
சந்ததமும்வாய் மணக்குந்தான்..........................(உ)

வெண்ணிலவினும் பேரிதாய்மேவிய நின்கீர்த்தியிந்த..........
மண்ணுலகி லெப்பொழுதுமாறாதே - புண்ணியமே..........
யோருருவாய்ப் பூமியில்வந்தோங்கு சவராயலெனக்..........
கோருதவிசெய்வாயுவந்து..........................(ங)

மேன்மக்கள்வாணர்கவி வேண்டுவார் வீணரதைத்..........................
தானமக்காகாதென்று தள்ளுவார் - நான்மிக்க..........................
வுன்புகழைச்சொல்ல வுறுதியிலேனாயினுமே..........................
நன்சவராயலிதைநாடு..........................(ச)

ம. ா. ா. க - தங்கப்பிரகாசமுதலியாரவர்கள்
இயற்றியது.

மின்னுந்தவளக்கூவிரமோ வேந்தரணியுமணிமுடியோ-விளங்கும்பு வனச்செஞ்சுடரோ விமலருடலத்துயிர்கொலோ, மன்னுமெழின்மாமு கக்கண்ணோ வானிற்செலற்காமேணியதோ-மண்மாதணியுமாவணியோ மற்றிங்கெவனோ மதிக்கறியேந், துன்னும்பிரசமுண்டளிகள் சூழ்ந்து விளரிப்பண்மிழற்றுஞ் - சோலைத்தடஞ்சூழ் பாகூரிற்றுலங்குஞ்செய ராக்கினிமரிமா, தென்னும்விமலிக்குயர்புலவரோத்துஞ் சவராயனுதிபுண ணினிதாவமை வித்தவனுருவ மிலங்கச்செயுந் தேவாலயமே.......(க)

ம. ா. ா. க - தைரிய நாதஉபாத்தியாரவர்கள்
இயற்றியது.

மருமலர்த்தடங்கள் வாவிவளஞ்செறி புதுவையூரன்..........
திருநிறை செயகானீன்ற செயசவராயனுப்பேர்ப்..........
பெரும் புகழ்ப் புலவன் றேம்பாவணியினைப்பிரசங்கிக்க.....
வரும்பொருளுலகுக்கெல்லா மாநதந்தம் விளைத்ததன்றே...(க)

வயல்நதியேரிதாங்கல் வளமமை பாகூர்தன்னில்..........................
ஜெயமரியம்மனுக்கோராலயஞ்செயகான் சேயாம்..........................
நயசவராயனுப் பேர்நாயகன் கட்டுவித்து..........................
மயமிகுமவள் சொரூபம் வனைவித்தவ்விடம் வைத்தானே........(உ)

ம. ா. ா. அப்பாக்கண்ணு நாவலரவர்கள்
இயற்றியது.

நற்கனமு நற்குணமு நற்றனமு நற்றொழிலு..........................
நற்கவியு நற்கலையு நற்பொருளும் - பெற்றிலகு..........................

வாணரில்லம் வான்றருவாய் மன்னுசவராயலெனைக்............
காணுமிடரோடவருள்காண்..................................(க)

பொன்னு மிரும்பும் புயங்கத்தெரிமணியு..........................
முன்னுங்கரும்பரலு மொப்பாமோ - மின்னனையாய்...............
நற்றமிழுக் கீய்ந்துபுகழ் நண்ணுசவராயலைப்போன்..............
மற்றவரு முண்டோமதி......................................(உ)

தாழ்வுபெறு நல்குரவாற் றாழ்ந்தானைத் தாழாமல்
வாழ்வுபெறவைக்கும் வரிசையினன் - சூழ்கமல
வண்ணவயற்பூம் புதுவைவாழ் சவராயற் கோனம்
எண்ண முடிப்பான் மனனேயின்று (௩)

சேலாரணிவயல் விண்ணூர் தண்ணூர்பொழில்சேர் புதுவைக்.......
கோலாகலன்கவுரிக்குலன்பாவலன் கோதில்நலன்...............
நாலாகலைகளறி சவராயலு நாயகன்றன்........................
சூலான்முடிந்தலைதக்கையாலவிழ்ப்பவர்க் கண்டிலமே.........(ச)

ம.ா.ா. சிவப்பிரகாசவாத்தியாரவர்கள்
இயற்றியது.

நம்புறு சொற்செயகான் செப்தவச்சவராயலு சுகிர்த நன்னாவல்லோன்,
அம்புறுதென்முனியனையசீர் வீரமாமுனிவ னருளிச்செயத, வம்புறு
செந்தமிழ்த் தேம்பாவணியினறுஞ் சொற்பயனைவழுத்தக்கேட்ட;
செம்புருகுமிரும்புருகுஞ்சிலையுருகுமலையுருகுஞ் சேற்கண்மானே.(க)

பார்க்கச்சிறந்த தனதனென்றுன் முடவன்பயிலுஞ்
சீர்க்குட்சிறந்த நற்சேடனென்று விருநாத்திகழ்வேள்
ஏர்க்குட் சிறந்தவனென்றுலுருவிலி யென்னிலினி
யார்க்குச் சரிசொல்லலாஞ்சவராயல் நம்மன்பனையே (உ)

தேனேங்குசெந்தமிழ் வாணருக்கேதரத்திண்புவியிற்.............
றேனேங்கிய சவராயலூ பூப நின்றன்புகழும்......................
மீனேங்குமிந்துவும் பாலாழியு நித்தன்வெற்புமுயர்..............
வானேங்குகங்கையு மொன்றாகி நின்றுமயங்கியதே ....(௩)

ம.ா.ா. சுப்பு-இராமசாமிமுதலியாரவர்கள்
இயற்றியது.

புகழேந்திவெண்பாவிற் செயங்கொண்டான் பரணிக்குப்புலமைவா
ய்ந்த, தகைசேர் கம்பன் விருத்தந் தன்னி லெனப்பிரித்து முன்னோர்
சாற்றுவாரோ, வகையாகவிவையெல்லா மொருங்குடனே பாடுதற்கு வ
ல்லோனை, நகைசேரு நஞ்சவராயலு புலவன்றனைக்காணி னவலோரோ

இசைத்தமிழ்ப்புலவர். ம. ரா. ரா.

திரு-குழந்தைசாமிமுதலியாரவர்கள்

இயற்றியது.

கஞ்சமலர்த்தடஞ்சூழும் புதுவையினி லோங்குசெயகான் றன்றாய, விஞ்சுசெழுந்தவச் சவராயலு நாயகா சுகுண விமதர் நாண, மஞ்சுறு தேம்பாவணிக் காப்பியத்தி னுக்குமுறை நீசெய்வளமையைக்கண்; டஞ்சிநினக் கென்ன துதி சொலத்தகுமென்றறிஞர் சிரமசைத்தா ரன்றே.

சீர்மிகுத்தோங்கும் வீரமாமுனிவன் செய்த தேம்பாவணிப் பொருளைப், பார்மிகுத்தோங்கப் பகுத்து நீ பெற்றபாக்யமே பாக்ய மெந்நாளும், ஏர்மிகுத்தோங்கும்பரமநாயகனே யிவணுறும் பாவலர்க்கேறு, நேர்மிகுத்தோங்க நினைத்தரவந்த நினக்கரும் புகழ்ச்சிவேறுளதோ. (உ)

பொங்குபேரருளாற் பூதலமனைத்தும் புரந்தளித்தழித்திடவல்ல, மங்களமுறுங்கோ வேந்தனைப் பயந்த மாமரியெனும் பராபரியின், துங்கமார்சீதமதி பதந்தொழுவோன் தூயநற் புதுவையம் பதியோன் எங்குருவெனுந்தேசிகன் சவராய லின்புமுற்றிதனை நோக்குகவே. (௩)

நேயமோடுலகமியாவையும் படைத்த நிமலனையனுதினம் பணிவோன், தூயநற்புதுவைப்பதியில் வாழ்பெரியோன் சொல்லரு நல்லிசையுடையோன், தீயவையொழித்து நேயவையணைந்தோன் சிறியனெற் கின்னருள புரிவோன், பாயநற் கலைஞனெனுஞ் சவராயுற்பண்பனீ தன்பினோக்குகவே. (௪)

தீட்டும் புகழிற் பரிமளிப்பீரெனத் தேன்சொரிந்த
பாட்டும்படித்துப் பலநாடிரிந்து பல்லைத்திறந்து
கேட்டுங்கொடாப்புல்லர் சென்மத்தை வாட்டநற்கீர்த்தி நிலை
நாட்டப் பிறந்தனனஞ்சவராயலு நாயகனே. (௫)

முலைக்கண்மட் பானைக்கண் வாழைக்கணு சிக்கண்மொய்ம் மயிர்க்கண்,
தலைக்கண்கொடென்னம் பழக்கண் கழையின்கண் சல்லடைக்கண்,
வலைக்கண்மிளிர்சித்திரக்கண் பொற்பாவைக்கண்மானுமனம்,
கலைக்கண்செறிசவராயலை நாடிக்காணாக்கண்களே. (௬)

தலைமைப்புலமை வித்துவான் சாமிநாதப்பிள்ளை யவர்கள்

பௌத்திரரும் ஞானதிக்கம் பிள்ளையவர்கள் புத்திரருமாகிய

ம. ரா. ரா. மரியதாசுபிள்ளையவர்கள்

இயற்றியது.

திக்குச்சதுரி லுனையன்றித்திறம்பாக்கவியைச் சொலயாருந்........
திக்கேயிலைமற்றேனையவர் தேர்ந்தே சொல்லுங்கவி யனைத்துந்......
திக்குச்சொல் லென்றுரைபகர்வார் தெளிந்தே யவை நின்பாற் கூறத்.
திக்குத்திக்கென்றே யஞ்சித்தியங்கும் வகையாற் கவிவல்லோய்....(௧)

நேரார் கவியிற் சிறந்திலகு நிகரில் புகழ் மன்மதன்றகையோய்......
நேராருனக்குச்சேடனையுநிலத்தி லொளிக்கச் செய்தகையோய்.......
நேரா ராருன் னருங்கவியை நேசப்பெருக்கத்துறை தகையோய்.....
நேரார் சவராயலு வென்னுநெறி நின்றெழுகு நற்றகையோய் ....(உ)

விரியொண் புகழ்முத் தமிழ்க் கவிக்கோர் விளங்கு முதலோ னென
விவனைத், தரணிப்ரியப் பணை—த்தமலன் சௌர்யராய னயகனென், றரு
முப் பெயர்தந்ததைப் பொருத்தியளித்தேவிளிப்பித்தானதையித், த
னையோர் மருவாவழங்கினர்காண் சவராயலு நாயகனென்றே......(ரு)

அகீம்–அப் துல்லாத்தீப்சாய்பவர்கள்

இயற்றியது.

சீராரும்புதுவை நகர்த்தேசாதியெனுஞ் செயகான்செல்வனை........
பேராருங்குணச் சவராயலுநாயகாநீசெய் பிரசங்கத்தாற் ....
பாராரும்பாமரரும் பாவலராய்ப்பாவியரும் பரமநாத....................
னேராருமலரடிகட் கென்ஞான்றும் புண்ணியராயிலங்குவாரே.....(க)

மஂ ஶ்ரீ ஶ்ரீ க– ஞானதிக்கராயஉடையாரவர்கள்

இயற்றியது.

கொடுத்துப்புகழைப் படையாதவீனக்குலாமர் தம்மைக்..........
கடுத்துப்புலவரவர் வாசற்சென் றிரக்காமனிதந்.....................
தடுத்துத்திருப்புதுவைச் சவராயலுதான்றனத்தை...............
எடுத்துக்கொடுக்கப் பிறந்தான்மருவு மிருநிலத்தே ....(க)

பாரார்ந்தபைம்பொற் பயிர்க்கிறையாது பன்னீரை நிதம்.......
வேரார்விழலுக்கிறைத்ததுபோலவும் வீணர்தன்மேல்.........
ஏரார்ந்த முத்தமிழ்ப்பாடி லென்னநமதேந்தலென்னுஞ்.....
சீரார்ந்த செல்வச் சவராயலுமன்னைச்செப்புமினே.........(உ)

மலருற்றகற்பகத்தாருவு நாணத்தண்மாமதியி......................
னிலவைத்தெறுபுகழார் சவராயலுநீதனிந்நா.......................
ளில்லென்னுமெவ்வ முனையாமலென்னறைக்கு மீதலினாற்...........
புலவர்க்குத்தாயகமாகி நின்றனிந்தப் பூதலத்தே..................(ரு)

ஔவைகம்பன்கும்பமுனியயர் திருவள்ளுவனை.........
யெவ்விடமோ காணுமலேகின - ரிவ்வுலகிற்.................
செந்நாப்புலவர்பிரான்றீரசவராயலுமா ....
விந்நாளிலேவருமே யென்று.............................(ச)

காரைக்கால்வித்துவான்களின் பாடல்கள்.

ம. ா. ா. ஞானுவாத்தியாரவர்கள் இயற்றியது.

மெய்யாங்கடவுளை வேண்டிச்செயகானென் ....
செய்யான்பயந்தெடுத்த செல்வமே - துய்யபுகழ்த்............
தேம்பாவணிக் கருத்தஞ்செப்பிய வொப்பில்லுனக்கி........
யாம்பாவெனவுரைப்பேமால் .,.........................(க)

நல்லாத்தூர் ம. ா. ா.

ஞானப்பிரகாசவாத்தியாரவர்கள் இயற்றியது.

பருதியுட்கிடவுலக ரகவிருளகற்றொளிபரப்புதேம்பாவணியினைப் - ப
டலமொராறுதலையிட்டமுப்பானுபகர்ந்தனன்புலவர்மெச்சத், திருவாள
னும் வீரமாமுனிவ னஃதைவெகுதெளிவாக வுரைவிரித்துச்-சீர்மேவுகா
ரைநகர் தனின்வந்துமாபுலவர் செய்யுளுளுமோரைந்தெனுங், கருவி நன்
னூலுளுங் காட்டெடுத்துச் சொலிக்காட்டினன் மடையுடைந்த-கடலெ
னப் பிரசங்கநுவலு வோனிவனெனக்கண்டவர் வியக்கவல்லோன்- முரு
குவிரிமலர் மாலைதுயல்வருதடம் புயன்முன்னு நற்குண விலாசன் - மு
த்தமிழுணர்ந்து திகழ்வித்துவசனங்கள்புகழ் மொய்த்தசவராயனுவரோ

சகலஃமுவிளங்கவொளிரிருசுடருமம்பரந்தாளணியெனப்புனைந்த-தத்
வநாயகியாதிரண்டுபந்திருமுடி தரித்தவடவத்துதித்த, மகனெனுஞ்சே
சுவின்கைத்தாதை யெனநுவலும் வளனெனுஞ்சூசைமுனியின்-வளை
மிகுங்கதியளித்திட வொளிருமறையாக மன்னுதேம்பாவணிக்கு, நிகரி
லாநன்னெறி செல்யூகிசெய கான்மகிபனிறை தவந்தனிலுதித்த-நிலவும
ழைபொழியுமுகி லென்னமுத்தமிழ்மாரி நிகழ்தரப்பொழியவல்லோன்
புகழலங்கார சவாயனுகுணக்கடல் புரித்து செய்திடு முரைக்குப் புனி
தமிகுகாரைவாழ்பவர் விருந்துதவி நற்பூமாலை சூட்டினரோ ....(உ)

ம.ா.ா. தே-அந்தோனிமுத்துவாத்தியாரவர்கள இயற்றியது.

சீரிலகுதண்டமிழ்க் கடலையுண்டருமறைக டேர்ந்திணையிலாக் குரவ
னைப்ச்-செகமெலாம்புகழ் வீரமாமுனியுரைத்த தேம்பாவணிக்குத்தெளி
வுறப், பாரினுரைகூற வல்லவரிலையெனப்பல்லோர் பண்பினெருவற்றரு

கெனப்-பரனிட மிரப்பவருளிய புதுவைநகரில்வாழ் பாக்யசெய காணை யகன், தாரிலகுதிண்புயப் புதல்வனிவ்வுலகிலுறு சகலகலைகளுமுணர்ந் தோன்-தவராதவாக்கி சவராயலுமகிபனைச் சகலருங்கொண்டாடவே, ஏர் பெருகு காரைநகர்தேவர்த்தநாதன் மகிழினியகவியந்தோனிமுத் - திரு விழியினாற்கண்டு பிரசங்கமுங் கேட்டிசைத்தபாவிஃதாமரோ (க)

சீர்வளர்தேவனமலசரோச நற்சேவடியை
ஏர்வளரப்பழிச்சுஞ் சவராயலுவென்னுமுகில்
தார்வளர்தேம்பாவணிக் கடலுண்டுநரர்களென்னும்
பார்வளர்கூழ்தழையப் பிரசங்கப்பயம் பெய்ததே. (உ)

இலக்கியவிலக்கணப் பாடசாலைஉபாத்தியாயராகியநெடுங்காடு
ம. ரா. ரா. ரா - ஆதிமூலபிள்ளையவர்கள்
இயற்றியது.

காரேறுபூம்பொழிலுங் கமலமலர்த்தடம்பணையுங் கயற்கண்வேய்த் தோள, வாரேறுபூண்முலையாருலவுமணிமாடமு மாவணமுமல்கும், சீ ரேறு புதுவையில்வாழ் தாரேறுபுயச்சவராயலுமால்சீற்றத், தோரேறு புலவருக்கென்றறிஞர் வியந்திடிற் சிறியேனுரைப்பதென்னே. (க)

நலந்திகழும்புதுவைநகர்ச்செயகான்செய்தவப்பயனிந்நாளிலன்னோன் குலந்திகழ வியலிசைநாடகமெனுமுத்தமிழுணர்ந்தோர்கூடுஞ்சங்கத், தலந்திகழச் சவராயலெனும்பேர்பூண்டுலகி லவதரித்ததென்னிற், புல ந்திகழச்சுகுணனுறுபெரும்புகழையென்போல்வார்புகல்வதென்னே.

கானாட்சியுறுந்தொடையலணிவளவன் காவிரிசூழ்கடிநன்னாட்டில், வானாட்சியாயுறங்குஞ் சிரகிரிக்கண் குறுமுனிபோல் வாழுஞ்சீர்சால், மீனாட்சிசுந்தரதேசிகன்பால் முத்தமிழ்ப்பயின்றமேலோனென்றாற், கோனாட்சிகொளும்புதுவைநகர்ச்சவராயலுவேள சீர்கூறுநீர்த்தோ. (ரு)

கன்னிமரித்துணைவனெனுஞ்சூசையின்சீர்செந்தமிழ்க்காப்பியமதாக முன்னுரைத்தமா முனியே திருவருளா லிந்நாளிம் முந்நீர் சூழ்ந்த, இன்னிலத்திற்புதுவையின்கண் சவராயலெனும் பெயர்பூண்டெழுந்தி ட்டானோ, என்னுரைப்பேனவன்புகழையியம்புதற் கென்னொருநாவமி சையாதன்றே. (ச)

நாடனைத்தும் புகழ்வேத நாயகமாலாயிரநாப் படைத்தவாதி, சேட னுந்தென் மலைமுனியுஞ்சவராயலொண்புலமைத்திறத்திற் கொவ்வார் நாடிலென வுணர்த்தனனால்மற்றையருந் தெரிந்த மட்டுநவின்றார் யா னு, மீடவனுக்கவனென்றேன் கற்பனையொன்றறியேன் வேறென்சொ ல்கேனே. (௬)

தருமக்கல்விச்சங்கம்

ம. ா. ா. ஐயாசாமிவாத்தியாரவர்கள்

இயற்றியது.

மூதாவாய் முச்சுடராய் மும்மண்டலத்திலொரு.................
நீதாவாயெவ்வுயிராய் நின்மலமாம் - நாதாவின்...............
ருளைமறவாத சவராயலுதாதாவிந்த.................
வேளைமறவாதிரங்கென்மேல் ....(க)

உருவிற்கருப்புவில்லேந்தியவேளுக்குயர்ந்தவனற்.........
றெருளிற்பொதியமுனியினுஞ்சாலவுநதேறனன்பே.........
ரருளிற்ககனத்துறையைந்தருவுக்கிணையவனீ...............
பொருளிற்குபேரன் சவராயலு வெனும் புண்ணியனே...(உ)

கஞ்சமும் மதியும் நிகர்நின்முகங்கண்டபேர்கள்கலியகன்றேமே...
வஞ்சமும்பழியுஞ் சுமந்தேதிரிவாரைப்பாடியவவைதைப்பார்க்கிலும்..
மஞ்சுமஞ்சுந்தருவஞ்சுவள்ளலேமற்றுன்னும முனைக்கினும்போதுமே
தஞ்சமாகவருஞ் செயகான்செய்மாதவம் விளங்கவருஞ் சவராயலே.(ரு)

கும்பனிதமிழ்ப்பள்ளிக்கூடத்துத்தலைமை உபாத்தியார்

ம. ா. ா. பொன்னுசாமிபிள்ளையவர்கள்

இயற்றியது.

காதலுடன்மோயீசன்வரவைமுன்னோர் காணவெதிர்நோக்கினர்போற்காணமாக்கள், எதனெனும் பொழிற்குநிகர் புதுவை மேவுமினியசவராயலுவையெதிர்பார்த்தாதி, வேதசீனயேயீன்றவனைமரியைவேண்டவேளார்காணிக்கேகவிமலசூசை, மாதவனுக்கினியவன்றன்னையங்கண்மகிழ்ச்சியாக்கண்டழைத்துவந்தாரன்றே.....................(க)

வந்தவர்களவற்குபசாரங்கள் செய்தவ்வளன் சூசைமுனிகைக்கோற்றுளிர்க்கும்போதி, லெந்தைபிதாவாலயத்திலவர்செல்லோருமியற்றுதுதிபோலிவற்கு முகமன்கூறிச், சிந்தையிருணீக்கியறம்பயக்குநன்னூற்றிவ்யதேம்பாவணியின்சிறந்தபாவைச்,சுந்தரனேயுனாயிடெனவன்னவன்றன் சொற்குறிப்பைக்கண்டெவர்க்குமறிக்கையிட்டார்.......(உ)

இட்டமாயனைவோரும் வந்துலாயனொனும்ஞானப்பிரகாசனெழிலாரில்லிற், சட்டமாத்தீபமிட்டுமொலைகட்டச்சங்கப்ப்ரசங்கஞ் செய்சமயமாலைத் திட்டமாமணியேழுபுந்திவாரநதேதிபதினறு செப்தேம்பர்மாதம் வட்டமாமிரவிசுத்தெட்டெட்டுநாலும் வனைந்தபதினெண்ணூறுவருஷமாமே...(ரு)

மாக்கள்புரிபவ மொழிக்கவுலகின் முன்னமானிடனுயுற்று துயருற்று நட்மைக், காக்கவந்தகடவுளுக்குத் தாதையானகருணைவளன் கதைத்தேம்பாவணியைப் பல்லோர், பாக்களிலுஞ்சுருதியிலும் பாரின்முன்னோர்

பகர்ந்திடுபன்னூல்களிலும்படாநமிட்டு, வீக்கமுறுபுகழ்ச் சவராயலு பூபாலன் விளங்கவைத தானுலகம் வியப்பநன்கே (ச)

கார்கொண்டநீருண்டுவ னின்றுசொரிகின்ற கருணைபோற் சுருதியெனுநற்கலையுண்டிங்கலைகின்றநரரின்று நிலைநின்றுகதிசென்றுவாழ்வு பெறவே பார்கொண்டவளமெலாம்நேர்கொண்டபுதுவைவாழ்பாக்யசெயகாருய்கன்- பண்புபெறு தவமதனிலின்பமுறவந்தநற்பாவலன்சவராயலு, சீர்கொண்டவறமுண்டு தெருணின்றகவிகொண்டு செய்யும்ப்ரசங்கமாரி செகத்தைக்குளிர்த்துநம்மனத்தைத்துளிர்த்தறஞ் சீருறவிளக்கினதினால் ஏர்கொண்டவன்னவன் சீர்கண்டுகவிகொண்டிசைக்க வென்னாலாகுமோவினியகல்விச் செல்வமோங்கிவாழ்நற்குண மிலங்குமிச்சபையோர்களே .... (ரு

நீர்மலிவடக்கியிருணீக்கி யுலகாக்கியொளிநிருபிக்குமமலன்றனை - நிலையிலாதன்றேவை கொண்டகோதகலவிந் நீணிலந்தனிலளித்த- நித்யபரிபூரணசுசீலபுண்ணிய வமலர்நேயமொடுபணியவோங்கும்- நிலவுபானுடுபுனைந்தெவ்வரமுமேபூண்ட நிமலியருள்வாய்ந்த புண்யா, சீர்மலிவுறங்கௌரிகுலதிலகயோகனே தீனேபுதுவைநகர்வாழ்- செயகானெனுஞ்சுகுணநிபுணன் செயமாதவச்செல்வனே கலைவலோனே-தேர்ந்தநம் வீரமாமுனிவன்பகர்ந்த செந்தேம்பா வணிக்குரைசெயுஞ்-செந்தமிழ்ப் புலவனேவலவனேநாவலர் சிரோமணியெனுஞ்சீலனே-பார்மலிந்தோங்கு துரைமார்கள்செய்துதியனே பன்னுநாவலர்நிதியனே - பாவாணர்நாவேதி விளையாடுபுனிதனே பகர்கோதேலாண்டவருடன் -பத்தியுறுசத்ய வேதியராசிபெற்றோங்குபாக்யனே யதியோக்யனே-பன்னுசெம்பொற்றகடுமலர்மாலையொடுபுலவர்பா மாலையணிதோளனே, தார்மலிபொழிற் காரை மாநகரின்வாழுந்தனுதி பரவழைக்கவந்து - சத்யவேதார்ப்புதமிலங்கப்ப்ரசங்கஞ்செய்சவராயலாஞ்சுகுணனே - சந்தானகுருவெனவிளங்கு மாவீரமுனிதானென்னவிளங்கியென்றுஞ் - சகலசம்போகபாக்கியசெல்வமொடு நீதழைத்துமேன்மேலும்வாழ்க .... (சு)

தமிழுபாத்தியார்

ம. ள. ள. ஞா-ஆரோக்யம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

தருமகுணலாயனெனுஞ் சம்பன்னன் காரையில்வாழ் சதுரன்வாணர் ...
அருமையறிந்துதவு ஞானப்பிரகாசப்புனிதனழகாரில்லின் ....
வருமதினா ரோடெவருமகிழ்ந்திடும் பூதுறத்தேம்பாவணிப்ப்ரசங்கம்..
பெருமையுறச் செயுஞ் சவராயலு நாயகற்கிணையார்பேசுவீரோ....(க)

அவக்காஇராயப்பிள்ளைகுமாரர் உபாத்தியார்

ம. ள. ள. அண்ணாசாமிப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

திங்களணிந்தவன்மகனேதேவனெனப்பலமதத்திற்சேர்ந்துளோருஞ்
சங்கையறத்தேர்ந்துய்யத் தமிழ்ப் பிரசங்கஞ்செய்யுந் தகைமையுள
ளோன், துங்கமுறு புகழ்பெற்றதூயசவராயலுமால்துலங்குஞ்சாரா,யெ
ங்கு மெழிற்பாமழையையினிதாப்கபெய்ததற்கென்கைம்மாறே (௧)

அவோக்கா

ம. ா. ா. அ-தனக்கோடிமுதலியாரவர்கள்

இயற்றியது.

தூயராந் துப்பிசுவாமி சுகுணநஞ் செயகானீன்ற..........
சேய்சவராயலுக்கோர் திவ்யநற்புகழ் பொறித்து..........
நேயமோடளித்த தேம்பாவணியு மிந்நிலத்தோர்தந்த......
தாயபொற்றகடும் வானமணியிரு சுடர்க்கொப்பாமே.... (௧)

பாரினிலுயர் பரீசுபட்டணந்தனிலச்சிட்ட.........................
சீர்ரொவிதுய் மோந்த் கொலோனியால் சிறந்தபுத்தகத் தின்மிக்க.....
பேர்பெறுமொமேர்க்கொப்பென்று பெருமையாயிவனைச்சொற்ற...
தார்புயமன்னர் வாய்க்குச் சக்கரையிடவேண்டும்மே............(௨)

பொன்பரவுவெண்கதிரிலங்கு மாமணிகள் வளர்பொற்புறுந் தண்ப
ணைகள்சூழ்-புகழ்பெற்றபுதுவையம் பதியுற்றமாப்ரபலப்ரபுடீசபுண்
யரூபா, பொன்வரைப்புயசிங்க மெனவிளங்கிடு துங்கபுனித சவராயலுகு
ஞ-பூமிபுகழுஜீதகனதனயோகபோகனே புகலுமொழியொன்றுகேண்
மோ, பொன்மை நிறைதோகைமயி லியலினள் கயனயனபூந் தாளவட
முலையினள்-பூஜீதப்பதுமதளவதனவனநடையினளபுருடர்ப்ரமைகொ
ளுமெழிலினள்; பொன்வளர்விலாசமண மடமாது நினைமரீஇப்போ
கிக்கமாலாயினள்-போகபதியே யிவட்புணர நீயருள் புரிவைபூபால து
ரைவள்ளலே..(௩)

சீர்கொண்ட கமலமலர் வாவியுஞ் சோலையுந்திகழ் மாடகூடங்களுஞ்-
செறிபுதுவையம்பதியி லமலனருளோங்கி வாழ் ஜெயசுகுண புனிதசீ
லன்-தீரகெம்பீர பரதாரசோதரனெனது சிந்தைதக்குவந்த மித்ரன்-செ
ப்புமுத்தமிழெனுங்கடலுண்டு கவிமாரி தீதறப் பொழியுமேகம், ஏர்
கொண்ட புலவர்புகழ்சவராயலென்னவே யிசைகொள் பேராண்டகைக்
கே-எழில்வளமிகுந்தொளிர் செய்காரையம்பதியினிலிருக்குந்தனக்கோ
டியான்-இன்பநிறையன்பினேடெழுதுவாசகவிபரமென்ன வென்றலிப்
பவும் - இவ்விடத்தியாவரும் க்ஷேம மவிடத்தியல்பை யெழுதிடக்கோ
ருகின்றேன், பேர்கொண்டிலாதபுன்கவிபாடுமொப்பற்ற பேதையாம
ருளப்பனென்-பேரினிற்றுதிகவிகள்பாடினனக்கவிகள் பிழையுடைய
வென்றறிந்தும்- பெருமைபாராட்டி யிருபதுவராகன் வரையில் பேசு
மின்சொல்லினேடு -பெறுகென வளித்தனது பற்றுதெனக் கருதிபே
யெனவெகுண்டு சீறிப், பார்கொண்ட புகழிலாத்தியருளா கேட்டு வசை

பாடினனச் செயலினுற்-பன்னரியகாவலொமேல மூத்திரங்களும்பகர்
கொசுகு முக்கெடும்பும் - பறையரு நிறைந்தடாணைச் சாவடிக்குளப்
பாதகனிருக்கின்றனன்- பாங்குபெறுமிச்செய்தி நமது நேயர்களாதிப
லரோடு நீ யறிகவே..................................(௭)

குலமகளிராசம்மாள் விழிக்கணியாப் பொருட் கேற்பக் கொடுக்கும் போக, விலைமகளிர் கொடுவெஞ்சவிழிப்பகையாப் பாகூரில் விளைமுப் போக, நிலமகளுக்கோரரசாய் மலர்மகளுக்குறையிடமாய் நிறைவுற் றோங்கும், கலைமகளுக் கெழிலாவானுஞ் சவராயலு நாமக்கவிஞரேறே.

ம. ர. ர. பொ-பிரபலநாதப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

காவிருக்குமெழிற் காரைலாயனொன்னு ஞானப்ரகாசனில்லிம்........
பூவிருக்கும்புகழறிஞர் கரசிரகம்பிதஞ் செய்துபுகழ்ந்துபோற்றப்...
பாவிருக்குந்தமிழ்த் தேம்பாவணிக்கும் பன்னூற்குமுரை பகர்ந்தான்
கற்றோர், நாவிருக்குநம்புதுவை வளர்சவராயலுநாமநாவலோனே...(௧)

ம. ர. ர. இராமசாமிஉபாத்தியாரவர்கள்

இயற்றியது.

திருவார்காரைமாநகரிற் செல்வன்சுப்பராய னில்லிற்..............
பொருவாவாய்மை யரிச்சந்ரன்புகழார் கதையையந்நகரின்.........
மருவாவலவருடனெவரு மகிழப்புதுவை நகர்செயகான்...........
தருவான்சவராயலு நாமச்சதுரன் பிரசங்கித்தனனே.............(௧)

தரங்கம்பாடி கத்தோலிக்குரோமான் கிறீஸ்துவர்களில்
தலைமைப்புலமைநடத்தும்உபாத்தியாயர்

ம. ர. ர. பி-கண்ணுசாமிப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

மணியாருமவுலிபுனை தவிதரசன் கீதசுரமண்டலத்தான் - மகிழமல னருண் மறைப்பாற் கடலினிடை மதியெனு தன்மத்தைநாட்டிக், கணி யாருந்தவவீர மாமுனிவன் மிகவிரும்பிக் கடைந்தெடுத்த - கனமதுர வினியவமுதத்தைநறுந் தமிழ்ப்பாக்கள்கவின்றுபல்ல, அணியாருஞ்சு வைரசத் தேம்பாவணியா மெழிற்கடத்திலமைத்து வைத்தான் - அத னைமடமாதர் நடங்கண்டுமயிலகவு புதுவையின் கண்வாழும், பணியா ருங்கவியெனக் கொள்புயன்சவராயலு நாமம்படைத்த மேலோன்- பன்னுபிரசங்க வள்ளத்தார்புலவர் செவிவாயிற்பாய்வித்தானே...(௧

உத்தமனும் வீரமுனியொண்கிரியினிற் றோன்று..........
மத்தமியாத் தேம்பாவணியெனுமா - தித்தனை நாம்........
கூசாமற் பார்க்கக்கொடுத்தான் சவராய..................

லாசனைத்தேவனமைத்து..............................(உ)

மின்னுலவுபரிதிமதிமீன்பயோதரமெலாமிகுபாரமாகுமதனுன்-விசு
ம்பிடித்தாற்றனது மகர்மடிவரொனவுட்குமேதினிப்பெண்காதல-மேற்
றுங்கலொத்துயர்ந் தோங்கணிசிறந்தரண் விளங்குநற் பொன்மைமதி
ல்சூழ்-வியன்றரங்கம்பதிவளம்பெறவெழுந்தருளுமீன்மகுடகதிரம்பரி,
தன்னிலவுமேன்மலர்பதாம்புயச்செபமாலை நாயகியினுலயத்தில்-நவிலு
முயர்திருவிழாவினிற்றவநிறைந்தமெஞ்ஞானக்குருப்ரசாதிநனிமகிமை
காபிரியல் தொகாராஞ்சுவாமிகளினயமுலவுசமுகமதிலிந் -நகர்வளர்கிறீ
ஸ்துவர்கள் பரமதஸ்தர்கள் பலருநண்ணு சங்கத்தினுக்குப்-பன்னல
நிறைந்துவளர்புதுவை செயகானுதவுபரிதிநேர்சீர்த்தியுடையான் - பன்
னிலக்கண விலக்கியவாரியுண்ட நம்பாவலன்சவராயலு-பரன்வேதபாலா
ழியுண்வீர மாமுனிப்பண்புமுகில் பொழியமுதெனும்-பார்துதிக்கின்
றதேம்பாவணி விருந்தெனப்பகிர்ந் தளித்தானருந்தப், பொன்னுலகி
ராக்கினியுமாகாய விரிவினிற்பொந்ததரிசனமாகவே - புக்கனையவவள
பொனடியமுதகிரணனு மவுலிபொங்குதாராக்கணமதும் -புகழ்பெறுப்ர
சங்கப்ப்ரபலகவீசுரவிபுவின் புனிதகுண வினிமையெனவே - பொங்கிந
தனவிருந்தமுதி லமுதஞ்சொரிந்தெனப் போற்றினானைவோருமே(௩)

தேம்பாவணிப் ப்ரசங்கத்தாலஞ்ஞானத்தி மிரமது.........
தேம்பாவணி மிகவுட்டாமரையாஞ் செழுமலர்கள்.........
தேப்பாவணிசெய் திசையின்மரியுடைசீர் மையினால்........
தேம்பாவணிபான் சவராயலுவெனச் செப்புதுமே.......(ச)

எற்பராபரன்வேதச் செழும்பொழிலிடத்துவீர முனியெனுஞ்சற்குரு
வற்புதப்பொருளாகும் பயன்மலராய்ந் தெடுத்துத்தெம்பாவணியாக்கி
னன், பொற்பலதைச் சவராயலுப்பாவலன் பூண்டுபூண்பவர் பொன்னில
நன்மணச், சற்ப்ரசாதகல்யாண விருந்தினிற்சாருநன்மைவிளங்கச்செ
ய்தானரோ ....(ரு)

திருமலைராயன்பட்டணத்துக்கும்பினிப்பள்ளிக்கூட்டத்துத்
தமிழ்த் தலைமைப்புலமை நடாத்தும் உபாத்தியாயர்

ம. ஈ. ஈ: ச - ஞானப்பிரகாசம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

கந்தரந்தோய்காவெழிற்சூழ் புதுவைவாழுங் கௌரிகோத்திரன் செய
கான்றோன்றுல்வானுர், சந்திரபாதத்தி யருணீழனீங்காச் சவராயலுக்க
விளுவருள் வேதந்தான், சுந்தரவோருருவமைந்த சூசையென்னுந்தூய
முனிசரிதவமுதக்கையிங்க,ணந்தரமிலின்புறவெஞ்செவிவாயூட்டுமோதர
நின்மகிமையெம்மா லறையப்போமோ.....................(க)

சுலவுதிரையுவர்க்கடனீரருந்தியிங்கண்டுவேமுகிற்கேதுவு கைம்மாறெ
ன்பாரோ, வுலகமுவப் பிற்புகழோர்முனிவன் சொன்னவுயர்தேம்பாவ
ணியமிர்தவுததிதன்னை, இலகுமுளநிறையவுண்டு நாவாற்பெய்தேயெ

ஞ்செவிவாயினி தூட்டி யெமதான்மாவு, மலகிலசுப மருவவருள் சுரந்த
நிற்காமருங்கைம்மாறெவனறைதியழகியோனே................(உ)

பம்மின்னார்தருவான் சூழுலகனைத்தும் பரிந்தீந்தாதரித்துவக்கும்பர
மனன்னு, டம்மன்பாரிசரோலர் பசியான்வாடத்தருமன்னவன்னார்துய்தி
டவளித்தா, னம்மன்னுசெயகான்வேடவத்திற்றோன்று நலந்திகழுமெழி
ற்சவராயலுபூபாலா, வம்மன்னுநின்மன்னு வினிதினூற்றுமருண்மறை
த்தேம்பாவணிப் பாவமிழ்திற்கீடோ..........................(ஙு)

சந்தமார்கௌரிகுலத்தினன் செயகான்தவத்தவதரித்திடுகவிஞன், வி
னைதசேர்செம்பொற றகடணிபுயநம்விறற்சவராலுவேந்தாஞ், செந்த
மிழ்ப்புலவனின்னரும் புகழைச்செப்பிடாச் சிற்றறிவினரைச், செந்த
மிழ்ப்புலவனொனவறிவாளர் செப்புவரிழிவுறமாதோ...............(ச)

செஞ்ஞீலமதர்த்தடஞ்சூழ் புதுவைவாழுஞ்செல்வ சவராயலுபூபதி
யேநீயே, வஞ்ஞாலத்தோர்க்கினியவமுதமென்னுமாரணத் தேம்பா
வணியையார்க்குமோதி, யஞ்ஞானவிருளகற்றிச்சேசுவென்னுமர்புதனை
யெப்பொழுதுமருச்சித்தறகிம், மெஞ்ஞானப்பிரகாசவேந்தனென்னும்
விற்பனன்வாழ் பொற்பகமே மேலாமன்றே....................(ரு)

ம.ா.ா. நாகைமுத்துப்புலவரவர்கள

இயற்றியது.

மலைமானுங் கொரிகுலச் செயகானீன்ற மன்சவராயலுவெனும்பூபதி
யே நீயே, கலைமானை நாவிருத்தவி தியன்னமிறங்காதுகமலத்துற்றுன்
அலைமானின் வயினுறவே மாலாகி யரிமண்ணை யள்ளியுண்டான்,
தலைமானின் புகழெவரோதேற்றமுறச் சாற்றவல்லார் தருமவானே..(க)

நாமக்கல் ம. ா. ா. இராமசாமிஐயரவர்கள்

இயற்றியது.

சிந்துடன்பதமுஞ் செய்யவண்ணமுஞ் சித்திரக்கவியும்லுத்தர்மேற்
சொலி, நொந்துநெஞ்சமிகவுடல் சொக்கியேநோய்கொண்டே திரிந்தி
ர்பயனென்கண்டீர், கந்தமேவுபொழிற் புதுவாபுரிக்காவலன்செயகான்
செய்தவத்தினால், வந்தசுந்தரனுஞ்சவராயலை வாழ்த்துவீர்போற்றுவீர்
கவிவாணரோ...(க)

நாமக்கல் பாட்டகர் ம. ா. ா. சாமிஐயரவர்கள்

இயற்றியது.

குலந்தவவாய்மை நெறிசாத்துவித குணமொடுநன்......................
நலந்தருமேன்மையுறுஞ் சவராயலு நாயகன்றன்......................

பொலந்தரு கீர்த்திதனைக்கேட்டிமயப்பொருப்புருகி ....
வலந்தருமீசன் கைவில்லாயிருப்ப வணங்கியதே................ (க)

முசறி ம. ா. ா. சேதுஐயரவர்கள்

இயற்றியது.

கடுத்துத்தரவொன்றுஞ் சொல்லாமனுவலர் கைநிறைய...........
எடுத்துத்தனத்தை வதனுரவிந்தம தின்புறவே..................
கொடுத்துப்புகழ்பெறு நஞ்சவராய லுகோமனையை..................
அடுத்துத்திரிபவர்க் குண்டோவறுமையணங் கரசே................(க)

சேலம் ம. ா. ா. நாராயணசாமிநாயகரவர்கள்

இயற்றியது.

செல்லுக்கட்டு மட்போலும் பணங்களைச் சிக்கெனத்தேடியுண்ணுவு லோபர்மேற், சொல்லுக்கட்டுறவண்ணங்கள்பாடியேசோர்வுற்றேமன ஞ்சோரும்புலவரோ, கல்லுக்கட்டரண்சூழ்புதுவைச்செயகான்தவச்சவரா யலுபாற்சென்றுன், மல்லுக்கட்டிவேண்டாமென்றாலும் பொன்னைவா ரிவாரிமகிழ்வாயளிப்பனே ....(க)

சேலம் ம. ா. ா. இராமசாமிவாத்தியாரவர்கள்

இயற்றியது.

கானறுமின்மலர்ச் செந்தொடையினன் கன்னனென்னவழங்குங் கொ டையினன், மாநிலம்புகழ் தொண்டை நன்னுட்டினன் மருவுங்கீர்த்தி யைத் தான்மகிழ்ந்தீட்டினு, னீனமாம்புன்கலியைத்தூரத்தின னிலகுந ஞ் செயகானின்வரத்தினன், றுன்வருஞ்சவராலு நாமப்பேர் தழைக்கவ ந்தருள் கற்பகத்தாருவே......................................(க)

பட்டாம்பாக்கம் ம. ா. ா. சுப்பராயவாத்தியாரவர்கள்

இயற்றியது.

மாவேதினு னிந்திரன் கயிலாய மயேசுரன்றுன்..............
சேவேதினுனரிபுள்ளேதினன் செயயவாவிகளிற்...........
பூவேறு தென்புதுவைச் சவராயலுபுத்தமுதப்..............
பாவேறுவாணர்கணுவேதினுனென்று பார்க்கவென்றே....(க)

மாயூரம்வண்டிக்காரத்தெரு

தாசி பெ-குப்புஎன்பவள

இயற்றியது.

ஆமலியும் வயற்புதுவை வளர்செயகான்றவத்திலெழுமருமைமைந்த,

ணுமலியுநற்சவராயலு புலவனியற்றிய நற்கவிதையைக்கேட்டுக், காமலியுந்
தென்றன்மலைக் கும்பமுனி சிரமசைக்கக்கண்டாரெல்லாம், பாமலியும
வன்புலமைக் கிவன்புலமைபெரிதெனவேபழிச்சுவாரோ..........(௧)

சங்கினந்தவழுங்கழனி சூழ்புதுவைத்தனிநகர் மருவியசதுரன், பங்
கமில்செயகான் றவத்தெழுஞ்சவராயலு புலவன்பகர்கவியைத், துங்கவ
ண்ணனந்தன் கேட்டுளந்துடித்துத்துயரெலாமழுந்திடப்பிலத்திற், றங்
கினனென்றுற்றறையுளோர்புகழத் தகுதியோபுலமைசான்றவரோ.(௨)

புண்ணியப்புதுவை வளர் செயகான்றன் புதல்வனுமுலகெலாம்போ
ற்ற, நண்ணிய சவராயலுபுலவன்றானவின்ற சீர்க்கவிதனைக்கேட்ட, த
ண்ணியுவெண்டாமரையில்வாழ் மகளுந் தனதுடல்விளர்த்துடனெழு
ந்தே, திண்ணியமொழியாற் சபாசென வுரைத்தாட்டினைக்கடலுலகர்
சொல்லுவதென்.....................................(௩)

மதியுறுபுலவர்சிரோமணியா மீனாட்சிசுந்தரமகிபாலன், கதியுறுமிந்த
க் கவிச்சிறப்புரைக்கக்கடவனேவென்றனன்களிப்பாய்த், துதியுறும்புது
வை வளர்செயகான்றன் றுய்ய நற்றவத்தினிலுதித்த, விதியுறுஞ்சவராய
லு முகினவின்ற வித்தகக்கவி சிறந்தன்றே..........................(௪)

நாட்டிலிருக்கிலந் நாட்டார்சொல்வார் நன்னலந்திகழும்......
வீட்டிலிருக்கிலவ் வீட்டார்சொல்வாரன்றி வேறிலையென்.....
றேட்டிலிருக்குஞ் சவராயலு மன்னிரும்புலவர்ப்..........
பாட்டிலிருக்கின்றனன்யாருமேதுதி பண்ணுதற்கே ......(௫)

நேயரே

மகா - ா - ா - வித்துவான் செ. சவராயலு நாயகர் தேம்பாவணியை
யும் அனேகம்பிரபந்தங்களையும் நன்குதெளிவாப்பிரசங்கித்ததைக் கே
ட்டு மகிழ்ந்த சத்தியவேதபோதகர்களாகிய சங்கைக்குரிய தூய இராஜ
ரிஷி குருசுவாமிமார்களும் இப்புதுவைவாழ் கற்றோர்மற்றோர்யாவருந
தங்களுக்கு அப்பிரசங்கத்தின்மட்டில்உண்டான ஆனந்த சந்துஷ்டியை
வாடாமாலையாப் பிரதாபரூபப்பவளக்கோர்வையாக்கிப் பொன்மலரிட்
டு ரத்நகஜிதஞ்செய்து தங்கள் தாற்பரியத்தைப்பொறித்தசுவர்னத்தகட்
டிற் பதித்துச் சென்மவிராக்கினிமாதாகோயில்முன் இன்றுசாயந்திர
ம் ஆறுமணிக்குச்சிறந்தமேற்றிராணியாராகிய ஆண்டவரின் திவ்யகரத்
தால் நம்முடையகுவர்னர்முன்பு ஷெ சவராயலுநாயகருக்கு அணிவித்
துப் புதுவை காரை திரிசிரபுரம் சேலம் முதலியபதிகளிலுள்ள கவிச்ச
க்ரவர்த்திகளால் அவருக்கு அணியப்பட்டிருக்கும் தலங்கா அலங்கலா
கிய உன்னதசாற்றுக்கவிகளைப் பிரசங்கஞ்செய்விக்கப் போகின்றதைத்
தாங்கள் தயைசெய்து வந்திருந்துசிறப்பிக்க நிரம்பவுந் தங்களைப் பிரார்
த்திக்கின்றோம்.

புதுவையில் ௲அ௱௯௰௧-ம் ஆ௵ ழுவேன் ௴ ௯௨
இங்ஙனம் இராசேந்திரம் பொன்னு. ஞா. ஆனந்தராயன்.

சத்யவேதபக்தியுடையீர்

இம்மாதம் - ௨௮-ம் ௳ ஞாயிறுவாரங்காலை - ௯ - மணிக்குப்பாகூர் செயராக்கினி மாதா கோவிலை மிகவும் சங்கைக்குரிய நம் ஆண்டவர் அபிஷேகஞ்செய்து நடாத்துந்திவ்யபூசைக்கும் அன்று மாலை நடக்கும் இரத உற்சவத்திற்கும் தாங்கள் குடும்பசகிதராய்வந்து சிறப்பிக்கநிரம் பவும் பிரார்த்திக்கிறேன்.

௲௮௯௯-ம் ஆ ஜனவரி ௴ ௨௫ ௳

இங்ஙனம் பாகூர் கிறீஸ்துவர்களுக்காக செ. சவராயலு.

பாகூர் தேவாலயவிருத்தாந்தச் சுருக்கம்.

செயகான்நாயகரால் முப்பதுவருஷத்திற்கு முன்பாகூருக்குஉத்யோகாரவனுப்பப்பட்டவவர்மருகர் சஞ்சீவிசெட்டியார் அவ்வூரார்களுக்கு மெத்தவு முதவிசகாயங்கள் செய்தும் பலவினோதங்களைக் காண்பித்தும் வருவர். இதனாலிவர்மட்டிலவர்களுக்கதிகபிரிய முண்டாயிருந்துமவரனுஷ்டிக்குஞ் சத்தியவேதமொன்றைமட்டு மவர்கள் விரோதிக்காமலிருந்ததில்லை. அஃதென்னெனில் அவருடையமூன்றுவயதுள்ள தாயம்மாளென்னு மேகபுத்திரி -௲௮௪௫-ம். ஆ பெவுரியே ௴ ௨௮௳ மங்கலவாரம் மோக்ஷானந்தமடைந்தபோது அம்மாசற்றபிள்ளையடக்கஞ்செய்யவவர்களதிவிக்கினஞ்செய்தார்கள். அவர் அவர்களுக்கஞ்சாமலதையவ்வூரிற்றானே புதைத்து ஐந்துநாள் வரையிலவ்விடத்திலவரே காவல் காத்துக்கொண்டிருந்தார். பின்பவரவ்விடத்திலோர் கல்லறைகட்டவேண்டிக் கொடுக்கும் விண்ணப்பங்களை யவர்கள்பலதரந்தடுத்தும் துய்காம்பேர் என்னுங் குவர்னர் துரை -௲௮௪௪-ம். ஆ ஜூவேன் ௴ ௭௳ இருபதுகுழி நிலம் கல்லறைக்காகக் கொடுத்தனர். பின்பு ஷை செயகாநயகரின் குமாரர் முத்துச்சாமிநாயகரு மங்கேயடக்கம் பண்ணப்பட்டதால்கிறீஸ்த்துவர்களுக்குள்ளபேரிடுக்கமொழிந்தது.

இதற்குப்பின் ஷை செயகாநயகரினிளைய குமாரராகிய சவாராயலுநாயகர் அவ்வூர்ச் சிவன்கோவில் வீதியிலோர் வீடுகட்ட வாரம்பித்தபோது ஷையார்கள்மெத்தவுமிடையூறுகள்செய்துஅவர்வாசற்படியில் வைக்குந்திருக்குருசை மூன்றுதரமுடைத்துப்போட்டார்கள். கடைசியாப் பெருஞ்செலவில் வீடுகட்டப்பட்டது. இவைகளைக்கண்ட ஷை நாயகரிவ்வூரிலோர்தேவாலயமிருந்தால் மிகவு நலமென்றெண்ணிஅவ்வூர் நடுவிற்பாழாக்கிடந்தவோர் பெருமாள் கோவிலைச்சேர்ந்தசிறிது நிலத்தைக் கொடுக்கும்படி யதற்கனுபோகசுதந்தரவாளர்களான-ஞா-அண்ணாசாமிப்பிள்ளையை துரைசாமிப்பிள்ளையை நிரம்பவும் பிரார்த்திக்க வவர்களதை யவர்பேருக்கு ௲௮௬௰ ஆ நொவாம்பர் ௴ ௧௭௳ நன்கொடை

யாகக் கொடுத்தார்கள். அதையவர்சற்கார்தஸ்திரங்களிற் பதிப்பித்ததை யவ்வூராரறிந்தபோ துண்டான குழப்பங்கள் கொஞ்சமல்ல. அச்சமயத்தில் சவராயலு நாயகர் மிகவுஞ்சங்கைக்குரிய புரோவிக்கேர் துய்ப்பிசுவாமிகளிடத்து நிகழ்ந்தவையாவு மறிவித்தவராசீர் வாதத்தைப்பெற்று கொண்டு ௸ பெருமாள் கோவிலையு மதைச்சேர்ந்த-௮௱-குழி நிலத்தையுங் கிறிஸ்துவர்களுக்குக் கொடுக்கும்படி ௸ ௵-௸ ௴ ௨௮௳ விண்ணப்பங்கொடுக்க தூய்ரான் துபுராய் குவர்னர்துரை-௲௮௬௧ ௵ ழான்வியே-௴ ௫௳ அப்படியே கிருபைசெய்தார். அக்கோவில் இஞ்சினீர் சுயார்துரையா லிடிக்கப்பட்டது. அப்போது மிசியத்தில் புரொப்க்குரோராகவிருந்த சங்கைக்குரியரிஷோஞ்சுவாமியார் கொடுத்த பணத்தைக்கொண்டு ௸ நாயகர்-௸ ௵ அவுறீல௴ ௮௳ இத்திருப்பணி வேலையை யாரம்பிக்க௸ ௵ ழுலேத்து ௴ ௬-௳ சனிக்கிழமை காலை-௭-மணிக்குச் சங்கைக்குரிய தெலெயாழ் சுவாமியார் செழுங்கரத்தால் கோவிலஸ்திவாரம் போடப்பட்டது. அவருக்கிருபுரமுஞ் சங்கைக்குரிய பல்கு சுவாமியாரும் பிறியேர்சுவாமியாரு மிருந்தார்கள். ௸ கோவில் பிளான் ௸ தெலெயாழ சுவாமியாரா லமைக்கப்பட்டது. ௲௮௬௫ம் ௵ மே௴ ௧௧௳ சுக்ரவாரங்காலை-௭-மணிக்குச் சவராயலு நாயகர் கோவிற்சிகரத்திற் றிவ்ய திருக்குரு சாரோகணஞ் செய்தார்.

இவ்வகையில் நினைத்தகாரியஞ் செயமானதாலும் இதற்கு முதற்காரணமானவர்செயகாருயசராகையாலும் சவராயலு நாயகர் அதற்குச் செயராக்கினிமாதா கோவிலென்று பேரிட்டுத் தம்குமாரன் செயராயலு உயரத்தில ஓர் செயராக்கினிமாதாசொரூபஞ்செய்து அத்தேவாலயத்திலமைத்து அதற்குப்பாமாலைகளணிந்ததுமன்றி அபிஷேகப் பிரார்த்தனமென்றோர்விண்ணப்பமெழுதக் கிறீஸ்துவர்கள்செய்தவுதவியால் மகாவாடம்பரத்துடன் ௲௮௬௬-ம் ௵ ழான்வியே ௴ ௨௮௳ ஞாயிறுவாரங்காலை -௭- மணிக்கு மேலானகொதேலாண்டவரின் திவ்யதிருக்கரத்தாலாலய மபிஷேகஞ்செய்யப்பட்டுஅவராலதிற்றிவ்யபூசையும் நடாத்தப்பட்டது.அப்போது தாவீதுநாதசுவாமியார் நல்லபிரசங்கஞ்செய்தார் அன்றுசாயந்திரம் இரதவுற்சவம்அதி சிறப்பாநடந்தது.சங்கைக்குரிய தாராஸ்சுவாமியாரும் பல்லிசுவாமியாருமிருமருங்குற மகாமாதவரான மத்தியென்சுவாமியார் திவ்விய நற்கருணையாசீர்வாதங்கொடுத்தனர்.

பின்பும் ௸ யூராரோர் கரகத்தையெடுத்துக்கொண்டக்கோவிலையெதிர்த்துப் பெருங்கூட்டமாவரச் சவராயலு நாயகர் தடுக்கநேரிட்டசண்டையால்போந்தான்குவர்ன ரவர்களைமிகவுந்தெண்டித்ததாலுமவர்களவணைப் பலவழியிலும்பழிவாங்கவொன்றித்துமவர்௸ செயராக்கினிமாதாவின்பே ரருளாலவ்வூரிலிதுவரையிலு மிரட்சிக்கப்பட்டிருக்கின்றார்.

௲௮௭௰-ம் ௵.

திரிசிரபுரம்

மகாவித்துவான் ம. ரா. ரா. பிள்ளையவர்கள்

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

புதுவைவித்துவான் ம. ரா. ரா.

செ. சவராயலு நாயகரவர்களுக்கணிந்த

தமிழ் மாலை.

காப்பு.

மன்னும்புதுவைவளர் சவராயலு மன்னவன்மேல்
துன்னும்விருப்பிற்றமிழ் மாலையொன்று தொடுத்திடற்குப்
பன்னுஞ்சிறப்பும் பொருளுமணியும் பரிந்துதவும்
உன்னும்பலர்க்கு மிடையூறுதீர்த்தருளோர்முதலே

நூல்.

பூவுந்தளிரும்பரப்பினரல்லர்புலமையர்செந்
நாவுமுளமுங்குடியிருப்பாய் நன்று நன்றயலே
மேவுமிடமிலைகொல்லோமுகிறோய் வியன்பலவும்
மாவும்பொலிபுதுவைச்சவராயலு மன்னவனே. (க)

மொழிவார்முகினினக்கொப்பென்றவ்வாறுமொழிவதினோர்
பழியாமுருமுவிழுத்தனிற்குண்டு கொல்பாயமற்றொன்
றுழியேற்பதுண்டு கொலாதலினா முனையாமதுப்பூ
வழிசோலைசூழ் புதுவைச்சவராயலுமன்னவனே. (உ)

எல்லாரும்வாழ்த்துவர்நின்னையென்றியாருமெடுத்துரைப்பார்
அல்லாருங்கூந்தற்பரமாதனை யணையாமையினந்
நல்லார்பொல்லானெனவைவாருனையிதுநானறிவேன்
வல்லார்பொலிபுதுவைச்சவராயலு மன்னவனே. (ங)

உனைநாவலர் பலகேள்வியின் யாவுமொருங்கறிந்து
தனைநேர்பவனெனச்சாற்றுவரேனுமுன்சார்ந்துபெற்றோர்
பிணைமேவுவரளிப்பாயதியாமை பெற்றாயலையோ
மனைவான்றவழ் புதுவைச்சவராயலுமன்னவனே. (ச)

நானாயகனென்பைசாதியிற்கல்வியினற்பொருளில்
ஆனாக்குணத்தினஃதுண்மையுப்படியாகிலிவன்
ஏனாயகனெனக்காகா னென்பாணங்கையென்னுனாத்தி
மானவளப்புதுவைச் சவராயலுமன்னவனே. (ரு)

மேலாவிருப்பினும் வெண்மதியோனை விரவியவான்
தோலாவுருவங்குலைந்ததுமண்டொகுநூலுணர்ச்சி
காலாதசெம்மதியோனெனு நின்னைக்கலத்தலிறென்
மாலாவளப்புதுவைச்சவராயலு மன்னவனே. (௬)

குணமார்நினையிந்த மண்பெற்றுமேன்மைகுலவியதாற்
கணமாறெனக்கொப்பிலையெனும் வானுங்கதிரவனை
வணமார்தரப்பெற்றுவைகலிலஃதுமிவ்வண்ணஞ்சொல்லு
மணமார்பொழிற்புதுவைச்சவராயலு மன்னவனே. (௭)

அருளுறநீசெய்பிரசங்கம்போலவரவிறைவன்
தெருளுறநாளுஞ்செயநினைத்தாங்குந்திருநிலத்தைப்
பொருளுறத்தன்றலைமேற்றாங்குவானவன் புந்தியனே
மருளமையாப்புதுவைச்சவராயலு மன்னவனே. (௮)

கற்பகமேவலிற் சங்குங்கமலமுங்கையுறலிற்
பொற்பகமேவக்கனமேற் கொளலிற் புனிதனென்பாஞ்
சொற்படுமாயிரங்கண்வேண்டுவதிலைதூர்த்தன்கொலோ
மற்படுசெய்ப்புதுவைச்சவராயலுமன்னவனே. (௯)

பாரித்தபற்பசுவுட்காமதேனுவும்பன்மலருண்
வேரித்தடச்செங்கமலமும் வெற்பினுண் மேருவும்போற்
பூரித்தவள்ளலுணீ யெனயாரும்புகல்வர்கண்டாய்
வாரித்துறைப்புதுவைச்சவராயலு மன்னவனே. (௰)

உடுப்பலவற்றுண்மதிபோன் மதாணியுறுமணியுள்
அடுப்பநடுப்பொலிமாமணிபோற் கல்வியாளர்குழு
நடுப்பொலிவுற்றனை நீபிறர் தேர்வர்கொளுனறிவேன்
மடுப்பலசேர்புதுவைச்சவராயலு மன்னவனே. (௧௧)

கலைமதிமுன்னர் மலராதம்போருகக்கான மென்பர்
அலைவருநின்முகமாமதிகாண்டலுமார்வலர்தந்
துலைவருமங்கைக் கமல மலருந்துணிபுணரார்
மலைவருநீர்ப்புதுவைச்சவராயலுமன்னவனே. (௧௨)

எளியரைவாட்டும் வலியரைத்தெய்வமிறுக்குமெனல்
தெளிதரலுற்றனம் பல்லோரைவாட்டுந் திறன்மிடியின்
களியறவாட்டுவை நீ தெய்வமேயெனல் கற்பனையோ
வளியுளரும்புதுவைச்சவராயலு மன்னவனே. (௧௩)

காட்சிக்கெளியைகடுஞ்சொலிலாமையைக்காதலித்தார்
ஆட்சிக்குரியதிருவத்தை நீசெய்யருந்தவமென்
பூட்சிப்பாரஞ்சுமந்தார்பிறர்பாரம் புவிக்குறவே
மாட்சிப்பொழிற்புதுவைச் சவராயலுமன்னவனே. (௧௪)

குயிலோசைகேட்ட செவிகருங்காகங்கொடியதெனப்
பயிலோசைகேட்பதன்றோபிரசங்கநின்பாற்கவர்ந்தார்
அயிலூடுருவலெனப்பிறர்கூறவவாவுவது
மயிலேர்பொழிற்புதுவைச் சவராயலுமன்னவனே. (௧௫)

கண்டோர் நினைமிடி காணார் நின்னட்பிற் கலத்தலின்றி
விண்டோர் பெருந்துயர் விள்ளார் நினை நம்பு மேன்மையுளங்
கொண்டோர் பிறிதொன்றுங் கொள்ளாரெனி லெவன்கூறன் மலர்
வண்டோ விடும்புதுவைச் சவராயலு மன்னவனே. (௰௬)

அளவாவுவர்க்கடற்போற் பெருஞ்செல்வரனேகருளர்
கொளவாமொருகிணற்றூற்றன்ன நீ யிருகொள்கையருள்
உளவாம்விருப்பமெவர்பாலுண்டா மெங்கட்கோதுதி நீ
வளவார் பொழிற்புதுவைச் சவராயலு மன்னவனே. (௰௭)

கொடைவாய்குணம்பொலிநின்னோடு லோபகுணம்படைத்த
நடைவாய் குணத்தருந் தோற்ற மொத்தார் பயனன்குதவும்
அடைவாய்தருவொடுவற்றலுந் தோற்றமுற்றுவதன்றோ
மடைவாய் பணைப்புதுவைச் சவராயலு மன்னவனே. (௰௮)

துதிக்குநின்றோளலர்வேட்டதற்காகத் துடியிடையாள்
கொதிக்குமதன்கை யலர் பிறர்வாயலர் கூடக்கண்டு
கதிக்குமிருகண்ணலரொழியாது கலங்கனன்றோ
மதிக்கும்புகழ்ப் புதுவைச் சவராயலுமன்னவனே. (௰௯)

உலம்படுநின்புயங்கந்தென்றலைப்ப ரொளியிளையாள்
கலம்படு கொங்கைக் களிறுறச்சேர்ப்பது காரியமே
நலம்பட்டு மற்றவைகொண்ட கண்டேதியை நாட்டுவதோ
வலம்படு சீர்ப்புதுவைச் சவராயலு மன்னவனே. (௨௰)

மதியாதவனென நீயிருந்தாலிந்த மங்கையைவான்
மதியாதவனெனக்காய்வான்மதனுஞ்சும்மாவுறச்சம்
மதியாதவனெவன் செய்வாளிதினென்வருங்கொடைதா
மதியாதவன் புதுவைச்சவராயலு மன்னவனே. (௨௧)

தணிவரிதாங்கவி செய்தலினாற் பிரசங்கத்தினால்
அணிஇளருமிசைபாடலினா னல்குமாக்கத்தினால்
எணிமுடியாட் பெரும்பேராசையாற் புகழெய் துவை நீ
மணிமதிற்சூழ் புதுவைச்சவராயலு மன்னவனே. (௨௨)

கொள்ளைத்தமிழ்ப்புலவோரியல்வாய்ப்பக்குறித்தியற்றும்
பிள்ளைக்கவிமுற் பலவுநின்பாட்டின்முன் பேசலென்னே
வெள்ளைக்குணமிற்கதிரோன் முன்னுற்ற விளக்கமெனின்
வள்ளைத்தடப்புதுவைச் சவராயலுமன்னவனே. (௨௩)

எதிரங்காமைக் கெவனனவெய்துதலின்றியிராப்
போதிரங்காக்கன வெய்துதலே பெரும்புண்ணியமோ
வாதிரங்காவெளிக்கூறு வலோவெனு மாயிழையாள
மாதிரந்தேர் புதுவைச்சவராயலு மன்னவனே. (௨௪)

பேசப்பிறங்கும் புகழாளரியாவரும் பிற்கொடையே
யேசப்படுமிகழென்பார்நறுங்கொத் திணரின்வண்டு
மூசப்படுமுற் கொடைக்கிழுக்கென்னெனு மொய்குழலாள்
வாசப்பொழிற்புதுவைச் சவராயலு மன்னவனே. (௨௫)

மாலைவந்தால் வஞ்சி யென்படுவோண்மதி யாமையென்ன
மாலையன்பா ருயிர்நீங்கலென்னுமென்று மன்னியபா
மாலைநன்காற்றியது மறந்தாய் நின்வயப்புயஞ்சார்
மாலைதந்தாள் புதுவைச்சவராயலு மன்னவனே. (உ௬)

அலைகடனின் கருணைக்குடைவுற்ற தடர்கருப்புச்
சிலைமதனின்வனப்பிற் குடைவுற்ற திறத்தினுன்னை
வுலைவறமோகித்திடுமெனக் காய்தலுளங்குறிப்பாய்
மலைநிகரிற் புதுவைச்சவராயலு மன்னவனே. (உ௭)

இசையிற்சிறந்தநினைமோகித்தானின்னிசைக்குடைந்து
பசையற்றழல் சுட்டவேய் சீறுவதென்னபாவநெடுந்
திசையிற் பொலியும் புகழாய் புலவர் சிந்தாமணியே
வசையிற் றவிர்புதுவைச் சவராயலுமன்னவனே. (உ௮)

செய்யதமிழிலகத்திய மாதவற்செற்றணையாம்
ஐயவதனுக்கவன் வாழ்வனைத்தென்றலாதரித்த
தையலெனை வெதுப்பஞ்செய்வதோ விது தக்கதுவோ
வையம்புகழ்ப்புதுவைச் சவராயலு மன்னவனே. (உ௯)

குழைமணக்குங் கற்பகமோ குலவு சிந்தாமணியோ
மழைமணக்கும் புயலோ விரண்டாக வளர்நிதியோ
இழைமணக்கும் மருப்புத்தேனுவோ நின்கையென்னுனக்கேன்
வழைமணக்கும் புதுவைச்சவராயலு மன்னவனே. (௩௰)

குறள்வெண்பா.

அன்பேயுருவாயமைந்தசவராயலுமால்
இன்பேதழீஇவாழ்கவே.

இந்நூலாசிரியரவர்களின்மாணக்கருளொருவராகிய காரைக்கால்
அ. சவேரிநாதபிள்ளையவர்கள் கூறிய

பாடல்.

பூமாலையென்றுநற்பொன்மாலையென்றும்பொருவின்முத்தத்
தூமாலையென்றுமணிமாலையென்றுஞ்சொலவுறுமத்
தோமாலைகளபொருமோ சவராயலுத்தூயவிந்தப்
பாமாலையுண்மாலை நீக்கிநன்மாலைப்பயத்தலினே.

இஃது
ஷ சவேரிநாதபிள்ளையவர்களால்
அச்சிடப்பட்டது.

௲௮௱௨௰ம் ஆ

சவராயலு நாயகருக்கு

பிராஞ்சிலுந் தமிழ்ப்பாடலிலும் அத்தாட்சிப்பத்திரமுதலியவை
கொடுத்திருக்கும் பேர்வழிகளின்

அட்டவணை.

பெயர்வழிகள்.	தொகை.	பக்கம்.
கொதேல் ஆண்டவர்........................	௧	௩
தெப்போமியே ஆண்டவர்.....................	௧	௬
துய்ப்பி சுவாமியார்.........................	௧	௪
ஷெியார்......................................	௧	௭
குய்யோஞ் சுவாமியார்.......................	௧	௫
ஷெியார்......................................	௧	௫
மோறி சுவாமியார்...........................	௧	௧௯
தசிஸ் சுவாமியார்............................	௧	௬
கால்கன் சுவாமியார்.........................	௧	௨௨
பர்பே சுவாமியார்............................	௧	௬
போலார் சுவாமியார்.........................	௪	௨௧
திரியோஞ் சுவாமியார்.......................	௧	௯
பெர்ழேஸ் சுவாமியார்.......................	௧	௭
உய்க்கார் சுவாமியார்........................	௧	௮
ஷெியார்......................................	௧	௮
தொகாரோஞ் சுவாமியார்.....................	௧	௭
அருள்நாத சுவாமியார்.......................	௧	௯
ஷெியார்......................................	௩	௫௭
அந்தோனிநாத சுவாமியார்...................	௭	௫௭
தாவீதுநாத சுவாமியார்......................	௨	௫௮
ஞானப்பிரகாசநாத சுவாமியார்...............	௧	௫௮
மரியப்பிரகாசநாத சுவாமியார்...............	௧	௫௯
லோது துரை...................................	௧	௨௰
தஸ்கோனுகோர்துரை	௧	௨௧
வேன்சோந் துரை.............................	௧	௨௰
ஷெியார்......................................	௨	௫௯
தெலாபோன் துரை...........................	௧	௧௰
எலூரி துரை	௧	௨௩
பபீக் துரை...................................	௧	௨௪
றெனே துரை..................................	௧	௧௰
தம்பிப் பிள்ளை	௧	௧௧
ஆனந்தராயப்பிள்ளை.........................	௧	௨
இராசேந்திரம் பொன்னுபிள்ளை }	௧	௧
ஆனந்தராயப்பிள்ளை }	௧	௯௰

பெயர்வழிகள்.	தொகை.	பக்கம்.
மீனுட்சிசுந்தரம் பிள்ளை. திரிசிரபுரம்............	கஎ	உகூ
ஒப்பிலாமணி தேசிகர். திருவாவடுதுறை	க	௩க
தேவராஜபிள்ளை. வல்லூர்........................	க0	௩க
சோலை - அப்பாசாமி முதலியார். கலெக்டர்........	க	௩௩
வேதநாயகம் பிள்ளை. முன்சீப்................	சு	௩௩
முத்துச்சாமிபிள்ளை. தேவிபட்டணம்............	க	௩ச
சுப்பராயசெட்டியார். சோடசாவதானம்..........	க0	௩ச
தியாகராசசெட்டியார்தி. கும்பகோணம்..........	௩ரு	௩சு
கச்சபாலயஐயர். காஞ்சீபுரம்..................	௩	சக
கண்ணுவையர். தருமதானபுரம்.............	ச	சஉ
நாகலிங்கசுவாமிகள். கோயமுத்தூர்..........	க	ச௩
சோமசுந்தரதம்பிரான். திருநள்ளாறு	க	சச
சிவானந்தசுவாமிகள். சித்திலிங்கமடம்.......	க	சச
பாலசித்தானந்தசுவாமிகள் பொம்மையபாளையம்	உ	சச
சிவசாமிசாஸ்திரியார். திருவாரூர்.............	க	சரு
சாமிநாதக்கவிராயர். திருவீழிமிழலை..........	அ	சரு
துரைசாமிமுதலியார். கும்பகோணம்	க	சசு
குமாரசாமிக்கவிஞர்..... ஷ	உ	சசு
சாமிநாதக்கவிராயர். கொட்டையூர்............	க	சசு
நடராசப்பிள்ளை. வேளார்காணி.............	க	சஎ
கிஷ்ணசாமிக்கவிராயர் தஞ்சை.............	உ	சஎ
அரங்கநாதக்கவிராயர்.. ஷ	ரு	சஎ
அருளப்பமுதலியார்.... ஷ	உ	சஅ
குமாரதேவர். காஞ்சீபுரம்	௩	சஅ
சிவசிதம்பரமுதலியார். திருப்பாதிரிப்புலியூர்.....	க	சகூ
ஜெகநாதப்பிள்ளை, தருமநாதபுரம்............	௩	சகூ
சுந்தரம்பிள்ளை............ திரிசிரபுரம்........	க	சகூ
குப்பமுத்தாபிள்ளை........... ஷ	ச	ரு0
சரவணப்பெருமாளுபாத்தியார்.. ஷ	க	ரு0
சதாசிவநாவலர் .... ஷ	உ	ருக
பெரியண்ணப்புலவர் .... ஷ	சு	ருக
மருதநாயகம்பிள்ளை ....ஷ	க	ருஉ
வயித்திலிங்கப்பத்தர் .... ஷ	க	ருஉ
மகாலிங்கவர்த்தியார். வரகனேரி	உ	ருஉ
பொன்னம்பலமுதலியார்..... சென்னை	க	ரு௩
தெய்வசிகாமணிமுதலியார்..... ஷ	க	ரு௩
சுப்பிரமணியப்பிள்ளை .... ஷ	உ	ரு௩
சின்னுச்சாமிபிள்ளை........... ஷ	க	ருச
ரங்கசர்மிராசா................ ஷ	க	ருச
வீராகவசுவாமியார்........... ஷ.........	கூ	ருச
அரங்கசாமி பிள்ளை........... ஷ	க0	ருரு

பெயர்வழிகள்.	தொகை.	பக்கம்.
சிற்றம்பலவுபாத்தியார்..,.... புதுவை.........	க	௬0
முத்துக்குமாரசுவாமிவாத்தியார் ஷெ	உ	௬0
சபாபதிமுதலியார். கந்தப்ப... ஷெ	உ	௬0
பொன்னையாமுதலியார். வெள் ஷெ	க	௬0
அருணாசலதேசிகர்.......... ஷெ	க	௬க
கோவிந்தபிள்ளை............ ஷெ	உ	௬க
பொன்னுசாமிமுதலியார்...... ஷெ	கக	௬க
சுப்பராயவாத்தியார்.......... ஷெ	க	௬௩
சந்திரசேகரஐயர்............ ஷெ	க	௬ச
பச்சையப்பமுதலியார்........ ஷெ	உ	௬ச
குமாரலிங்கவாத்தியார்........ ஷெ	உ	௬ச
சின்னத்தம்பிமுதலியார்...... ஷெ	க	௬ச
அபரர்முதலியார். நயினாத்தை ஷெ	ச0	௬௫
மயிலே-சவரிமுத்துப்பிள்ளை.... ஷெ	க	௭க
பிள்ளை-அப்பாவுமுதலியார்.... ஷெ	க	௭க
ஆரோக்கியநாய்க்கர்......... ஷெ	க	௭க
ஆரோக்கியசாமிபிள்ளை....... ஷெ	௯	௭உ
மலையப்பிள்ளை............. ஷெ	கஉ	௭௩
ஞானப்பிரகாசமுதலியார்..... ஷெ	ச	௭ச
தேவு-இரத்தினசாமிசெட்டியார். ஷெ	௬	௭௫
ஞானதிக்கசாமிமுதலியார்.... ஷெ	உ	௭௬
அந்தோனி வாத்தியார்....... ஷெ	உ	௭௬
இராமசாமிவாத்தியார்........ ஷெ	ச	௭௬
தங்கப்பிரகாசவாத்தியார்...... ஷெ	க	௭௭
தைரியநாதவாத்தியார்....... ஷெ	உ	௭௭
அப்பாக்கண்ணு நாவலர்..... ஷெ	ச	௭௭
சிவப்பிரகாசவாத்தியார்....... ஷெ	௩	௭அ
இராமசாமிமுதலியார்......... ஷெ	க	௭அ
குழந்தைசாமிமுதலியார்..... ஷெ	௬	௭௯
மரியதாசுபிள்ளை............ ஷெ	௩	௭௯
அகீம்-அப்துல்லாதிப்சாய்பு... ஷெ	க	அ0
ஞானதிக்கஉடையார்......... ஷெ	ச	அ0
ஞானுவாத்தியார்......... காரைக்கால்........	க	அக
ஞானப்பிரகாசவாத்தியார்..... ஷெ	உ	அக
அந்தோனிமுத்து வாத்தியார்.. ஷெ	உ	அக
ஆதிமூலப்பிள்ளை........... ஷெ	௫	அஉ
ஐயாசாமிவாத்தியார்......... ஷெ	௩	அ௩
பொன்னுசாமிபிள்ளை......... ஷெ	௬	அ௩

பெயர்வழிகள்.	தொகை.	பக்கம்.
ஆரோக்கியம்பிள்ளை.......... ஷ	க	அ௪
அண்ணுசாமிப்பிள்ளை........ ஷ	க	அ௪
தனக்கோடிமுதலியார்........ ஷ	ரு	அரு
பிரபலநாதப்பிள்ளை .... ஷ	க	அ௬
இராமசாமிவாத்தியார்......... ஷ	க	அ௬
கண்ணுசாமிப்பிள்ளை. தரங்கம்பாடி..........	ரு	அ௬
ஞானப்பிரகாசப்பிள்ளை. திருமலைராயன்பட்டணம்.	ரு	அ௭
நாகைமுத்துப்புலவர் .... ஷ	க	அஅ
சாமிஐயர்.................நாமக்கல்.........	க	அஅ
இராமசாமிஐயர்.............. ஷ	க	அஅ
சேதுஐயர். முசறி..........................	க	அ௯
நாராயணசாமிநாயகர் ....சேலம்..........	க	அ௯
இராமசாமிவாத்தியார்........ ஷ	க	அ௯
சுப்பராயவாத்தியார். பட்டாம்பாக்கம்..........	க	அ௯
தாசி-குப்பு. மாயூரம்........................	ரு	அ௯
பாகூர்கல்லறைக்கல்வி விசைந்தபாடல்..........	க	உஅ
மெதாயிலளிக்கவறிவித்தல்.....................	க	௬0
கோவிலபிஷேகத்திற் கறிவித்தல்..............	க	௬௧
பாகூர்தேவாலய விருத்தாந்தச்சுருக்கம்........	க	௬௧
செயகான்நாயகருக்குச் சம்மந்தமானவைகள்...	ரு	௱௩. ௱௪. ௱ரு. ௱௬. ௱௭.

சவாராயலு நாயகரைக்குறித்து அச்சிடப்பட்டிருக்கின்றவைகளின்

குறிப்பு.

புதுவையில் அச்சிடப்பட்ட இராசாங்கவிளம்பரப்பத்திரிகை.
௲அ௬௰-ம் ௵ அவுமீ ௩௧௳ ரு௪௯-ம் நெம்பர்.
௲அ௬க-ம் ௵ மூவேன்மீ க௪௳ ரு௯௰-ம் நெம்பர்.
௲அ௬௩-ம் ௵ ஒக்தோபர்மீ ௯௳ ௭௧உ-ம் நெம்பர்.
௲அ௬௬-ம் ௵ பெவுறியேர்மீ உ௳ அ௩உ-ம்நெம்பர்.
௲அ௭௰-ம் ௵ மூலேத்துமீ உஉ௳ ௲௬உ-ம் நெம்பர்.
௲அ௬௩-ம். ௵ ஒக்தோபர்மீ ரு௳ ஷ தமிழ்ப்பத்திரிகை.
பரீசுபட்டணத்தில் அச்சிடப்பட்ட ரெவுய்து மோந்து கொலோனியால்.
௲அ௬௩-ம் ௵ தெசம்பர்மீ கஉ௳ அஅக-ம் பக்கம்.
சென்னையிலச்சிடப்பட்ட தினவர்த்தமானி.
௲அ௬க-ம் ௵ மூான்வியேமீ உ௪௳ உ௭௭-ம் நெம்பர்.
சென்னை இராயபுரத்திலச்சிடப்பட்ட வேதாந்த நிரணயப்பத்திரிகை.
௲அ௭௰-ம் ௵ மே மீ க௳ க௩-ம் நெம்பர் ரு௭-ம் பக்கம்.

கடவுள் துணை.

புதுவை வித்துவான்

ம. ரா. ரா. செ. சவராயலு நாயகர் கூறிய

பாடற்றிரட்டு.

திரித்துவத்தின்பேரில்

பாடல்.

பாயபரலோகமொடுபோதலம் பூதலமனைத்தும் படைத்துக்காக்குந் *
தூயபகுபொருள் பகாப்பொருளாகித்திரித்துவமாய்ச்சுடர்வெப்பென்
னும், ஏயநிறமணமலரு மெனப்பொலிந்து தானாகவிலங்கியேயொன்
றாயபிதாச்சுதனிஸ்பரீத்துசாந்தினைத்தொழுதஞ்சலி செய்வாமால்... *

சுவாமியின் பேரில்

பொருசிலை நுதலேக்கண்ணார்புவிபொன்னாற்பவத்தாழாமல்.......... *
ஒருசிலையகத்தஞ்ஞான்றுற்றெண்டசமறையைத்தூய............ *
விருசிலையகத்திற்றீட்டியெம்மனோர்பவத்தைப் போக்கக்........... *
குருசிலைச்சுமந்தநாதன்கோதறுகழல்கடாழ்வாம் .... *

தேவமாதாவின் பேரில்

மீனையொண்முடியாளைவெய்யவனார்புரத்தாளைமிளிராரிந்தார் .... *
கானார்செம்பதத்தாளைக் கடவுளார்கரத்தாளைக் கடியாலன்று........ *
மானார்கண்முதன்மடவாள் புரிபவத்தையழித்தாளை மாண்டாவீது... *
கோனார்நற்குலத்தாளையெஞ்ஞான்றும்பவமறவுட் குணித்துய்வாமால் *

சென்மராக்கினி மாதாவின்பேரில்

தாரணிக்குயிராந்தரித்திரர் நிதியாந்தமரிலாச்சிறியர்கட்கணையாம்..... *
ஆரணத்தணியா மாதிநாயகியாமருண்மழைபொழியுநன்முகிலாம்.. *
நாரணியமுதாங் கன்னியர்க்கரசா நன்னிறைவழங்குநற்றருவாஞ்...... *
சீரணி நித்யானந்த பூரணியாஞ் சென்மராக்கினிபதந்துணையாம்..... *

ஆரோக்கியமாதாவின்பேரில்

இடராவினுரைகொண்டுமுதன்மடவாளந்நாளிலிசைத்தபாவத், தொடர
றநற்கடவுடனைப்பயந்தளித்தென்போற்பிணியாற்றுன்புற்றோர்க்குப், ப
டாரும்பன்னோய்தவிர்த்தாரோக்கியமாமரியென்னப் பலரும்போற்றச்
சுடருலவியறியவரி தெனுமரிய நகரமர்ந்தாடுணைத்தாள்போற்றி.. *

செயராக்கினிமாதாவின்பேரில்

சோகூருமரவமெனத்தோன்றியன்று செயுமிடரைத் தொலைப்பவானின்
மீகூருமதியிரவியுடுக்களணிந்தணிபரமவிமலன்றன்னைச்............
சேகூருமிளமகவாவளித்தெளியேந்தொழுதுநிதஞ்செபித்தற்கிந்தப் ..
பாகூருண்மேவு செயராக்கினிமாதாவை நிதம்பணிந்துவாழ்வாம்....

சூசைமாமுனிவர்பேரில்

பாரனைத்தும் படைத்தவனைப் படைத்தவளைப் படைத்தவனைப் பகர்
தற் கெட்டாச், சீரனைத்துமுடையவனைச் செழுந்தவத்தி லுயர்ந்தவனைச்
சேணோர்போற்றும், ஏரனைத்துமுடையவனையேதமிலாச்சூசையெனவி
சைத்தலாதிப், பேரனைத்துமுடையவனைப் பெட்பகத்தி லெஞ்ஞான்
றும்பிணித்தல்செய்வாம்..............................
பொன்னுமுதலாய வுலகனைத்தும்படைத்தோம்பும் பொருவிலாதன்.
அந்நாளிற்றனக்கன்னையெனத் தெரிந்தவளைக்கொண்ட வரியசூசை...
தன்னுமைமுறைத்தெவருந் தாவரும் வீடடைந்தனராஞ் சார்பிலேமும்...
வின்னுமவனடியைத் தொழுதின்னே பவமதற்கு விடையீவேமால். .

மிக்கயேல்முதலிய நவவானோர்கள்பேரில்

சோதிமன்னன் சிரங்குனைத்தோன் றாயமரியம்மைவயிற் றாதுசென்
றோன்ஏதமிலாத்தோபியனுக்கினியசுபவதுவையந்நாளியற்றினோனென்
றோதுமிக்கயேல் கபிரியேலிரபயேன் முதலொன்பான் விலாசத்....
தீதிலொளிலகுசூட்சமட்சயமுற்றோர் மலர்த்தாள்சென்னிசேர்ப்பாம்

பன்னிருசீஷர்கள்பேரில்

அருளிராயப்பர்பெலவேந்திரர் யாகப்பரருளப்பர்தோமை, தெருள்சி
ன்னயாகப்பர்பிலிப்பொடுபரதலோமைமத்தேசிமோன்ததேயு,மருளு
று மூதாசனிடம் வந்தமத்தியாச னெனவாழ்த் தப்போத்தர், பொருண்
மிகுபன்னிருவரடிப்போதினையெப் போதுமிகப் போற்றுவாமால். .

பிதாப்பிதாக்களமுதலியவர்கள்பேரில்

தாவுஞ்சீலம் பொறையுறும் பிதாப்பிதாக்க ளொடுகெதிய...............
வாவுந்தீர்க்கதரிசர் சுவிசேஷர் மோக்ஷவாசிகளுந்....................
தூவுந்திரைநீர்க்கட லுலகிற்றுலங்குற் தூயவேதியரு...............
மேவும்படி நம்மகத்திலகம் விருப்பிற் கொடுத்துவினை யொழிப்பாம்.

திருச்சபையின்பேரில்

இளமலியுத்தம மடவார்கொழுனர்தமக்கெஞ்ஞான்று மியற்றவேண்டுந்
தளமலிநல்லுபசாரப்பணிவிடைவந்தனையனைத்துஞ்சமைத்தல்போல
நளமலி நீரடியிறைவற் கெஞ்ஞான்றும் பணிபுரியு நந்தா யென்னும்
வளமலிநந் திருச்சபையை யருச்சித்துப் பவமதனைவருச்சிப்பாமால்.

ஐந்துகாயப்பிரான்சீஸ்குவின்பேரில்

காயமுறுவிழியாதித்தா யேவையன்றுபுரிகரிசாற்சேசு, காயமுறத்தோ
ன்றியரு ளொருங்கடைந்தஞான்றவற்குக் காணத்தோன்றைங்,காயமுற
வேண்டுமெற்கென்றடைந் துடலையொறுத்தவன்றன் கழலுற்றோரா
காயமுற்றின் றெளிர்பிரான்சீஸ்குவெனுந்தூயவன்றாட்கமலம்போற்றி

சவேரியார்பேரில்

வண்டுகொண்டகானகந்தன்வண்டினைப்போக்காதென்னமதித்துறுமற்
றெண்டுபோற்கியற்று நெறியிஃதென்றிந்நாட்டோர்க்குந்துலங்கக்காட்டி
யண்டுமெளியவர்குறைகள் பலபோக்கித் தனதுகுருசாமி வீழப்
பண்டுநண்டுகண்டுதரக்கொண்டுநின்றோனிணையடிபழிச்சுவாமால்.

அந்தோனியார் பேரில்

பூரியர்தமக்குமறைமறையெனமுன்புகன்றபற்பலசமயர்களாங்........
காரியக்குருக்களனைவருஞ் சமழ்ப்பக்கரிசிலாவொண் டசமறையைச்.
சீரியரொடுபூரியர்களு முவப்பத்தெரித்ததுமன்றிமீன்களுக்கும்......
ஆரியமுடனன்றேதுமந்தோனி யடிகளினடிகளைப்பணிவாம்.........

லசார் பேரில்

மதியேறுதாளிகரமலரேறிப் பழம்பழியில் வாடுவோர்வின்........
பதியேறச்செயுமமலன்றருபிணியிற்றளராதப்பரனைவேண்டிக்......
கதியேறியபராந்தன்மடி யேறிச்சிறியேன் சொற்கவியிலேதித்......
துதியேரர்ச்சிஷ்ட லசாரொனுந் தூயனடிமலரைத்தொழுதுய்வாமால்.

எலியாசுமுனிவர்பெரில்

விண்ணுலவுமுகின் மூன்றுவருடந்தன்னாட்டினகமேவிடாமற்றடுத்
தோன்-வெஞ்சினங்கொண்டுவரு வேலுழவரியாவனையும் வெந்தழலினி
ன்மடித்தோன்- தண்ணுலவுமுழையிலொருகாகம் வந்தென்றுந் தரும்
பிசிதனைப்புசித்தோன்- தளருமொருமனைமயினிறந்த மகனுயிரொடுத
ழைந்துவர வருள்புரிந்தோன், திண்ணுலவு நதிவழியளித்திடத்துயரி
ன்று சென்றுகரைதனிலடைந்தோன்- தேடிவந்தடைவானவன் கண்டுத
ரவுண்டு சிகரி நீணெறிகடந்தோன், வண்ணுலவு மிரதமீதேறியண்டா
விடம் வதிந்தவனுகாந்த நாளில்- வடிவேவாடிங்குறுமெலியமாமுனிவனு
பய செம்மலரடிகளைப் பணிகுவாம்........................

ஆரோக்கியமாதாவின்பேரில்

வெண்பா.

செந்தேன் பொழிலுலவுந் தென்னரியனூரில்வள.........
ரந்தேவாரோக்கியமரியன்னைப்-வந்தேன்................
திருமுகமுஞ் சேவடியுந் தேவனையே தாங்குன்..........
னிருகரமுஞ் சேவிக்கவின்று.........................

கட்டளைக்கலிப்பா.

போதமேவுமடந்தை யொருத்திநின்பிள்ளையின் புரத்திற்பொலியாடை
யை, நீதமோடொருகாற்றொடமாபிணி நீங்கியோங்கினளாமிந்நிலத்தி
லே, சீதமேவுமதியணிதாளிநின்செய்யதாணிதந்தீண்டித்தொழுதுமெ
ன், ஏதமேவுஞ்சிறுபிணியானதை யின்னுநீக்கவிரங்காததென்கொலோ.

அரியனூர்
ஆரோக்கியமாதாவின்பேரில்
பதிகம்.

காப்பு.

ஆரோக்கியமரியி னம்புயத்தாட்கின்பமுற்றுப்..............
பாரோங்க நற்பதிகம் பாடுதற்குச் - சீரோங்கு.............
நற்சிலுவை தொண்டுகொண்டு நண்டுபண்டு கண்டுதர......
வற்புடனேபெற்றவன்காப்பாம்.........................

பூமலிகருமைக் குழன்மடமகளிர் புன்மயற் புணரியாமெனக்குன்.....
றேமலிகமலவிணையடிப் புணையைச்சேர்த்திடர்தீர்த்தினிதருள்வாய்...
தோமலிகனியை யொழித்துச்சோகரவை நூறுமுன்னதகனி வழங்கும்.
காமலிபெரியவரியனூர்தனின்வாழ்கருணையாரோக்கியமரியே.....(க)

நீருறுகுமிழியலை யெழுத்திளமை நிறைதிருவாக்கையென்றுணர்ந்தும்.
ஆருறுநித்தவாழ் வினையுன்னுதவத்தில் நாள்கழித்த வெற்கருள்வாய்..
பாருறுமாதமொன்றின் மும்மாரிபண்பொடு பொழியுநற்கரிய. ....
காருறும்பொழில்சூழரியனூர்தனின்வாழகருணையாரோக்கியமரியே(உ)

அயன்மனைவிருப்பம்வெகுளிவஞ்சகம் பொய்யவாவழுக்காறு மாகொ
டுஞ்சொல், பயனிலகூறலினையவென்றீய பாதகமெலா மறவருள்வாய்
புயலகட்டகம் பாய்முப்புடைக்கனியைப் புடைத்தெழும் வாளைகண்மி
குந்த, கயமலிபெரியவரியனூர்தனின் வாழ்கருணையாரோக்கிய மரியே.

பூவினிலனந்தம் பாவிகளுன்னாற் புண்ணியராயினரென்றுன்........
சேவடியடைந்த தீயனெற்கிரங்கிற் றேவிநின் புகழ்பெரும் புகழாம்.
தூவரிதனிலிந்து தயமாமென்னச் சூழ்நதிவிட்டனக்குழாந்தண்.....
காவெழும் பெரியவரியனூர்தனின்வாழ் கருணையா ரோக்கியமரியே.(ச)

பெரும்பிணிபலமுன்போக்கிக்காரணமாப்பெற்றநின் பெயரினையென்
கண், பொருந்தகப்பிணியைப் போக்கியின்றருகாற் புதுக்குதற்கரு
ள் செயல்வேண்டும், திருந்தெழிற் றடத்தி னிளவரால்பாயச் செஞ்ச
ரோருகச் சுரும்போடிக், கரும்புறும் பெரியவரியனூர்தனின்வாழ் கரு
ணை யாரோக்கிய மரியே.................................(ரு)

நல்லவை செய்வார்க்கிரங்கலென்றான்று ஞாலமீதருமையேயன்றால்
அல்லவை செயுமெற்கிரங்கிடலென்றுமன்னையே நின்பெயர்சிறக்கும்
வல்லநன்முனிவோரொன்னவிற்றடத்தில் வந்துபுக்கைநதைய மடக்கும்
கல்லிவாழ்பெரியவரியனூர்தனின்வாழ்கருணை யாரோக்கிய மரியே. ([illegible])

தலைதனிலெனக்குத்தந்தைநீதாய்நீதமருநீயாதலாற்சிறியேன்......
புலையெலாம்பொறுத்துக் காத்தலேநினக்குப்போதவும் பெருங்கடனா
மால், வரையெனவுயர்ந்த மாடகூடங்கண்மன்னியோங்குன்னதவாற்றின்
கரையமர்பெரியவரியனூர்தனின்வாழ் கருணையாரோக்கியமரியே...(எ)

அருளறிவடக்கஞ்சுகுணமொண்சீலமன்புபுண்ணியம்பொறைவாய்மை
தெருணிறைஞானந்தூய்மையிவ்வனைத்துஞ்சிறியனேற்குறவருள்புரிவா
ய், சுருளறன்மிதவையுறுகொடிவானிற்சுடர்செய்மீன்களைப்புடைத்துதிர்
க்கக், கருளறும்பெரியவரியனூர்தனின்வாழ்கருணையாரோக்கிய மரியே.

நினைவெலாமுன்றுளினுமுரையெல்லா நின்பெருந் துதியினும் புரியும்,
வினையெலாநின்பூசனையினுஞ்செல்லவிரும்பு நற்பேறெனக்கருள்வாய்,
மனையெலாஞ்சுருதி வயலெலாந் தரளம் வாயெலாநறுந் துதிபுயல்செய்,
கனையெலாமளாவு மரியனூர்தனின் வாழ்கருணையாரோக்கிய மரியே(௯)

அலைமனச்சிறியேன் வேண்டலுக்கிரங்கி யருமகவளித்துநோயொழித்து
நிலைபெறச்செய்து காத்தருளபுரிந்த நின்பெருங்கருணையே வாழ்க...
தலைமைசால்புலமைக்கழகநாயகர்சடமக்குநூல்பயிற்றுவோரொன்னுங்
கலைஞர்வாழ் பெரியவரியனூர் தனின் வாழ்கருணையாரோக்கிய மரியே.

பாகூர்

செயராக்கினி மாதாவின்பேரில்

பஞ்சரத்நம்

காப்பு.

செங்கமலவாவிநிறை சீர்வளரும் பாகுநகர் ....
தங்குசெயராக்கினி செந்தாண்மலருக்-கிங்கிதமாப்...........
பஞ்சரத்நங் கூறுதற்குப் பார்புரக்குஞ் சேசுபரன் ....
அஞ்சரணங்காப்பு நமக்காம் ....

வேதநன்குணர்ந்தோரதிந்தினிதேத்தவிளங்குதண்பிறைமிசையமருன்
பாதமேபணிந்துதினந்தினம்புகழ்ந்து பாடநன்வாக்கெனக் கருள்வாய்,
போதமாரினியதமிழறி கலைஞர்புகழுமுன்னத வொலியுடன்சங்......
கீதமார்பாகுபதியமர் செயராக்கினியெனும் பரமநாயகியே.......(க)

தள்ளைநீயெமக்கென்றமலனன்றளித்ததன்மையாலென்று நானுனக்குப்
பிள்ளையாதலினாற் கடியவென்கொடிய பிழையெலாம் பொறுப்பதுனக
டனும், வெள்ளைவெண் பிறையிலெழுந்தபங்கயத்தை மேவு வீறொன்ன
ல்போற்பொழில் வாய்க்; கிள்ளைகளொலி பாகூரமர் செயராக்கினியெனு
ம்பரமநாயகியே...(உ)

நீதநல்லொழுக்கம்பொறை நிறைவாய்மைநீங்கருந்தேற்றமொண்சீலம்
போதமன் படக்கந்தூய்மை நன்னேயம்புல்ல னெற்குறவருள்புரிவாய்.
ஆதமென்பவன் றீதெனும் பிணிக்கிறையை யருமருந்தெனவெமக்கரு
ளுங். சேதமில்பாகுபுரியமர்செயராக்கினியெனும் பரமநாயகியே. (௩)

இடக்குறுங்கொடுஞ்சொல் வெகுளிவஞ்சகம் பொய்யிடும்பழுக்காறு
டைக்கழுத்தம்; அடக்கமின்மடவார் விருப்பமென் றினையவகங்களையொ
ழித்தெனையாள்வாய், மடக்கிதழ்க்கமலக் குளத்திளமகளீர் மதித்திடா
துதிர்த்தமாமணிகள், கிடக்குநற் பாகுபுரத்தமர் செயராக்கினியெனும்
பரமநாயகியே..(௪)

வலமலிநின்னோர் திருப்பெயர்தனக்குவழுவுருவண்ணமுப் பகையோ,
டலமலிந்திடுமைம் பொறியெனும்பகையையடல்செய் நன்வலியெனக்
கருள்வாய், கலமலிகோவிற் றூபதீபத்தைதக்கார்தடியென்று காக்களிற்
கோ, இலமொளிபாகுநகரமர்செயராக்கினியெனும்பரமநாயகியே. (௫)

மரியம்மன்பேரில்

பஞ்சரத்நம்.

காப்பு.

இந்துசேர்செந்தளிர்த்தாட்கின்றியற்றும் பஞ்சரத்நம்.......
நந்தலுருதந்தமொடுநன் கவைமயச் - சிந்துதனிற் ....
பண்டுவிழுநற்சிலுவை பார்த்தலவனீந் திடக்கைக் ....
கொண்டுமகிழ்ந்தோன் கழலுட்கொண்டு....................

வேலைசூழ்புவியோர் பழித்திடப்பவமாம் விடஞ்சொரிகொடிய வெ
ன்னகமாம்-வெய்யபன்னக முன்கழற்படுசோகாம் வெவ்வரவினுங்கொ
டிதேனு, மாலையேதருபுன்மாதர் கோட்பட்டுமாழ்கியா னிளையமாழா
து-மாண்டருமுயர்வான் மதியபாதுகத்து மன்னுநின் செம்மலரனைய,
காலையென்னகத்தி லிருத்திட நீயே கண்ணிடாவிடி லிவணுயிர்-சடை
யினேற்குண்டோ வேறு மோருதவி கதியதர் காட்டி யீட்டிடற்கே,
பாலையேதரு தூயோனெனவுலகம்பகர்ந்துவெய்யோனெனவிழிவாப்ப
ன்னுதலொழிப்பான்பொலமலியுடையாப்பானுவையணிந்தமாமரியே

அறமிதென் றுணரேனடிகளைப்பணியேனன்போடுன்பணிகளைப்புரி
யேன்-அகிபிறையுறுநின்பதந்தனைப்புகழேனுன்றநின்செபமிதென்ற
றியேன், மறமதேயுணர்வேன்மடிகளைப்பணிவேன் மங்கைமாரிடுபணி
புரிவேன்-மையணிவிழி யன்னார்தமைப்புகழ்வேன்மாரனாகமத்தைநன்
கறிவேன், கறங்கெனமடவார்மாலெனுமாலாற்காப்பிலா தலைந்தலைந்து
ழலுங்-காமியாங்கொடியேற்கருள்செயினையார் கடிபவரிலையென்மா
ட்டிரங்காய், நிறந்தருஞானவாரியேயெவருநேடுவானிதியமேயனையே-
நிமலியேவானோர் துதியணிந்தவளேநித்தனைப்பெற்றமாமரியே. (௨)

அடுவமுதிடவெற்கன்னையோவில்லையருங்கலையோதுவித்திடுதற்- கத்தனேவில்லைதளர்ந்திடேலென்றேயறையவோசோதரரில்லை, கடுமையலடைந்தேன்காவெனப்புகவோகனிவுளவுறவினரில்லை- காதுநீண்ணுமலிதன்னினுமன்பேகாட்டினுநட்பவரில்லை, படுகடலுடுத்தபாரிடைத்துயர்கூர்பாவியென்னனையர்வேறில்லை -பாதுகாத்தளிக்கவுனையலா லீங்குபரி குனரிலையெனக்கிரங்காய், உடுமதியொளியையொண்முடியடிதோளுறுத்து மூன்றுலகையுமமைத்த- வொப்பெதிர்முப்போதீறுறுப்பில்லாவொன்றனையீன்றமாமரியே...................... (௫)

வளந்தருமினியவுணவினையொழித்து வன்றிபுன்மலக்குவைதுருவி- மதுவினுமினிதென்றதனையுண்டுழன்றுவதிசல்போன்றுன் திருவடியாம், நளந்தருபேரானந்தமாநறவநச்சிநற்கதியுறுதிழிவாம்- நாரின்னுரியர்புன்போகமேசிறந்தநலமெனக்கண்ணிமண்ணைகட்கென், உளம்பதியாக்கிப்பவக்கடல் மூழ்கியொல்லுமெற்கினியுனதருளாம்- ஓடமீந்துயர்வான்கரையதர்காட்டவுன்னகத்திரங்கிடல்வேண்டும்; களங்கனென்றுலகமிம்பிடாதெனைச்சார் கறையகற்றுதியெனவிரந்து- கனிந்துவேண்டுதல்போல்வெண்மதியுறுஞ் சீர்க்கழலுடையன்னைமாமரியே.........(௪)

நாரமோடுனையேநோக்கு நன்னேக்கு நசையொடேன்புகழ் புகழ்வாக்குங்-நற்கதிதருமுன் சரிதமெந்நாளு நாடுநற் செவியுமுன் சரணை, நேரமோடணுகிமிக்கபத்திமையாய் நிலமுறப்பணிதருசிரமும்-நீங்கிடாதுனையேசிமிழ்த்த நெஞ்சகமு நேயமும் பொறையு நன்னிறையும்; ஈரமோடருளு மொழுக்கமுமிக்க வின்சொலுமைம் பொறிசெகுக்கும்-இணையில்வீரமும் புன்னுயினேற்களித்தேயுறிலிக்கடிமைசெய்திடுவாய், சூரமோடமரர்குழாந்தொழுஞ் சுடரே சுதமிலா நன்மறைக்கணியே- சுகந்தருநித்யானந்தபூரணியேசுயம்புவையளித்தமாமரியே

உடுமுடித்தவளொண்கரத்துற்றென.................................
உடுமுடிக்கிடையுற்றமுதல்வநீ.................................
உடுமுடிந்ததற் கொப்பமுடிந்தும்பெண்.............................
உடுமுடிக்கனேயோட்டல் செயாதெனே.............................

மண்ணையன்றறை மாற்றமுளங்கொடு.........................
மண்ணையாதனு மாத்தியதீமையிம்..........................
மண்ணையுற்றவர் மாட்டுறலான்வந்த.........................
மண்ணையாய மகவைப்பணிகுவாம்...........................

சலங்கொண்டசோகரவாய் முனஞ்செய்தசதியறவற்....................
சலங்கொண்டரியகனிவயிற் சார்ந்துநற்சானெவ.......................
சலங்கொண்டடைந்து கொடியோர்கரத்தினிற் றுங்கியமு..................
சலங்கொண்டடிக்கப் பொறுத்தநஞ்சேசுவைச்சாரகமே...................

நகந்தருதீக்கனியுண்டாதன்செய்தநவையதனுல்....................
நகந்தனிலுற்றவர்சேர் கொடுந்தீமைகள்நாசமுற....................

நகந்தனிலோர்சேயெனத் தோன்றிவந்திடு நல்ல நம்ம......
நகந்தனியாய முதல்வன் பொற்றாளிணை நண்ணகமே........

வேந்தன்றனைப் பதபாதகமாக்கி விண்ணோரும்வெய்ய..............
வேந்தனற்றாசெனக் கொண்டோரரக்கனை வீட்டியபேர்............
வேந்தன்மரபினில் வந்தாளருளசுதவெம்மையலால்...............
வேந்தன்மையேன்பவந் தீர்த்தாளுனை வெகுளவாவெவரோ...........

அட்ட நாகபந்தம்.

விண்கமழ்விபவமொளிர்புனை..............................
வண்கனபுலவவொங்குமேமிகத் ....
தண்பரனந்தயைக்கோலமேன்மரி ....
விண்விளங்குகோவேந்தனைவேண்டுக ....

சதுரங்கபந்தம்.

சீராரியநகர்வாழ் திருவனையேதிரிநஞ் ....
சாராகமாசுணநம்பிமயங்க வம்மாயமற...........................
நாராரடியரின்போங்க வரமல்கிநண்ணக்கையில் ....
வாராதசீலனையீன்றவாரோக்கியமாமரியே ....

கமலபந்தம்.

பாதிமதி மீதிலுதி பாதினதிசோதிவதி ....
பாதமலர்தந்தெம்பவம்போக்காய் - காதன் ....
மனையேயாரோக்கிய நன்மாண்மரியேயெந்த ....
மனையேயெங்கட்கருள்செப்வான் ....

நான்காரைச் சக்கரங்கள்.

தீவி யாபக சேசு நீ
நீசுசேயெனு நாத நீ
நீத நாயக போதநீ
நீதபோதமெயாவிநீ

வாலபாவி ழிமாதவா
வாசமா பழி தீரவா
வாரதீதமா சேசுவா
வாசுசேமரி பாலவா

கொச்சகம்.

அணிமாதனைக்கணியா யாசறுவிண்ணோர்க்கணியாய்த்....
திணிமாதனைவிளங்குஞ் சீர்தருமநாதபுரம்...............
பணிமாதவமறவாழ்பன்னு நூற்றைம்பதுநன்............
மணிமாதாவேநினது மலரடிக்குத்தோத்திரமே.........

☞ இவ்வைந்து மிறைக்கவிகளும் ௲௮௱௮௰ கொலேஜ்கொலோனியா
ல்என்னுங்கல்விச்சங்கத்தில் கல்லச்சில் சித்திரத்துடன் பதிக்கப்பட்டன.
இவ்விரண்டுநான்காரைச் சக்கரங்கள் ௲௮௱௮௰௧ ஜனவரி௴ ௨௪௳ சென்னை
யிலச்சிட்டதினவர்த்தமானியிலுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தேவகீர்த்தனங்கள்.

கொச்சகம்.

பாரசலமனிலமொளி பன்னுகலாநிதிகருபம்................
நீரசலமசரசரம் நீகமனைத்தையும் படைத்த................
சீரசலனைப்பயந்த திவ்யவாரோக்யமரி................
சாரசநின்னடியிணைக்குச் சந்ததமுமேசரணம்................

இராகம் கமாசு தாளம் ஆதி.

சாரசசமயுக வடிசரணம் தருமவதிநினது............சாரசசமயுக
ஏரசலனையருடூரா புனிதகுண (ஸ்ரீ) வாரிசீரரியனூரரசியுனது. சாரசசமயுக

மதுரவஜன ஜெயசுபகரமுலவுசுஜீலி-மேலி................
மாநிலமீதுறு மேழைகளுக்கனுகூலி................
அதுலவெழி லிலகுமுடுவணி சேகர-(ஸ்ரீ)................
அற்புதால்ய வாரோக்யமரிநினது ....சாரசசமயுக

சகலபுவனநவதவ வனிதைகடொழுதாளி-தேவி................
சார்பிலாத வெளியெற் கனையாயதயாளி................
புகலவரியகருணைகரி சற்குண-(ஸ்ரீ)................
புண்யரூபசவுபாக்யவதியுனது................சாரசசமயுக

புனிதபரனுணையுமுஜீதமனோகரபாணி - தாயே................
பூவுலகோர்கதிமேவ வொளிருமுயரோணி................
அனுதினமும்பர்கள் பணியுமுனதமிகும் (ஸ்ரீ)................
அரியனூரினாரோக்ய மரியுனது ....சாரசசமயுக

இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

விண்ணரசி யிவளன்றோ-நித்ய................
விமலியெனக்களித்த நிமலன்றனையளித்த-........ ....விண்ணரசி
எண்ணரும்விண்ணவரொடு பண்ணவர் மண்ணவர்பணி...........
இங்கிதமலரடியிற் பொங்குமதியிணையணி.............விண்ணரசி

மன்னவர் மன்னவன்தாவீதின்னரியவம்சநீரி................
பன்னருந் தவத்திலுயர் நன்னய சூசையின்பாரி ....
கன்னியர்பணியுமுய ருன்னதமிகுஞ் சிங்காரி................
அன்னம்மாள் சுவைக்கின்தவமென்னுமின்னவர்குமாரி....விண்ணரசி

அற்புதமோட்சசெங்கோலி அமரர்பணியுங்காலி................
விற்பனர்துதிக்குஞ் சீலி விளங்குங் கற்புக்கோர் வேலி................
பொற்புறுமாரியநூலி புண்ணியானுபவமூலி................
சற்சனர் கட்கனுகூலி சந்ததமும்பரிபாலி..............விண்ணரசி

வேதமுறைகளை மீறிப்பாதகநூல்களைக்கூறி.......................
மாதர்புன்மனையிலேறி நீதிநெறிகளைத்தூறிக்........................
காதகப்பாதகனென்ற தீதகப்பேதையாய் நின்ற...........................
ஆதுலனுமென்னைக்காக்குமரியபவத்தைப்போக்கும்....... விண்ணரசி

இராகம் துசாவந்தி தாளம் ஆதி.

தேவதாயேயிந்நேரம்பாவியாமென்னைத் திருக்கண்பார்ப்பதுன்பாரம்
மூவாமுதல்வன்பன்னு மோட்சானுபவந்துன்னுந்.........................
தாவாவொளியாய்மின்னுஞ் சத்யமாமரியென்னும்....... தேவதாயே

மாதர் மயக்கமேறி நித்திய சத்ய மார்க்கமதனைத்தூறி...............
வேதியர்களைச்சீறிப் பாவநூல்களைவிளங்க வெவர்க்குங்கூறி...........
பாதகக்காதகனுகித்தீதகப்பேதையாய் நொந்தேன்...........................
சீதகன் தாக்குமுனது பாதமதைத்தேடிவந்தேன்.......... தேவதாயே

எண்ணில்பவங்கள்புரிந்தேன்வேசிகளிடமிச்சை கொண்டேதிரிந்தேன்
மண்ணைமயலாற்சரிந்தேன்பிணிமிகுந்து வாடியுடலங்கரிந்தேன்.....
விண்ணுலகசுகத்தை எண்ணிக்கண்ணீர் சொரிந்தேன்...............
எண்ணுங்கதிவழி நீ யென்றேயின்றே தெரிந்தேன்....... தேவதாயே

சீர்வளருஞ் சிங்காரி பேரானந்த திவ்வியசுகவாரி........................
ஏர்வளரும் பூந்தாரி வாடுகின்ற ஏழைகட்குபகாரி.........................
தார்வளருயர் சீரி தாவீது வம்சநேரி...............................
பார்வளர் குசைசயின்பாரி பன்னுமன்னம் மாள்குமாரி..... தேவதாயே

வெண்பா.

வாகூருசேடர்தன் வான்முடியின்மெய்யிலுற.......................
நாகூர்மதியிலெழு நாயகியாய்ப் - பாகூரின்.......................
மன்னுசெயராக்கினியா மாமரியின்றாயசெழும்...................
பொன்னடியான் சூடுகின்றபோது.........................

கொச்சகம்.

பொன்மைவளராலயமும் பூம்பொழிலும் நீண்வயலும்................
மென்மைமலர்வாவிகளும் மேவுபாகூரமரா..........................
இன்மைதனைப் போக்கி நம்மை யீடேற்று மாமரியாம்...........
நன்மைசெயராக்கினியினற்பதத்தைப் போற்றுவமே...............

இராகம் சுருட்டி தாளம் அடதாளசாபு.

நன்மைநிறையுன்னதஞானரூபஜெய.............................
ராக்கினியே சரணம் ....
மின்னும்பாகு நகர் மேவும்பரம திவ்ய..............................
விமலன்றனையருளுநிமலியெனும்புனித................ நன்மைநி

விண்ணோர்பணியுஞ்சீலி வெண்மதிமிதிகாலி..................
மண்ணவர்க்கனுகூலி மாதர்கற்புக்கோர்வேலி..................
எண்ணும்வேதநூலி ஏழைகள் பரிபாலி ....
புண்யானுபவமூலி போற்றுமோட்சசெங்கோலி........ நன்மைநீ

இங்கிதசுகவாரி ஏழைகட்குபகாரி ....
துங்கமிகுஞ்சிங்காரி சூசைமுனியின்பாரி ....
கொங்குலவும்பூந்தாரி கோவம்சகுலநீரி..................
பொங்குமினியசீரி புனையன்னம்மாள்குமாரி.......... ..நன்மைநீ

பூதலந்தனில் நீயே யாதரவெனக் கொண்டு ....
பாதமென்னு முன்னத சீதபோதினைக்கண்டு..................
ஆதரமுடன் றேடி யணுகுவோரைப் பார்க்கும் ....
பாதகத்தனைப்போக்கும் பரமபதத்திற் சேர்க்கும்........நன்மைநீ

வேறு.

எள்ளினுந்தள்ளினு மிவணுனது..................
கள்ளவிழ்மலரடிக் கமலம்விடேன்..................
புள்ளினமுறும்பணைப் புதுவையில்வாழ்..................
வள்ளிளம் பிறைமிதிமாமரியே..................

தந்தையுமில்லையுற தாயுமில்லை..................
சொந்தமுமில்லையொரு தோழரில்லை..................
நொந்துனையடைந்தவென் றேயினைக்கண்..................
டிந்தணிமாமரி யிரங்குவையே..................

இராகம் ஆகிரி தாளம் அடதாளசாபு.

அன்னையே அன்னையே எனக்கிங்காய் அன்னையே.......அன்னையே

அன்னையே வுன்னையேயல்லாலெனக்கார்துணை................
செந்நெலுறும்புதுவைச் சென்மராக்கினியென்னும்......அன்னையே

விண்ணிலுள்ள மீன்களை வேவுங்கடலறலை ....
எண்ணிக்கணக் கிடினு மென்பவங் கணக்காமோ ....அன்னையே

பூதலத்தோர்களைத் தீதகத் தோன்று..................
காதக னென்னை லோதுவதே யின்று..................அன்னையே

ஓதியுணர்ந்தும்பிறர்க்குரைத்துந் தானடங்காத..................
பேதையிற் பேதையாப் பேறொடுத்தேனையோ..........அன்னையே

பேய்ப்புறச்சமயர்கள் பிதற்றும் பவநூல் கற்று, ...
எய்ப்புறச் சரியதென் றெண்ணி மோசம்போனே ....அன்னையே

எத்தனைகுற்ற மென்னிடத்திற் கண்டாலு நீ..................
சற்றுமெனைத் தள்ளாமற் றற்காத்திட வின்று ....அன்னையே

இராகம் எதுகுலகாம்போதி தாளம் ரூபகம்.

தயைசெய்தருள் புரிகுவாயே -இது- சமயஞ் சமயந் தேவதாயே
துயரொழித்தாண்மரியாயே-வேறு-துணையெனக்கிலைகதிநீயே.. தயை

மூவுலகாளுஞ் செங்கோலி-ஆதி-மூலன்மகிழுந் தவவேலி..........
பூவுலகோர்க்கனுகூலி-நித்ய-புனிதபுண்ணியசெபமாலி........தயை

பன்னிருவுடுவணிசிரத்தி-சேசு-பரமனுறையுஞ்செழுங்கரத்தி......
உன்னதமிகுப்புண்யதிறத்திமோட்சத்தொளிருந்தேவர்கள்பணிவரத்தி

சீதமதியணிபொற்காலி-மண்ணோர்-தீதையொழித்திடுஞ்சுசிலி....
ஆதவனையுடுத்தமேலி-இந்த-அகிலம்புரக்கும்பூரிபாலி.......... தயை

வஞ்சவலகைகொடுந்தீது - செப்தென் -மதியைமயக்கிவருத்தாது ..
தஞ்சமெனக்குநீயேபாது - காத்துத் - தாபரித்தாளுமிப்போது. தயை

விருத்தம்.

பூதலமெலாம்புரக்கும் பொன்ரத கொடையோனே புகழ்மிக்கோனே
மீதலம்வாழமரர்தொழுங் கோமானே யெந்நாளுமிளிர் வல்லோனே
காதகஞ்செய்மாதர்களோ டித்தனை நாளுறவாடிக் காமியான........
பாதகனாயினுமென்மீ திரங்கிடுதற் கிதுசமயம்பரிவுகூர்வாய்........

இராகம் பந்துவராளி தாளம் அடதாளசாபு.

இதுசமயமென்னை நேராய் -உன்- மதுமல ரருட்கண்ணாற்பாராய் இது
சதியலகையொழியவாராய்-உனைத்-துதிசெய்யடியெற்கருடாராய். இது

நிறைமரிவனாதந்தசேயா-தாவீ-திறைமரபிலுதித்தராயா ....
மறைவனாயிலுனைத்தவாயா-என் - கறையறுத்தாள்பஞ்சகாயா .. இது

புலியுமாவுமொன்றித்ததாயா-ஆர்-கலியில்நடைவைசெய்யுபாயா ....
எளியற்குணவளித்தநேயா-அஞ்-சலிசெய்யடியவர்சகாயா ...... இது

தெருளினொளியனையாள் நாதா-மாதர்-மருளொழித்தாள்சற்ப்ரசாதா ...
இருளற்றவர்புகழ்நன்னீதா-நன்வாக்-கருளெற்கமரர்தொழுபாதா.. இது

இராகம் செஞ்சுருட்டி தாளம் அடதாளசாபு.

நலமளிக்கும் பரமதிவ்யநாதனேவருக - எங்கள்....................
நாதனேவருக நித்தியநாதனே வருக .... ந

ஏவைபழி நீங்க எவ்வுயிருமோங்க எள்ளலகையாவுமேங்க......... ந

பாவலரின்பாகப் பண்பினிசைபாடப் பாரனைத்துமேகொண்டாட.. ந

விண்ணுமண்ணுமென்றுமேவியுறவாகவிந்தைமனுவாய்விளைவாக.. ந

ஈசயன்பல்லோர்முன்னியம்பியதாகநீசர்பவம் யாவும்போக ...... ந

விண்ணினவமாக மீனெழுந்துதிக்க வேந்தர் மூவர்கடுதிக்க .... ந

கொச்சகம்.

காதனுக்கு மந்நாளிற் கண்ணளித்த நஞ்சேசு..................
நாதனுயர் மாபுதுவை நற்கோவின் மாமலையில் ....
ஆதனறியாது புரியவமதனைப் போக்கவொளிர்..................
சீதனுறுதாண்மரிக்குச் சேயாயுதித்தனனே...................

இராகம் மாஞ்சி தாளம் ஆதி.

அச்சுதன் சுதனென வவதரித்தான் - அகல் ....
இச்செகத்தோர்கள் செய்யிடரகல .... அச்சு

தூயவானோர் நனிதொழு திறைஞ்ச - நல்ல ....
ஆயர்பால் தயிற்கொண் டடிபணிய............................அச்சு

மூவுலகுந்தொழுமுதிர் தவத்தில் - உயர்.........................
பூவுலகனை மரிப்புதல்வனென................................ அச்சு

மேதைநற்றவ மிகுசூசையெனுங் -கைத் ....
தாதையாம் வளன்மிகத்தான் மகிழ............................ அச்சு

அன்றுதாவீதிறைக் கறைந்தபடி - யவன் ....
ஒன்று நற்குலந்தனிலுயர் மகவாய்............................. அச்சு

ஆதனன் றயின்ற தீக்கனியதனால் - இந்தப் ....
பூதலத்தோர் கொண்ட புரையொழிய .... அச்சு

வெண்பா.

மாந்தர்பவம் போக்க மனுவுருவாகிப் பிறந்த
வேந்தரிறைஞ்சும் பரமவேந்தனே - ஏந்துஞ்
சிறுகுழந்தை யாயிலங்குஞ் சேசுவே யென்பா
லுறுகணுறுதா ளெனையின் றோர்ந்து.

இராகம் சாவேரி தாளம் ரூபகம்.

சீர்மேவு நித்யானந்தநற் செல்வமெமக்கருளப் ....
பார்மேவிய பரம மரிபாலா ....நமஸ்காரம்

நித்தாவருணிமலா வொளிர் நிருபா நித நிலவுஞ் ....
சுத்தாத்ம நன்வாசா பரஞ்சுடரே ....நமஸ்காரம்

அந்நாளரவாலேவை செய்யரிய வினைபோக்க.....................
இந்நாண் மனுவாக வந்தவிறைவா ....நமஸ்காரம்

மூவுலகும்புகழ்கன்னியு முதிரன்னையுமான ....
தாவிலருமரியம்மையின்றனையா ....நமஸ்காரம்

அருமாதவனென்னும் வளனளித்த மகவெனவும்.....................
இருமாநிலம் புகலவந்த ஏகா ....நமஸ்காரம்

தூயதாவீதிறைவற் கன்று சொன்னவண்ணமாகப் ....
பாயவவன் மரபில்வந்த பரமே .... நமஸ்காரம்
புல்லலகை யுணராமலிப்புவியெங்களு மலைய ....
வல்லமணவாளியிடம் வந்தோய் .... நமஸ்காரம்
விண்ணோர்புடைசூழ வாயர் விதியோடடி தாழ ....
வண்ணோர்செழுமணையில் விழிவளர்வோய் .... நமஸ்காரம்
மூவேந்தர் பொன்மிறைதூப மொண்முடி தாழ்ந்தடிமுனமுய்த்...
தாவலுடனே போற்றிடவமர்ந்தோய் .... நமஸ்காரம்
தேனேசுவையமுதே செழுங்கனியே யெங்கடிருவே ....
வானோர்பயனெளியேம்பெறவந்தோய் .... நமஸ்காரம்

இராகம் நீலாம்புரி தாளம் சம்பை.

ஆதிமுதலானபரப்பொருளே- நித்- யானந்த போகமருளற்புதநற் றெருளே, சோதியெனும் புனிதசத்யவேதா- மண்ணிற் - றாயோர்கள பணியவொளிர்சொல்லரும்பொற்பாதா, பாதிமதிமிதித்தமரிபாலா- வுயர்- பன்னுசராசரமனைத்தும்படைத்தளிக்குமூலா, தீதொழித்தெற்க ருள்புரிதெயுவீகா- நிதஞ்- சேணோர்கள்போற்றவளர்திவ்யபரலோகா.
ஆதிமுதலா

பாரார் பல்லுயிரனைத்தும் படைத்தோய்- அப்- பார்பரவைதனிற் பிர ம்பாற் பண்டுசடமளித்தோய், வாராரோர் வரையிற்றசமறையை- மண் ணோர்- வானுலகம்பெறவரைந்துவாகையுடனளித்தோய், ஏராரோர்பிள் ளையினைவிடுத்தே- பண்டு- எலிய முனிக்குணவதனை யினிமையுடனளித் தோய், சீராருன் றெண்டனுரையதனற்- சுடர்- செல்லாமற் செயுமு னது சீர்த்தியுரைப்பதுவோ.
ஆதிமுதலா

இன்றெனது பவமனைத்தும் பொறுத்தே- என்னை- யீடேற்றினுன க்குவருமிழிவென்னபுகழே, யன்றெனினு முனிபவர்நிற்குளரோ- வெ னக்- காதரணைபுரியவுனையன்றியும்வேறுளரோ, நன்று செய்பவர்க்கரு ணைபுரிதல்- இந்த- நானிலத்திலருமையன்று நாயினேற்கிரங்கில், என்று முண்டுபெருட்புகழ்நிற்கையா -இது- வேசமயங்கண்பாரு மீதில்லா மெய்யா.
ஆதிமுதலா

இராகம் கேதாரகௌளம் தாளம் ஆதி.

அருள்புரிந்தெளியனை யாதரணைசெய்யா
அடமென்னசொல்லையா
திருமகுணனந்த சகலலோகபதியே
தகைசேர் மாமரி தந்த சாமியெனு நிதியே அருள்

பரமவுன்னதபாலா பத்தர்பணியுங்காலா....................
உலையுமும்பர்க்குமேலா வோதும் வேதநூலா...............

திருவாருஜீ தலோலா திவ்யமாமறைமூலா..................
ஒருசரமசுசிலா வுன்னுமோட்சசெங்கோலா அருள
கொடியபவத்தைப்போக்கக் குருசைச்சுமந்ததோளா..................
படியமுண்முடிசிரம் பரித்தொழுத்தகுணாளா..................
அடியரிதையாம்புயத் தணியுஞ்செம்மலர்த்தாளா..................
மிடியர்க்கருள்செய்தாளும் விண்ணோர்மண்ணோர்கண்ணாளா அருள்
நிதமுமன்பருக்கருளுதவுங்கிர்பாசமுத்ரா..................
நிகிலநிர்குண நயநிமல பேரின்பக்ஷேத்ரா..................
அதுலவுன்னததிவ்விய அனமரிசுகுமாரா..................
ஆனந்தபாக்யமெற்கருளுநித்யவுதாரா.............. அருள்

இராகம் எமுனகல்யாணி தாளம் திரிபுடை.

தோத்திரஞ் ஜெயதோத்திர நித்தியதோத்திரஞ் சுபதோத்திரம்
தோத்திரஞ் செயதோத்திர மெங்கள் தூய சேசெனு நாதற்கே. தோத்
அன்றுகலிலேய நாட்டிலே மணமனையுமொருபெரும் வீட்டிலே
நின்று சலமதுவாக வருள்புரி நித்ய பரம நந்நாதற்கே. தோத்
தீதிலாமலையாயிரர் பசி தீர்த்தவன் பவநீத்தவன்
சோதிதனைச் சோகுவனுக்கு நிறுத்திறற்றுணைசெய்தபரஞ்சோதிக்கே.
ஆசறுதவமோயீசற்கத ராழி தனிலளித்தாண்டவன்
லாசறுதனக்குயிரளித்தரு நவங்கள் பலபுரி நாதற்கே. தோத்
சகலபுவனமும் பணிய நின்றொளிர் சருவஜீவ தயாபரன்
இகலிலெலியனுக்குணவைக்காகையாலீந்தூட்சித்தவேகற்கே. தோத்
போதமறையினையுணர்த்தவனைந்து புரத்தை வருத்தியன்றெரித்தவன்
காதகன்றுயர் கண்டுபொறுத்து நற்கதியளித்த நங்கடவுட்கே. தோத்

இராகம் செஞ்சுருட்டி தாளம் ரூபகம்.

மங்களஞ் ஜெயமங்களஞ் சுபமங்களஞ் ஜெயமங்களம்
மங்களம்பிதாச்சுதனிஸ்ப்ரீத்து வல்ல ஏகவஸ்துக்கே. மங்களம்
நித்யானந்தபோகற்கே புண்ய நிமல நின்மயதேகற்கே
சத்யநற்பிரகாசற்கே பரமேசற்கே சறுவேசற்கே. மங்களம்
சகலசீவாதாரற்கே யாவுஞ் சமைத்தளிக்குமுதாரற்கே
அகிலபுவனமியாவும் படைத்த வாதிமூல நாதற்கே மங்களம்
புண்யருக்மதேகற்கே விண்ணோர் போற்றும் த்ரீத்வ ஏகற்கே
மண்ணிற்பவத்தை யொழிக்கப்பிறந்து மரித்துயிர்த்த நம்வள்ளற்கே.
ஆறுலட்சண ஏகற்கே நம்மை ஆண்டளிக்குந் தெய்வீகற்கே
தேறுமீனாந்துகற்பனையருள் திவ்ய நம்ஜெகதீசற்கே. மங்களம்
முத்தர்கடொழுசீலற்கே மோட்ச மோனர்பணிபொற்காலற்கே
உத்தம கன்னிமரிவயின்வந்த வுன்னத சேசுநாதற்கே. மங்களம்

கொச்சகம்.

சீரார்பலகலைகள் செம்மையுடனேயிலங்க..........
ஏரார்கொலேழுதனிலெந்நாளு மேவிளங்கித்..........
தாரார்திண்டேரதனிற் றங்கிவருங்காவலனே..........
பாராரெம்மேலிரங்கிப் பன்னாளுங்காத்தருளே..........

இராகம் தோடி தாளம் அடதாளசாபு.

கருணைபுரிந்தெம்மைக்காப்பதுனதுபாரங்..........
காவலானவானவா..........
மருவளர்சோலைசூழ் மன்புதுவைப்பதியில்..........
வளருங்கல்விச்சங்கத்தில் வாழுங்காவலானவா. கருணை
தீதுபுரியலகை செய்யும் வஞ்சகமறத்..........
தேவனருமறையின் திவ்யநன்னெறியுற..........
நீதனெமக்கு நன்னித்யசுகந்தர..........
நிதமும்பரகதியி னிலைமையதனைப்பெற. கருணை
தூயபரமசேசின் சுகிர்தவழியைநாடத்..........
துலங்குமவன்புகழைச் சூழ்ந்துநிதமும்பாட..........
நேயமுடனவனன் னிமலவடியைச்சூட..........
நித்தமுமவனருளை நினைந்து நினைந்துதேட. கருணை
வல்லகலையறிந்து நல்லவழி நடந்து..........
மன்னும்பெரியவர்களுன்னும் படிபுரிந்து..........
புல்லர்தமையொழிந்து வல்லர்தமைத்தெரிந்து..........
புண்யம்பலவுஞ்செய்யக் கண்யமுடனேவுய்யக். கருணை

இராகம் அபரூபம் தாளம் ரூபகம்.

அருள்புரிஐயா எனக்கார்துணைமெய்யா அருள்
தெருண்மிகுந்துய்யா நீ செய்நவம்பொய்யா..........
இருளறு மர்ச்சீட்டலசாரெனப்புகழ்ச் செய்யா. அருள்
புண்யநேயாபுனிதநூயா போற்றுநோயர்சகாயா..........
எண்ணிலாக்காயா ஏழைக்கிதஞ்சொலும்வாயா..........
விண்ணிற்சீலனே மிகவிளங்குங்கோலனே..........
விந்தையுறச்சுணங்கன்றூழமின்னுங்காலனே அருள்
பன்னுநோயிற்பரனை வேண்டிப்பணியுநன்விசுவாசா..........
மின்னுமபராமடியில் மேவிவாழ்வாசா..........
நன்னயவானே யருள் நல்குமெங்கோனே..........
சந்யாசிகுளந்தன்னி லமர்ந்திதஞ் செய்யும்பானே. அருள்
தீயவலகையாலெந்நாளுந் தேவன்முறையைமீறி..........
பாயவுலகில்மிகவும்பாவியாய் நரகில்..........
சாயுமென்னையுன் திருத்தாளிற்சேர்த்திடச்..........
சமயமிது பரனுபயதாளைவேண்டியே. அருள்

தேம்பாவணிப்
பிரசங்கத்தின்பேரில் பாடல்.

சீர்கொளகிலாண்டஞ் சராசரமெலாஞ்சிறு திரண்டகந்துகமதாகத் - திரட்டிப்பிடித்தவொண்கைத்துநன்மரிபாற்றிரண்ட செம்பவளவாய்த்து நீர்கொளுலகோரமரரியாவருந்தொண்டுசெய நின்ற பொற்றாட்டுமிக்க நிறையருட்பொழிமலர்க்கட்டுநரரகமகல நீண்டவன்சிலுவைபட்டுக், கார்கொடிண்டோட்டுழன்றாட்டெதுவதைப்பணிபுகைகுவிப் பேமுரியொழி-கட்செவிக்கொத்திவணவாழ்வினையொழித்துமேற் கதிவழிதனைப்பிடித்தபார்கொளுயர்சீர்வீரமுனிவன்சமைத்ததேம்பாவணியினுண்பொருடனைப்-பாவலர்களின்புறச்சங்கப்ப்ரசங்கம்பயன்பெறச்செய்வதற்கே

வீரமாமுனிவர்பேரில்

இத்தலமுற்ற மனித்தர்செழிக்க வினைச்சிலையிற்சிலையில்
அத்தனளித்திடுபத்துமறைப்பொருளற்புடையோருணரப்
பத்திமிகத்தெளிவுற்றொளிருந்தேம்பாவணியாகநல்ல
முத்தமிழிற்றருநற்றவவீரமுனித்தொழலெய்றொழிலே.

நச்சரவானசோகினவையறமனுவாய்வந்த
அச்சுதனடியைப்போற்றியருள்வீரமுனிவன்றந்த
இச்செகமுழுதுமேத்துமெழிற்றேம்பாவணியின்றாய
உச்சிதப்பொருளைநாயேனுணர்ந்தவாறுரைப்பன்கேளீர்.

போளும் ஆண்டவர்பேரில் கொச்சகம்.

சொல்லருநற்சேசு பரன்றாயமறைப்போதகர்கள்
எல்லவர்க்குமேற்றிறங்கொண்டிப்பதியிலேவிளங்கும்
நல்லகிளமென்சுபோளுந்துரிசிப்பாரெனும்பேர்
வல்லவெங்களாண்டவநீ வாழுதியேயெந்நாளும்.!

கட்டளைக்கலிப்பா.

சாந்துதூய்மை தவம்பொறைவாய்மையொண் சற்குணநிறைநல்லருளன்பொடு, எந்துபேரொழிலியாவுமுருவுதீவீறினன்மை யெமக்குறவேயிவண், போந்துதூயவின்மா மறைதன்னைப் புகல்வித்தென்றும் பொலிகிளமென்சுபோ, ளுந்துரிசிப்பாரொன்றொளிராண்டவ நாளுமோங்கிநலமொடுவாழ்கவே .... *

இராகம் கமாசு தாளம் ஆதி.

ஆசிதந்தருளெங்கள் தயாநிதியே
அருளொடுமதுதிரு - ஆசிதந்தருளெங்கள் தயாநிதியே
தேசுலவியகிளெமென்சு போளுந்துரிசிப்பார்என்னுந்
திவ்ய ரூபகருணாம்பர வாண்டவ. ஆசி

அமல நிமலனிரு கமலவடி பணியுமேலா சீலா
அற்புதசற்குணவிற் பனமேவிய லோலா
விமலரறிஞர்புகழ் வேதோபதேச நன்னூலா
மேற்றிராணியா னென்றெளி ராண்டவ. ஆசி

பரமபுனித திருமறை யுரைசெயு நவபோதா தாதா
பானுமதியுடையாளருண் மேவு நன் னீதா
வரர்சிரகரகம் பிதமிடு சற்குணவாரா தீரா
வாரிசூழும் புதுவாபுரி யாண்டவ. ஆசி

மண்ணுறு மிருளற மறையொளிதருதவ நேயா தூயா
மாகதிபெற வெமக்காதரவு புரிசகாயா
தண்பலகலை சிறியேமுணர்ந்திட வருமூலா மேலா
சாந்தப்பனென்னு நாமம் புனையாண்டவ. ஆசி

கொதேல் ஆண்டவர் பேரில்

பொங்கு பூதலத்தோங்கும்பாகூரிற் புனிதநஞ்செயராக்கினி மாமரி
தங்குமற்புதவாலய மாமிதைச் சார்ந்து நல்லபிஷேகஞ்செய் தேயத்தில்
எங்களாண்டவனே திவ்யபூசை யிலங்கலங்ரத மாகவியற்றி நின்
செங்கையாசியளிக்க வெழுந்தியாஞ் சீலராகிப் பெருகவருகவே.

வருகவற்புத ஞானியே - வருகதிவ்வியமோனியே
வருகபுண்ய சொரூபியே - வருகசற்குணமாரியே
வருகவானுலகேணியே - வருகயார்க்கு மேற்றாணியே
வருகமாதவம் பூண்டவா - வருக எங்கொதேலாண்டவா.

☞ ஷ பாகூர்ஆலயவபிஷேகத்தைக்குறித்து ௲௮௯௯ ௵ பெவுறியே மீ ௨௨ அச்சிடப்பட்ட ௮௲௨ம் நெம்பர்மோனித்தேரிற்காண்க.

தெப்போமியே ஆண்டவர்பேரில்

ஞானபானுவெனத்திகழந்தண நற்குணாலய புண்ய சம்பூரண
மீனெனத்திகழ் பூசுரர் நாப்பணோர் வேந்தனென்னவிளங்கும்வஜீகரா
வானமென்னுஞ்சுகநிலைகாட்டி மகிழுமோனர்கடம்மின் மேற்றாணியா
யான்தீரவுதார தெப்போமியே ஆண்டவா நினதாசிதந்தாள்வையே.

முப்போதொப்பா முவமை மூப்பிளமை யீறிலிதன்
அப்போதருமறையோர் தோத்திரிக்குந் தூயவரோ
இப்போதிங் காண்டவரா யிலங்குமலங்கார திவ்ய
தெப்போமியேயெனுமேற்றிராணியரேவாழியவே.

நன்னகரென்னுங்கோயமுத்தூரில்வாழ் நற்கிறிசோபொலிசெனுமற்புத, பொன்னகர் மேற்றிராணியராந்திவ்ய புண்யரூப தெப்போமியேயாண்டவா, வன்ன நின்திருப்பட்டத்தைக்கண்டு மகிழ்ந்திந்நாண்வலம்வந்துனை வந்திக்கும், இன்னபாக்கியம் பெற்றவரியாரெம்போ லிலங்கும்வேலை சூழிந்நிலந் தன்னிலே...................................... *

துப்பிசுவாமியார்பேரில்

திணிமிகுபுவியோர் வணங்குமொண்வேந்தர் தேடும் விண்ணோர் தொழுமிறைவன், அணிசரண்மறைமீதிருக்குநன் மனங்கொளாசிலாத் துபிவிஸ் ஆங்குருநம், மணிமிகுந்தொளிர்தண்ணருநிழலண்டிமா நிலந்தன்னின்வாழ்ந்துமக்குப், பணிசெயுஞ்சிறியேம் பிழைபொறுத்தென்றும் பரிவுசெய்தாள்வதுங்கடனே........................*

கொச்சகம்.

ஆதலாலிப்புதிய வாண்டதனிலெங்களுக்கு
நாதனருள்பேறறிவுநல்லொழுக்கம்பத்திநிறை
நீதமொளிர்பாக்கியமு நீணிலத்திலேபெருக
வாதரமோடுங்கரத்தாலாசிதந்துவாழ்குகவே.

பாழ்சுவாமியார்பேரில்

சிறந்தநற்றிங்கடினகரனுடுபதத்தியருள் சேர்ந்தொழுகுமம்பரத்தி-சீர்சேகரத்தி நலமகலாவரத்தி யொளிர்திவ்ய சுதனுர்கரத்தி, அறந்தந்த மரியம்மை யரவிந்தமலரடியையனவரதமுடிபுனைந்தே-யன்பறிவுபண்பினிய வற்புதப்பயிர்தழைய வருண்மாரி பொழியுமுகிலே; மறந்தருங் கொடியபவ வாரிதிகடந்துசுக வாழ்வுதர வருவங்கமே-வறியபரசமயிருளற வீசுமறையொளியின் மாநிலத்துறுபரிதியே, திறந்தழைக்குங் கலைச்சங்கச் சிரேஷ்டகுருதிவ்யபாழென்னுமுனியே - சித்தம்வைத் தெந்நாளுமுத்தமத்தொடுகருணை செய்யநினதக மகிழ்வையே.........*

லெயோதே சுவாமியார் பேரில்

சீர்கொண்ட நித்யபரி பூரணசதானந்த சேசுபரனருணனிபெறீஇச் - சென்மபதிதாய்தந்தை யுறவினை யொழித்துநனி தீமைதருமுலக வாழ்வைச் - சினந்துவற்சித்தவா மூன்றையுமொழித்தைந்து தீயபொறியாம்பகைவனாச்- செய்யதவவாளாற் சிதைத்தழித் தரியபவ தெண்டிரைதனைக்கடந்து, நார்கொண்ட தபசிக்குழாந்தனைச்சேர்ந்து மெஞ்ஞான நூலியாவுமோர்ந்து - நகுபுதுவையம்பதி செயுந்தவமிதென்ன விவணுடியொருகுருவெனவுறீஇ- நனிநலம்பலசெய்வதோடு கிளைமேன் சுபோனுந்துரீ இசிப்பாரென்னும்-நன்மேற்றிராணியாராயவாண்டவரிட நவின்றுவிடைகொண்டெமக்கின், றேர்கொண்ட தூயவொருநல்லொடுக்கந்தனைபிசைத்தனுதினங்கடவுடா - ளேற்றிடச்செய்தெமக்கிருபோது மொண்மறையினின் பொருடனைத்தெரித்தே - யீறிலியினிலையிற்று நற்கதியினிலையிற்றியம்புதுற்கதியி நிலையிற் -றென்று தெளிவாப்பகர்ந்தனுதினமு மெங்களீடேற்றமதை யேவிரும்பும், ஆர்கொண்ட தூயலெயோதே யெனும்புனித வடிகளே நுமதடிகளே - யண்டிவந்திங்குறையுமியாங்களு முமக்கென்னவருநன்றிசெய்யவல்லேம் - ஆயினு மியாங்கள் செயுநன்றிவந்தனமதனையங்கிகாரஞ்செய்யுமென்-றமலமலியுகளசெந்தாமரைத்தாள் பணிந்தன்பினொடு வேண்டினமரோ...............*

பவமலியுலகின்வினைச் சிமிழ்ப்படைந்து பரகதிவழியிதென்வுணரா
தவமலிகொடியவலகையோடிருளிலமிழ்ந்தியெந்நாளும்வேகாது
தவமலிசேசுக் கடியராயெமையிந்நாளினிற் சேர்த்தினிதாண்ட
தவமலிபுனிதலெயோதேயென்றியம்புஞ் சற்குருநாளும் வாழ்தியே.

மத்தியேன்சுவாமியார்பேரில்

பொங்குபேராழி முகிலினைநோக்கிப்போக்குதியெனது நீருவர்ப்பென்
றங்கதுகேளாதிருப்பினு மஃதேயவ்விதம் புரிவது கடுப்ப
விங்குறுமெமது பவப்பிணிபோக்க வின்மருந்தாகவே வந்த
எங்குருவே மத்யேனெனும் பெயர்கொளினிய மாமுனிவரோவாழ்க!

பர்பேசுவாமியார்பேரில்

சழுமரநிலத்து நிறை கறை நீரினாத்துவிளை கதி நலப்பயிர்செய் யுழவோன் - கமலபத மறவாத கழககுருவெனு நீத காட்சிதரு மறைவிளக்கை, வழுமறநிலத்துழலு மானிடர்மனத்திருளைமாற்றவேற்றுஞ்சிந்தையோய் - மாசுகுணபர்பேயெனும் பெயர்விளங்கவிம்மண்டலந் தோன்றுமறையோய், எழுமறநிலத்தரசர்தொடர்புடையவர்க்கென்று மேனையவர் கேண்மையெல்லாம் - எளிதிலடைவதுபோல நினதுதயையடையெனக்கேனையவராங்குருக்கள், பழுதறநிலத்தரசையபரிவுறவரச்செய்துன் பட்சமதுமறவாமலே - பண்பாமிவ்வருடப் பிறப்பினினதொளி ராசிபணியுமெற்கருள செய்வையே.............................. *

லெவெய்யார் சுவாமியார் பேரில்

கலையெனுங்கடலிற் கதிதருவேதக்கான்புனலருந்தியெஞ்ஞான்று
நிலையிலாக்காமப் பகலினூற்கரிந்தநெல்லெனும்புவியுளோர் தழையத்
தொலைவிலாவளியாற்பொழிதருமுகிலாந்தூலெவெய்யாரொனுந்துறவோ
ய், தலையினுற்றெழுமெற்குனதுமேலாசிதயவொடுதந்துவாழ்குவையே

முசேசுவாமியார் பேரில

குலக்கிளையொருங்கு நீக்கிக் குன்றமுங்காடுமேதம்
புலப்பகையைந்துங்கொன்று புதைக்களமாகுமென்று
வலத்தவமுயலப்போவார் வனத்துறு தென்போல்வார்க்கு
நலத்தகைசெய்யாநின்ற நன்முசே சுவாமிவாழ்க

லிழோம் சுவாமியார்பேரில

ஏர்மலியுலகமூன்று மோர்கணத்திலிசைத்தளித்தழித்திடவல்ல
சீர்மலிசே செம்பரனருமறையைத் தெளிவுறத் தெரித்தெவர்களுக்கும்
பார்மலிகவிஞர்நாத் தழும்பேறப்பல்புகழறைதரப்பொலியும்
நார்மலிதூயலிழோமெனும் புனிதநற்குருவே நிதம்வாழி.

மோன்றி சுவாமியார்பேரில

பூமேவுபொறையுற்ற புண்ணியாவாழி, மாமேவுகனமுற்றமதிவல்லோய்வாழி, தூமேவு நிறையுற்றதோமிலாய்வாழி, தேமேவுமோன்றியாந் தேசிகாவாழி, தினமுமெற்கருள் செய்யுயர்தேசிகாவாழி........ *

ஆன்றிசுவாமியார்பேரில்

மாதவராகியவேதியரே வல்லமையுள்ளமடாதிபரே
போதகராகியமாமுனியே புண்ணியரேயெம்போல்வார்க்கே
ஆதரவேயெம் சிரேஷ்டரெனும் ஆன்றிசுவாமியானவரே
நாதரெனுங்குருமாமுனியே நாளுமேன்மேல்வாழுதியே.

புருழையாசுவாமியார்பேரில்

அந்தரம் புவிமுதலமைத்தவனை; வந்தனைசெய்யும்வழி வழங்கிநல்ல,
சிந்தைகொள்புருழையாதேசிகரே, சந்ததம்வாழி நற்றரணியிலே.

அருளநாத சுவாமியார்பேரில்

பொற்பருள் பேரன்பொழுக்கம் புண்ணியஞ்சன்மார்க்கநிறை
நற்குணங்களோருருவாய் நன்மைசெய்யவுற்றதென
அற்புதமாகத்திகழநல்லருணநாதசுவாமியெனுஞ்
சற்குருவே மேன்மையொடு சந்ததமும்வாழுதியே.

கல்விசாஸ்திரமடத்தில் வெகுமானமளித்தபோது கூறப்பட்ட

கீர்த்தனங்கள்.

இராகம் நாதநாமக்கிரியை தாளம் அடதாளசாபு.

வெகுமானம் பாரீர் வித்யாற்சித வெகுமானம்பாரீர்
மிகுமானமுடைய நன்னயமாதேப்பிகவரு
மின்னுந்தெப்போமியே யென்னுஞ்சிரேஷ்டகுரு
தருமானபடிபெங்கள் தொகுதிப்பகுதிகண்டு
தருமக்கல்விச்சங்கத்திற் பெருமைத்திறம்வகுக்கும்.

வெகுமானம்பாரீர்

துங்கப்புதுவையாளுந் தூய்மான்துபுராயென்னத்
துதிக்குங்குவர்னரொடு மதிக்குந்துரைகளொடுந்
தங்கக்குருசுரத்திலங்கத்தரித்த தூய
தகைமைக்கிளேமேன்சுபோனு மகிமைத்துரிசிப்பாராந்
தகைகொளாண்டவரும் பலதவநன்
நகைகள பூண்டவரும் வேதாகமம்
எங்கும்விளங்கிடச்செய்யும்புரோவிக்கேர்
என்னுந்துப்பிசுவாமி பன்னுங்குய்ரேயென்னத்
தங்கும்லேயோதேகுருசுவாமி யருளானந்தர்
தழைந்த ஆன்றி ரிஜோம் விழைந்த செர்வூஞ்ஞுருந்
தவத்திற்சென்றவரும் பரமஞான
சுகத்தில் நின்றவரும் மூசேயென்னப்
பொங்கும்புகழ்படைத்த புளையற்றவரும்லிழோம்
புருழையாவுந்திறம் பூண்டவருள்நாதரும்
பங்கமிலாமற்பகர் புஷ்பநாதரும்
பலருமளிக்கநின்றிங்கெவருங்களிக்கச்செய்யும். வெகுமானம்பாரீர்

உன்னும்வேதசாஸ்த்ரம் ஓதுஞானசாஸ்த்ரம்
உரைக்குந்தத்துவசாஸ்த்ரம் உயர்ந்த பூகோளசாஸ்த்ரம்
மன்னுஞ்சோதிடசாஸ்த்ரம் வளருந்த்ரிகோணசாஸ்த்ரம்
வயங்கும்ப்ரமாணசாஸ்த்ரம் மதிக்குங்கணிதசாஸ்த்ரம்
வாசகப்பயிற்சி தேசப்பயிற்சி
ஞாபகப்பயிற்சி இவையனைத்துந்
துன்னும் ப்ராஞ்சுபாஷை தூயலத்தீன்பாஷை
துலங்குமிங்கிலீஷ்பாஷை துதிக்குந்தமிழ்ப்பாஷை
இன்னந்தேவகீதம் இணையில்லாதசங்கீதம்
இவைதவாவலரும் நவையிலாவலரும்
இன்பாப்போதித்து மாணக்கரை
அன்பாச்சோதித்து அவ்வையவையிற்
பன்னுந்திறமறிந்தபாலர் சிலரைக்கூட்டிப்
பணிகளணிகள்பூட்டிப் பகர்சேன் செய்யக்காட்டி
மின்னுமலர்கள்சூட்டி மிகவுங்கைகள்கோட்டி
மேன்மையாங்களுயயும் பான்மையாகச்செய்யும்
வெகுமானம்பாரீர்

பாரிலுயர்புதுவைப் பதியிலொளிர்கொலேஜிற்
பகரும்பெருஞ்சாலையிற் பன்னும்பூஞ்சோலையிற்
சீர்கொ ளணியுந்நத சித்ரப்பந்தலதனிற்
சிறந்தமுனிவர்வாசித் தறைந்தபடிவகுப்பில்
தேர்ந்தவர்நாடத் தந்தையர்களை
யோர்ந்தவர்தேட மூடர்கள்வாட
ஏர்கொள்தங்கப்பொறிகளிட்டுக் கட்டி ரேக்கிட்
டிலங்கும்புத்தகங் கொடுத் தலங்கல்தனைத்தொடுத்துத்
தார்கொளணிபுயத்தி லார்வமுடனணைத்துத்
தந்தைமார்கள்துன்ன அந்தமாகப்பன்னத்
தகுகீதம்படிக்கச் சிப்பாயிகள்
நருதம்பூரடிக்க இப்படியாகக்
காருள்ளளவு மெழுகடலுள்ளளவுமிரு
கதிருள்ளளவு முயிர்க்கணமுள்ளளவுமிக
நார்கொள் சேசுபரநாதவருள்செய்யென்று
நாடித்துய்யர்சொல்லத் தேடிச்செய்யுநல்ல, வெகுமானம்பாரீர்

இராகம் கேதாரகௌளம் தாளம் அடதாளசாபு.

அதிநூதன வெகுமதிசெய் விநோதத்தை
அறையக்கேளீர் கேளீர் அதி
துதிசேர் தெப்போமியே தூய சிரேஷ்டகுரு
துலங்குங்கல்விக்கழகத்திலங்க வெங்களுக்கொரு. அதி

மதிக்குந்தூய்ரான் துபுராய் மன்னன்குவர்னர்நேராய்
துதிக்குங் கிளெமேன்சுபோனுந் தூரிசிப்பாருக்குச்சீராய்
கதிக்குந் துரைகள பன்னக்சாட்டி முனிவர்துன்னக்
குதிக்கும் பாலகர் மின்னக் கூவதிசயமென்ன. அதி

முத்திவழியைக்காட்டும்மூடப்பவத்தையோட்டும்
சுத்தபொருளை மீட்டும் தூயபுகழைக்கூட்டும்
வித்தையதனைத்தேடி விருப்பும் பாலரைக்கூடி
மெத்தப்புகழகொண்டாடி மின்னுமாலைகள் சூடி. அதி

மன்னும் ப்ராஞ்சுலத்தின் வயங்கு மிங்லீசுதென்
துன்னுந் தமிழும்பன் தூயசங்கீதமின்
னின்னகலையறிந்திங் கியம்புவோரைத்தெரிந்து
வன்னவாசிபுரிந்து வயங்கு மலர்சொரிந்து. அதி

துப்பிசுவாமியார்மடத்தில் வெகுமானமளித்தபோது கூறப்பட்ட

பாடல்கள்.

சீரிலகு மூவுலக மும்படைத் தருளமல சேசெனும் பரமனருளாற்
சிங்காசனத்தேறி மகுடாபி ஷேகனுய்த்திவ்ய செங்கோல் நடாத்துந்
தீரனப்போலெய மெனுஞ் சக்ரவர்த்தியின் திவ்யஞானப்பிள்ளையாய்ச்
செகதலத்தோங்கு நம்புதுவை நகராளுஞ் சிறந்தபோந்தாங்குவர்னரும்,
பாரிலகு சென்னைமா நகரில்வாழ் கஸ்தோரிபட்டணமெனுங் சதித்த
பதியின்மேற்ராணியாம் பெனலியாண்டவரு நாம் பன்னுதிரிசிரகிரியி
ல்வாழ் - பாங்குறு தமாஸ்பட்டணத்து மேற்ராணியாம் பகர்கனேஸ் ஆ
ண்டவருமிப் - பதிபுகழ் மைசூரில்வாழ் கனழசேன் மேற்ராணிபகர்
ஷீர்பொனு ஆண்டவர், எரிலகு நப்புதுவைதன்னில்வாழ் தெர்மோப்பி
லென்னு நகர்மேற்ராணியா - மினியகொதேலாண்டவர் கோயம்புத்தூ
ர் வாழ்கின்ற விசைகொள் கிறிசோபொலிசெனு - மிணையில் பொ
ன்னகர் மேற்றிராணி தெப்போமியேயென்னு மைந்தாண்டவருடன்
இப்பதியிலோங்கு துரைமார் முனிவரதிஞர்களோ டவர்களு மிலம்பூ
துறப், பேரிலகு துப்பிமாமுனிவரன் மடத்திலகு பெண்கள் சன்யாஸ்
திரிகளாற் - பிறங்கு செந்தமிழ்மறை நன்முறைகற்பிலக்கணம் மீடுறு
மில்லறவொழுக்கம் ப்ராஞ்சு பாஷையு முணர்ந்தாடவர்கடங்களைப் பே
தைய வொன்றுதவண்ணம் - பேசுமிச்சிறுமியர் செய்திவ்ய சல்லாபமோ
பெருமிதமளித்த தம்மா .... *

கட்டளைக் கலித்துறை.

போந்தாமெனுங் குவர்னேர்துரையே புதுவைக்கு நல்ல
வேந்தாமெனச்சொலித் தண்ணுமையாம் பறைவீறடைந்து
தாந்தாம்மெனப்பெரும்பாக்கியமுற்றவர்தாரணியில்
நாந்தாமெனவிவற்றந்தானப்போலெய நல்லிறையே.

கொச்சகம்.

மின்னுமெழிற் செந்தமிழான் மெய்ம்மறையு நன்முறையும்..
பன்னுமுலகத்தியல் புப்பாவையருங் கண்டுய்ய ....
உன்னுமருந்தவத்தினரிலுயர்ந்த துப்பிமாமுனிவர் ....
என்னுமிவர்தாண்மலருக் கெந்நாளுந் தோத்திரமே ....

கட்டளைக்கலிப்பா.

வாழ்கமெய்ம்மறை மன்னர் செங் கோன்முறை வாழ்க நம்புதுவாபுரிம ன்னவன், வாழகவாண்டவனென்னு மேற்றாணியர் வாழ்கவேதியரோடு பதேசியர், வாழ்கமாதுரைமார்களதிஞர்கள் வாழ்கசெந்தமிழ்வாணர் ந ன்னாவலர், வாழகதுப்பிமுனிவன் மடத்தினின் மன்னும் பெண்கள் மற் றோர்களும்வாழகவே ....,

மண்ணிறைக்கடியராயான் மாவினைவளர்க்கும் பெண்கள்.....
விண்ணிறைக்கடியராகி வீடுபெற்றுய்யவேண்டிப் ....
புண்ணியமறையின்றாய பொருளெலாந் தமிழிற்காட்டும்.....
எண்ணருபுகழார் துப்பியென்னுமாதவனேவாழ்க..............

இறையவற் கினியராக விருங்கலைமாதர் கற்பான் ....
மறையவனென்னுந்துப்பி மாமுனிமடத்திலுள்ள.....................
நிறையுறு கன்னிமாரும் நிமலன்வேதத்தையோதிக் ....
குறையறவிளங்கும்பெண்கள் குழாமுமமற்றையரும் வாழ்க..............

பலசமயப்பெண்களுக்குப் பள்ளிக்கூடம் ஏற்படுத்த
சவராயலு நாயகர்செய தபிரசங்கத்திற்கு முன்கூறிய

பாடல்கள்.

போந்தான் குவர்னர் பேரில்

தன்னுயிரெனவே மன்னுயிரனைத்துந்தாங்கி மாநிலமெலாம் புகழப் பொன்னுலகெனுமிப்புதுவையம்பதியைப்புரந்துசெங் கோலினிதோச் சி, வன்ன நன் மடவார்தமக்குநற்கல்விவான்பொருடரவருண்மிகுந்து, ம ன்னிவந்தொளிர்பொந்தானெனுங்குவர்னர்மன்னனும்வளனலைப்பணிந்து

கொதேல் ஆண்டவர் பேரில்

தண்காலருள் செய்பரனிருசெஞ் சரணம்புயமொண் முடி விளங்கத் தங்கக்குருசேருரம்விளங்கச் சகலவழகெங்கணும்விளங்கப்பண்கால்சக லகலைகளெலாம்பகர்நாவதனினிதம் விளங்கப் -பாணரியம்பும் பாக்களி லே பன்னுளுந்தம்புகழ் விளங்க, வண்கால்புரவுத்தொழிலொருங்குவய ங்குசெழுஞ்செங்கரம் விளங்க- வாய்மையருளன்பிதமனைத்தும்வதனம தனின் மிகவிளங்க, விண்கால்பெருக்கஞ்சிறிதென்ன வியன் சீர்காட்டும் புதுவைநகர்மேற்றிராணியாரென்னமிளிர் கொதேலாண்டவர்த்தொழுது

துப்பிசுவாமியார் பேரி

நல்லருளொழுக்கஞ் சுகுணமொண்சீல் ஞானமாதவங் கனமேன்மை வெல்லருந் தேற்றம்பொறைநிறை வாய்மை விளங்குமன் மிவையெலா

மொருங்கு, வில்லுருவெடுத்திங் கெழுந்துல கோர்கண்மிளிர் துப்பிசுவா மியென்றொருபேர், சொல்ல நின்றவரோயேர் துரைமார்கடியே நற்பெரிய னாவணங்கி .... *

பிரசங்கத்தின் பேரில்

போற்றுமெழிற்கல்விவளமிஃ தென்று மஃதுணரிற் பூவைமார்க, டே ற்றமுடனறமறங்கண்டெழின்மனைக்கோர்தீபமெனத் திகழ்வாரென்று மாற்றன்மிகுபுலவர்சொற்றகூற்றுகள்சிற்சிலவிங்ஙனறைவேனென்னை.. ஏற்றவறிவினர்தூற்றுரஃதிலார் தூற்றுதற்கோரேதுமுண்டோ..... *

☞ இதைக்குறித்து ௲௮௱௬௰-ம். ௮௨ ஒக்தோபர்மீ ௩௨ அச்சிடப்பட்ட சுந்திப்பிராஞ்சுதலங்களின் நூதன விளம்பரப் பத்திரிகையிலும் ஷெ மீ ௬௨ அச்சிடப்பட்ட ௭௧௨ நெம்பர் மொனித்தேரிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

சவராலுநாயகர் மெதாயில் பெற்றுக்கொண்டபோது கூறிய

பாடல்கள்.

தூய்ரான் துபுராய் குவர்னர்பேரில்

பொற்றகடெனு நன்மெதாயிலெற்கருளப் புதுவையம்பதியினுலயத்தின், முற்றநற்றவர் கற்றவர்துரைமார்கண் முறையொருங்கிலங்கு மிவ்வவைக்கோர், விற்றயங்கணியாய் மகுடசேகரனுய் விளங்குசெங் கோலனுய் விழைவோ, டுற்றதூய்ரான் துப்ராயெனுங் குவர்னரோங்கலினுபயதாளினுக்கும் .... *

கோதேலாண்டவர் முதலியவர்கள்பேரில்

மாமேவுவெயின்மணிகுயிற்றியொளிதருமிமையவான்முடிமிலைந்தணிசெயும்-மார்பிடைப்பொற்குருசணிந்துதவ நிதமோங்கமன்னு செங்கோல்பிடித்து-வளருனதசுவர்னபொற்பீடிகையின்மேவியிவ்வறியசிறியேனுரத்தில்-மாண்பொறிபொறித்தபொற்றகடணிந்தணிசெய்தவல்லமேற்ராணியாராந், தூமேவு நங்கொதேலென்னுமாண்டவரணிதுணைத்தாட்கும்வீரமுனிவன்- சொற்றதேம்பாவணியையச்சிட்டிவ்வவை நனிதுதித்திடவெனக்களித்த துப்பிமாமுனிவரிருதாட்டாமரைக்குமித்தூயவேதியர்கழற்குந்-சுகுணமீனுட்சிசுந்தரதேசிகற்குமணிதுன்னுகவி வாணருக்கும், பூமேவுசோலையப்பாசாமியென்னுநற்பூபற்கு மென்பாவினைப்-போதவு மகிழ்ந்த வானந்தராயப் பிரபல பூமான்றனக்குநல்ல-பொன்னுராஜேந்ரமகிபதிவலவனுக்குமென் புனிததாய்மாமனீன்ற -புதல்வனுநேய ஐயிலுநாயகற்குநற்போதமிகுசுகிர்தநாதப், பாமேவு வளளற்கு மன்பன் முத்துச்சாமி பாக்கியவுதாரற்கும் யான்-பன்னு பிரசங்கமதிலார்வ நனிகொண்டு பொற்பணியணிசெய் வலவனெனவிப்-பதிபுகழ்மலைக்குழந்தைப்பத்தனுலவ்வணி பண்ணுவித்தெற்களித்த-பண்பினர்தமக்கு நன்னன்றிவந்தனமிகப்பரவியஞ்சலிசெய்வனே.

☞ இவ்விசேஷங்களைக்குறித்து ௲௮௬௧.ம். ௮௨ மூவேன்மீ ௰௪ அச்சிடப்பட்ட ௫௯௰-ம். நெம்பர் மொனித்தேரைக்காண்க.

போந்தான் குவர்னர் மகாநாடுகண்டபோது கூறப்பட்ட
பாடல்கள்.

நல்லகாலமிப்பூமிக்கு வந்தது நாங்கள் செய்தவமும்பலிப்புற்றது....
அல்லல்தீவினையாவுமொழிந்திவணண்டுமெங்கட்கருஞ்செல்வமுற்றது
சொல்லருங் கனராஜகுலாதிப தூயநேயசம்போகதுரைத்தன.......
வல்லநல்லகுவர்னர்போந்தானெனுமன்னவன் புதுவைக்குவந்துற்றதே.

மதிவளர்போந்தானென்னு மன்னவரிவர்தாந்தாமென்.......
றதிதுதிமுழக்கியார்க்கு மரியதண்ணுமைமற்றைப்பூ.......
பதிகளையிவற்கொப்பாகப் பன்னுதல்தகாதகாவென்.........
றிதந்தருமுகமன்கூறி யேத்துந்தாளங்களமன்னு...........

திங்களின்மீதெழு செஞ்சரண்மாதருள் சேசுபிரானருளாற் - சீர்வளர்
நப்போலெயமெனு மிறைவன்றிருவுத்தரமேவிப், பொங்குதடம்
பணிவாவிகள்பொழில்பொலிபுதுவையெனும்பதியிற்-புகழ்பெறுகுவர்
னர் போந்தான் போந்தான்பூபதியாகவெனச், சங்கமுழங்கவருங்கன
யோகாதருமங்கிகழ்போகா - தாயினுமன்பெம்மீதுசெலுத்துந்தயைமி
குசெங்கோலா, மங்குலெனுங்கரனேதயை சூழ்மகுடாதிபனே யுழுனர்
வளமுற வறியவர்துயரற நரபதிவாழுதி வாழுதியே.............✻

☞ சூஅசுளு ஆூ தெசம்பர் மீ கஉ வ பரீசுபட்டணத்தில் அச்சிடப்பட்ட ரொவிதுய்மோந்துகொலோனியாலென்னும்புத்தகத்தில் அஅக எட்டில் இப்பாடல்கள்பிராஞ்சிற்பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

துப்பிளேக்சு குவர்னர்சிலைவைத்தபோது கூறப்பட்ட
பாடல்கள்

கட்டளைக்கலித்துறை,

முற்காலத்தொன்னர்க்கிடி யேறெனநின்ற மூரிமன்னர்.............
பிற்காலத்திலலையெனுஞ் சொற்பெருமனம்பேருலகைத்............
தற்காத்த துப்பிளேக்செனுமிந்த வேந்தனைத்தந்ததுநம்...........
தற்கால வேந்தலினிமேலொன்னார்க ணமக்கிலையே..............

மூளாச்சினங்கொண் டடங்காப்பகைவர் முடித்தலையைத்.....
தாளாற்றகர்க்குந்திறன்மன்னன் மாண்டமிக்தாரணியில்.....
மாளாதவனெனுஞ்சொற்கேற்ப துப்பிளேக்சுமன்னனிந்த....
வாளார்நப்போ லெயராஜாதிபனிடமன்னினனே...........

புறங்காட்டியோடும்படி யொன்னலார் பெரும்போர்க்களத்தில்......
உரங்காட்டுந் துப்பிளேக்செனுமிந்த வீரனெளிர்புஜங்கள்..........
மறங்காட்டுநெஞ்சந் திறங்காட்டுஞ்செங்கைவழங்கு நற்பொன்......
நிறங்காட்டுமாமுகம் பேரருள்காட்டிடு நித்தமுமே..............

மன்னுந் துய்ப்பிளேக்சுகான்மான்சுபதார்நவாபுடனே..............
மின்னுமுசாபர்சங்பக்தானொனும் பட்டமேவநன்கு...............
துன்னுமகாதிறஞ் சூழ்டில்லிபாஷாவுஞ் சூட்டவிவற்...............
கின்னும்பெருந்துதி யுண்டோ புவியிலிசைப்பதற்கே...............

வெண்பா.

சீரார்கரோன்முதனந்திவ்ய போந்தான்வணாயிற்...........
பாரார்குவர்னர்நாற்பத்தொருவ-ரோரும்..................
இன்னவர்கடம்மி லிரும்புகழ்பெற்றோ னெவனென்
றன்னவல்லோர்காண்கவிதை யோர்ந்து.................

கொச்சகம்.

உள்ளப ◌ நன்னலங்க ளொருங்கியற்றூர் பிறரொன்று...............
வள்ளல்நப்போலெயராஜன்மதித்துணர்ந்தே தன்ஞானப் ....
பிள்ளையெனும்போந்தானைப் பீடுறவிங்குய்த்ததனல்...............
தள்ளருஞ்சீர் துய்ப்பிளேக்சு தார்வேந்தைக்கண்டனமே...............

கட்டளைக்கலிப்பா.

தாரிலங்குமலையெனுந்தோளினன் றாழ்ந்திடாரைத் தறிக்குமொண்வாளி
னன், போரிலங்கு முயர்நாமவேலினன்போற்றும்வீரக்கழலணிகாலி
னன், சீரிலங்குபசும்பொற் செங்கோலினன் செப்யமாமுறை செப்பு ந
ன்னூலினன், எரிலங்குந்துப்ப்ளேக்செனு நாமம்பூண்டெங்கள்வேந்தெ
ன்றிலங்குமிவ்வேந்தலே....................................... ✳

விருத்தம்.

இலங்குநங் குலங்கட்கென்று மிடறுரு தினிதுகாத்த.................
வலங்கொண்மா குவர்னரென்னுமன்னரிற்சிறந்தவேந்தன்...........
துலங்குதுய்ப்பிளேக்சென்றியாருந்துதிக்க நல்லுருவாய்நின்ற........
நலங்கொளிம்மன்னன் சீர்த்திநாளு மேன்மேலும் வாழ்க.........

☞ இவ்விஷயத்தைக்குறித்து ௲௮௱௭௰௮ முலியேத்துமீ ௨௨ உ
அச்சிடப்பட்ட ௲௯௨ நெம்பர் மொனித்தெரிற் காண்க

லோது துரைபேரில்

நீதிமன்னர்க்கதிபதியே நீணிலத்தோர்க்காதரவே.........
வேதியரெலாம்புகழும் விற்பனனே புண்ணியனே.........
கோதகன்றலோதுதுரைக் கோமானே பாவலனென்.......
மீதிரங்கியருள்புரிந்தாய் மேன்மேலும்வாழுதியே.........

தஸ்கோனுகேர்துரை பேரில்

புண்ணியதஸ்கோனுகேனொனுஞ்சங்கப்புலவரிலோர் புலவனன்கு.....
பண்ணியலேசெக்கோதுப்பாதரொலானெனும்ப்ராஞ்சுப்பனுவலிந்த
மண்ணியன்றோர் மனமகிழ்வித்தறிவுணர்த்திமாசகற்றிவயங்குந்தூய
விண்ணியலுமின்பசுசமடைவதற்கு வழிகாட்டும் விளக்கமாமே.....

மின்னுசுடர்க்கெதிரான சுடரில்லையிறையவனல் விளம்பப்பட்ட.....
பன்னுமறைக்கெதிரான மறையில்லைதஸ்கோனகேர் பரிவிற்செய்த,
துன்னுபெருஞ்செயவீர சூரொலானெனும்புனித சுகுணன்காதை...
என்னுமுயர்நூற் கிணையாகிய நூருன்மற்றொன்றெவ்விடத்துமின்றே.

வளங்கொளணிபரீசுமன்னர் மாதவர்வேதியர்மறைநூன் வல்லோர்பல்
லோர்,களங்கமின்மேற்றாணியரோ_டிமேற்றிராணியருங்கருதினரும்
உளங்களித்துச்சிரமசைக்கதஸ்கோனகேர்துரையாமுயர்ந்தோன்செய்த
விளங்குமின்நூன் முன்னர்மற்றை நூல்களெலாஞ் சுடர்முனமின்மினி
யாமன்றே..................................*

நாவலர்நாவினுக்கினிக்குங் கேட்டவர்தஞ்செவிக்கினிக்கு நன்குணர்ந்த
பாவலர்தமனக்கினிக்கும்பாஸ்பிரனேயென்னு மெழிற்பதியிற்சீர்த்தி.
மேவமலாலோசனைச்சங்கத்துறு தஸ்கோனகேர் விளங்கச்செய்த....
பூவலயம் புகழ்ந்திடுலே செக்கோதுப்பாதரொலான் புனிதநூலே...

தெள்ளமுதோ நறும்பாகோ தீங்கனியோசெந்தேனோ......
உள்ளொளிருஞ்செஞ்சுடரோ ஒதறிஞர்மணிப்பூணோ.......
அள்ளுமணமாமலரோயாதெனயானோதுவன்சீர்.........
கொள்ளுநந்தஸ்கோனகேர் கோமான்செய் நன்னூலே.........

முலியேன் வேன்சோன் துரைபேரில்

சோசுவனைச் சலமோனையோபென்போனைத் தூயமோழிசனை நீர்துளி
க்கும்வானைப், பேசருந்தன்வெற்றியினாற் புத்திதன்னாற் பிழையிலா
மெய்யுரையாற்பிரிவிலாத, சேசுபரனருளானற் கொடையான்வென்று
திகழ்பரீசெனுநகரிற் சிறந்துவாழ்நம், நேசமுலியேன்வேன்சோன் து
ரையாம்பூபனீழிகால நன்கு நிலவிவாழ்க....................*

எஞ்ஞான்றுங்கலைகளுணர்ந் திலங்குமொமே ரொனும்புலவனிவன்றனெ
ன்ன, வஞ்ஞானவிருளகலப்பிராஞ்சுமன்னர் முகாம்புயங்களலறத் தூய
மெஞ்ஞானந் திகழ்தருதன்குலாம்புதியிற்பிறந்தென்றும் விளங்குமோ
ர்நற், செஞ்ஞாயிறனையமுலியேன் வேன்சோன் பூபனென்றுஞ் சிறந்
துவாழ்க....................................*

உலகொரு மூன்றுங்காக்குமுயர்பரனருளாலோங்கும்........
பலகலையாவுந்தூய டசுந்தமிழ்ப்பாவுமோர்ந்தங்.........
கலகிலாப்புகழ்சுமந்தே யறிஞர்நாவதனின்மேவி..........
யிலகிவாழ்முலியேன்வேன்சோனெனுந்துரையிதனைக்காண்க.

எஸ்கேர் துரைபேரில்

செல்லாரும்பொழிற் புதுவைமாநகரினன்னீதிசெலுத்துந்தூயா.....
எல்லாரும் புகழெஸ்கேர்துரையே சாதிப்பரிட்சையெனு நூலொன்று
வல்லாரும் பல்லாரும் வந்திக்கச் சிந்திக்கமகிழ்ந்து போற்றச்........
சொல்லாரு நீ செய்தச்சீட்டதைக்கண்டுள மகிழ்ந்தேன்சுகுணவானே.

முன்னூலாந் தொன்னூலுமூதறிஞரோதிய நன்முறைமை நூலும்...
பின்னூலுங் குலநூலும் பேசுபலசமயமதிற் பிறந்தநூலும்........
பன்னூலு முணர்ந்து நீ செய்சாதிப் பரிட்சையெனப் பகருமிந்த....
நன்னூலைப்பெற விரும்பாரிரும் பாரிலரும் புலமைநாடாதாரோ.....

புண்ணியதஸ்கோனுகேனுஞ்சங்கப்புலவரிலோர்புலவனன்குபண்ணி யலைசெக்கோதுப்பாதரொலானெனும்ப்ராஞ்சுப்பனுவலுக்குக்கண்ணி யவேன்சோன்முலியேன் கருதியெற்குவனைந்தபடிக்கவிகளோங்குந், த ண்ணியசெந்தமிழதனிற் சமைத்தேன் எஸ்கேர்துரையாந் தருமவானே

உழேன் சிசேதுரைபேரில்

இறைவரி விசாரணைக்கிங் கிலங்கதிபதியாய்வந்த
நறைபுகழ் உழேன் சிசேயாஞ் சற்குண துரையே நின்றன்
முறைவழா நெறியாற்கல்வி முதிற்சியா லுழுனர்க்குற்ற
குறையெலா மிரவியைக்காண் குளிரென வகலுமென்றே.

வந்தன நின்பாலெங்கள் வந்தனந் தந்தனம்பின்...............
இந்தனமென்னக் காய்ந்த விளங்கதிர் முடியைக்கொண்டு...........
வந்தனமிதனை யிப்பார்மன்னற்கு வழங்கி யெங்கள்.............
சிந்தனைமகிழ்வித்தென்றுஞ் சிறந்து நீ மேன்மேல்வாழ்க.........

கனிகளினினியசெந்தேன் கசிந்தெங்கு மூரும்பாகூர்
தனிலுழுதமிழப்பாவாணன்றன்மை நோக்காதவற்கு
நனியிடையூறுசெய்வோர்நாட்டிறைக்கதிபரானால்
இனியுழேன் சிசேயென்றன்னுனியம்பிடாதென்செய்வானே.

தெபாசன் குவர்னர்துரை

குஷ்டநோயாளிகளுக்குக்கட்டினமண்டபத்தைக்குறித்துக்கூறப்பட்ட

உலுத்தர்பத்தர்சல்லாபம்.

கொச்சகம்.

அணிதிரையின் கரையமர் சந்நாசிகுள்ந்தனிலிருக்கும்
பிணியர்களுக்காதரவாப் பேதையேன் சொலும்பாடல்
திணிமிகுசெந் தமிழ்ப்புலவர் செவிக்கினியாதாயினுமுன்
பணியணிதாட் கினிக்குமெனப் பாடுகின்றேன் மாமரியே.

உலுத்தன் கவி.

கருதரு மிக்கடற் கரையிலென்றுங்காணுக் கவின்பெறுமித்தேரிலுள் ள கன்னியார்காண், மருவுமிந்த வாலயத்தில்வாழ் வோரியாரிம்மண்டப த்திலுள்ள வரியார் நீயு மார்காண், பொருதிரையி னொலியடங்கப்பரனை யன்பாப் போற்றிவரு மிவரியாரிப்புதுமையெல்லாந், தெரிதர நீ யெ ன்றனுக்கு விபரமாகச் செப்புவாயுள்ளபடி செப்புவாயே........ ※

பத்தன் கவி.

தேரிலுள்ளகன்னியோ பரனையீன்றசெயமோட்ச ராக்கினியிச்சினகரத்தில், எர்பெறவாழ்பவர்லசாரொனுமர்ச்சீட்டரிலங்கு மிம்மண்டபமதனி லிருப்போ ரிந்தப், பாரிலுள்ள பிணியாளரியானுமன்னுன் பரவியிங்கு வந்திருப்போர் பசியால்நோயால், ஆர்துயரின் மூழ்குமெளியோர்கட ம்மையாதரிக்கும் புண்ணியர்களாகுமையா .... *

உலுத்தன் கவி.

புண்ணியரோவிவர்களல்லவல்லவிணுப்பொருளையெளியவர்க்கழித்துப் பூமிதன்னில், நண்ணுமெளியவராகத் தாமுமாகினுல நகைத்திடப்படு வோர்நாஞேவென்ருல்,எண்ணரியபொருளபடைத் தேன்றனவானென் றேயெத்திசையும்பேர்படைத்தேனிவரென்பெற்ருர்,கண்ணறியாக் க தியையிவரடைவா ரென்றுகழறுவைவயோவோகோவீண்கதையிதன்ரே

பத்தன் கவி.

அருந்தவோருண வில்லாருக் கரிய நல்லுணவாய் நோயில ....
வருந்துவோர்க் கருமருந்தாய் மனையிலார்க் கிடமாயெல்லாந்.........
தரும்பெருமன்புவாய்ந்த தாய்தந்தையிலார்க் கன்னுராய்ப்.........
பொருந்துமிப்புண்யர் பெற்றபுகழுனக்குண்டோ வையா...........

உலுத்தன்

இராகம் நாதநாமக்கிரியை தாளம் சம்பை.

புகழுனக்குண்டோவென்ற புல்லனே யெந்நாளும்.........
இகழுவாரெல்லோரு மெளியனை யென்றறிவாய்...........

பத்தன்

அறியாத மூடர்களா மவனையிகழ்வோர் கதியை ....
வறியபிணியாளர்விற்கும் வணிகனென வறிவாய்...........

உலுத்தன்

வணிகரிவரென்றுசொன்ன வறியா வோவெறியாகேள்.........
பிணியர்தமைக்காப்பதினற் பெருமையு முண்டோசொல்....

பத்தன்

சொல்லருநஞ் சேசுபரன்றுன்பவெளியவர்பே ாலே..........
நல்லுருவுற்ருரவனை நாமதித்தற்கன்ரே..................

உலுத்தன்

மதிப்பதென்னப் பெரும்பிணியில் வாடுகின்றபாவிகளைக்....
கொதித்ததட்டியோட்டிவிட்டாற் குவலயத்துக்கழகாம்......

பத்தன் கவி.

குவலயத்துக்கழகென்றிட் புதுவையிற் செங்கோன் முறையின்படியாண்ட குவர்னரொன்னுந், தவமலி தெபாசனந் நாள்கட்டிவைத்த தருமமடம் பெருமை பெறத்தக்கதாகப்; பவமகற்றுந் தீரியோஞ் சுவாமியென்னும் பண்ணவன் மேற்ராணியர்க்குப் பகுத்துரைக்க,நவமலிநம்மாண்டவர்தங்கண்காணிப்பில்நடத்தவேண்டிய முறையை நன்ருவெண்ணி..

இப்பதியை யாளுகின்ற துரைகட்கெல்லாமிந்நலமே நன்னலமென்றினி
தாக்கூறி, ஒப்பரியவேன்சாந்தெபோலென்பாரினுயர்சபையார் விசார
ணையினெழுங்கிற்சேர்த்தார், செப்பரியசேன்ழோசெப்சபையிலுள்ள
சிறந்தகன்னிமார்களு நற்றிறமையுள்ள, அப்பன் தூய்ரான்துபுராயென்
னுசொல்லு மரியகுவர்னேர் மதாமன்பின்மிக்க..................

நீட்டுபுகழ்மதாம் பிரியோன்மம்சேல்லக்ரான்ழ்திவ்ய குணமுள்ளம
தாமோன்பிளான்கான், மேட்டிமை சேர்மற்ற மதாமார்களும் மவ்வி
ண்ணுலகவிளைவறுக்கமிகுநோயாளர், நீடுகரமெனு நிலத்திற் பொருளை
வித்தா நீங்காமல் விரைப்பரிது நினக்கோகுற்றம், நாட்டி லெளியவர்க்
குதவிசெய்யாலுத்தா நானுரைக்கும்புண்ணியத்தை நன்றாக்கேளாய்..

இராகம் துசாவந்தி தாளம் ஆதி.

புண்ணியந்தேடாத மூடா நோயாளிகளை......................
எண்ணமறப் பேசலாமோடா.............................
விண்ணுலகானந்தசுக நண்ணுவோரொளியருன்போல்............
எண்ணுமுலுத்தர் நரகமண்ணைகளாவார்களடா...............

புண்ணியம்

நிறைசெல்வமுடையாரை நோய்துன்ப மணுகாதோ நினைத்ததெல்லா
ம்வருமோ, குறையாதோ நாளவர்க்கு மரணமென்றுங் குறுகாதோ வவர்
செல்வம், பிறரிடம்போகாதோ பிறந்ததோ வவரோடே..........
இறக்குமோ வதுகூடே யின்ன ழறியா யிக்கேடே................

புண்ணியம்

ஒப்பரிய குணத்தோர்க்கு மைம்பாதகத்தையு பதேசஞ்செய்யுமடா..
செப்பரிய துயர்க்கெல்லாந் தாயாகுமடா தீவினைக்கோர் செவிலியடா.
இப்பொருள்கொண்டோர்க் குறக்கமெப்பொழுது மில்லையடா........
அப்பொருளைக்கொடுப்பது தப்பிதமென் றிடுங்கேடா..............

புண்ணியம்

எத்தனைபேர் கையில் முன்னமிப்பொருளிருந்ததவரெல்லாரு மெங்கே
யடா, சத்தமின்றி யுன்னையது விட்டுப்போகாமுன்னமே தருமங்களைச்
செய்யடா, பித்தனேயுனக்குப் பொருளெத்தனை யுண்டாயினு நீ.....
யத்தனை யரிசியல்லா லித்தனையுமுண்பாயோடா-...................

புண்ணியம்

முன்னுரைத்தபுண்யவான்கள் காய் கனிநிழல் முற்றுமுதவியதல்லால்
தன்னையுமுதவுகின்றதாகிய தருக்கள் போற்றம்முடைய.............,
பொன்னையெல்லா முதவிப்பின் பூட்சியாலுழைத்திட்டேனும்.....,
இன்னுயிருதவியேனு மிடுக்கண்டீர்ப் போர்களடா ....

புண்ணியம்

ஓடியுலர்ந்த பயிர்க்கு நல்ல மழையை யுதவு மேகங்களைப்போல்.....
வாடிமெலிவோர்கட்டிமை யெந்நேரமுந்தேடிக்கொடுப்போர்களடா..

சாடுவெங்கோடையைத்தாங்கித் தானிழல்செய்யுமாலென்னப்.......
பீடுள்ளோர்தாம் வருந்தினு நாடுமெளியோரைக்காப்பார்............
புண்ணியம்

உலுத்தன் கவி.

ஒகோ விவர்கள் மோட்சத்துக்குரியோரென்ற யென்போலே........
ஆகாதேக மெடுத்தோர்க ளரியநரகுக்குரியரென்றுப்............
பாகாஞ்சுருதிதனி லென்போல் பவர்கள் நரகிற்புகுந்ததுண்டோ.....
வாகாங்கதியிலிவர்போல்வார் வாழ்ந்தாரென்று முண்டோசொல்......

பத்தன் அகவல்.

சொல்லுவேன்கேளாய் துற்குணலயனே - நல்லறமுடைய லசாரெனுந்
தூயோன், பொருண்மிகப்படைத்துப் புவியினிலென்றுந்-தெருளிலா
திருந்தவோர் செல்வனையண்டி, ஊழியனாகவுவந்து தன்றொழிலைத்-தா
ழ்வறச்செய்துதற்பரனடியைத், தோத்திரம்புரிந்துதுலங்கிடுநாளில்-மா
ற்றரும்பிணிகள் வந்தனவவற்குச், செல்வனுமிசமான்சீயெனக்கடிந்தே-
ஒல்லெனத்துறத்தி யோட்டியேவிட்டான், வறியனைப்பிணியால்
வாடியேமெலிந்துக் -குறியதாய் விரல்கள் குட்டநோயடைந்தே, உதவி
செய்திடுதற் கொருவருமிலதால் -பதியில்வாழந்தப் பாக்கியவான்பால்,
சென்று தன்னயனைச்செப்பியென்னைய-வின்றெனைவருத்துமிரும் பசி
நீங்க, உண்டுநீகழித்தவுச்சிட்டமெற்களித்தால்-மண்டுமுன்பாக்யம்வள
ர்ந்திடுமென்றே, இன்மொழிபுகலவெழுந்தவன் சீறித்-தன்னிடத்திருந்த
சங்கிலிநாயைப், பிடித்தவன்றன்னைப்பிடுங்கிடவிடுத்தான்-கடித்திடாதவ
ன்றன்காலிணைபணிந்தே, அன்புடன்சவரியார்புரிந்ததுபோ-லின்புடனன்
னுயிவனுடற்புண்ணை, நாவினலாற்றி நன்குபசரித்து-மேவியேவருநாள்
வெய்யவச்செல்வன், பொருளைவிட்டிறந்துபுகையெரிநரகில்-மருவியபே
யால்வாதனையடைந்து, பொன்னுலகினியபோகபாக்கியத்தை-மன்னிவா
ழபராமடிமிசையேறிக், குசாலுடனிருக்குங்குறையிலர்ச்சீட்டலசாரினை
க்கண்டுநாணிநின்றழுதே, ஒருதுளிதண்ணீருதவெனவிரந்தான்-எரிநரக
தனிலிதுசெயப்படுமோ, ஆதலாலிஃதையறிந்து நற்கதிக்குப்போதரவே
ண்டும்-புண்ணியஞ்செய்தே, ஆயிரத்தெண்ணூற் றறுபதாமாண்டி -
லேயவவுமாதமிருபத்திரண்டா, நாள்புதவார மிந்நற்பரன்றுயின் -
றுளிணைபணிந்துன்றருக்கினையொழித்துப், புற்பொருண்மயலைப்போ
க்கிநித்தியமா -நற்கதியடையநாடனின்கடனே ....*

உலுத்தன் கவி.

ஐயோபொருளாலிதைமறந்திவ் வரியபிணியர் தமையிகழ்ந்து ....
துய்யகுணபுண்ணியர்கடமைத்தூறிநிந்தை கூறியுன்னை ....
வெய்யகொடியனென விகழ்ந்தேன் வீயுமளவுமிதற்கழுது..........
பொய்யாம்பொருளை யவர்க்களித்துப் புண்ணியஞ்செய்துய்குவனே ..

☞ ௲௮௱௯௰௨ ௵ அவுமீ ௬கவ௨ அச்சிடப்பட்ட
௫௪ நெம்பர்மோனித்தேரில் இதன்விபரங்களைக்காணலாம்

சவராயலு நாயகரின் ஆசிரியராகிய

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்பேரில்

ஓதுதற்கருநூலியாவையுமுணர்ந்த வுணர்வினன்றிரிசிரகிரியாம்........
மேதகுபதியி லொளிதருஞானவிளக்கமாயடியவருளத்திற்..........
றீதுறுமவிச்சையாமிருள் சீத்துத்திகழுமெந்தேசிகனை............
கோதின்மீனாட்சி சுந்தரனருளாற் கூறுதமிழ்ஃதுளந்துணிந்தே.....*

விளங்குறு வெண்புகழ் வனைந்தமீனாட்சிசுந்தரப்பேர்.......
களங்கமில்தேசிகனென்பாற் கருணை நனிபுரிந்ததனாற்......
றுளங்குறுதேம்பாவணிக்குச்சொலத்துணிந்தேனுரைவிரித்து.
வளங்கெழு மவ்வருளிலையேல் வழுத்தலரிதரிதே.....*

முத்திக்குவித்தா முரிமனத்துக்காறுதலா....................
மெத்திக்கினும்பொருளையீகுவதாஞ்-சுத்தகலை..............
ஓதுகருணைமிகுமுத்தம வென்சற்குருதிற்.......................
கேதுசெய்குவன்கைம்மாறின்று..................................*

கற்றற்கெளிதாகக்காட்டியரும்பாடலெல்லாம்..............
பற்றச்செப்நற்குண வென்பண்ணவனு-முத்தமநீ.........
ஞானப்பொருள்வழங்கி நற்றருமஞ்செய்வதுபோற்.........
றானமுண்டோவிவ்வுலகிற்றான்..............................*

சீர்திகழ்வேதாவிநாயகவள்ளல் செகமெலாங்களிக்கநன்கியற்று.....
மோர்திகழ்மடம்போலியைக்கநீகண்ணினியையுமோவலதியைந்திடினும்
நார்திகழெம்மீனாட்சிசுந்தரமா னற்றமிழணியஃதுடைய..........
ஊர்திகழன்னங்கலைமகளொழித்தொண்டவர்முயற்றினுமுறுங்கொல்லோ

புவிமகளுக்கோர்திலகன் விநாயகமால்விருந்தர்விலாப் புடைக்கவூட்ட
அவிர்தரச்செய்சத்திரத்தை மீனாட்சிசுந்தரவென்னுசான்சொற்ற.....
கவிமுகிலீயாரகமாஞ்சுரத்துமறமுளைத்தீகைக் கனியவன்னார்.........
செவியதர்சென்றிடுமிதனுக்கிணைசுரஞ்செல்லாமுகிலைச் செப்பலாமோ

திருக்கிளருமருச்சுனமாறவப்பயனைக்காட்டவந்த சேயாம்நல்ல......
வுருக்கிளரும்விநாயகவேண்மயிலைதனிலினிதிழைத்தவொளிர்மடத்தின்
பெருக்கதனைப்புகழ்ந்துரைத்தமீனாட்சிசுந்தரநம் பெருமான்பாவைத்
தருக்குடனேகருதியன்றேசுரர்புலவரொனும்பெயரைத்தரித்திட்டாரால்

அத்திரம்போன்றொளிர்கணுமைநகிற்சுவட்டையணிந்த நம்பனடிபரா
வும், மித்திரங்கூர்வியாசநகர்விநாயகமால்புரிந்தவெழில் விளங்குமன்ன
சத்திரத்தினெடும்புகழைமீனாட்சிசுந்தரநஞ் சான்றோன்பாவாற்......
சித்திரமாவியம்புதிறங்கண்டுகுறுமுனிமலைவர்ய்த் திகைத்தான்மன்னோ

பொன்னாடும்புகழ்தருவிநாயகவேண்மயிலையிற்றான் பொலியச்செய்த
தென்னாடுசத்திரச்சீர்மீனாட்சிசுந்தரதேசிகன் றீம்பாவாற்...........
பன்னாடும்புகழநுவலருமையறிந்தேபயிலும்பண்பாற்றென்னாடே....
